# தூறல்

இனிமையானது......

Oct - Dec 2010
சாரல் 01 : 04



**எறும்புகளின் background தெரியாம...**

-ஹலோ மோகன்



## ஓட்டிசம்

தீர்வு கிடைக்குமா?



விஜய் - ராஸ்கல்!



**"டான்ஸ் தான் வாழ்க்கை"**

கமல் - இளைய மகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For Quality
ALWAYS FRESH

DATA FOOD MANUFACTURY INC.

சைவ உணவுகளின் சாம்ராஜ்யம்...

அனைத்து உணவையும்
உங்கள் ருசிக்கேற்ப
தாயக தரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



Phone: 416-297-8402
#9-585 Middlefield Rd., Scarborough, ON
85 Kennedy Road, Unit #31, Brampton

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THOORAL

**P.O. Box 4056**
**McCowan Square, 1235 McCowan Road,**
**Scarborough, Ontario M1H 0A4**
Tel : 416 451 3177
Fax : 416 273 7606
Web : www.thooralonline.com
Email : editorial@thooralonline.com

Chief Editor
**Rajmogan Selliah**

Managing Editor
**EN. ES. Sivalingam**

Sub Editors
**Brrindha Kathirvel - Sri Lanka**
**Manuventhan Sellathurai**

Media Co-ordinator
**Sinnaswamy Bashkar - Sri Lanka**

**Design & Concept**
**TNT Touch**

**Advertisements**
**TNT Touch**
P.O. Box 4056
McCowan Square, 1235 McCowan Road,
Scarborough, Ontario M1H 0A4
Tel : 416 451 3177
E-mail : tntshiv@gmail.com

**Disclaimer:** All Rights reserved. The Opinion / Views expressed by the contributors are their own and do not reflect those of the publisher.

The Publisher assumes no responsibility of any kind.

தூறல்
இனிமையானது...

## தூறலில் நனைந்திட முன்...

மக்கள் தோற்றுவிட்டார்கள் — 06
பரணி இலக்கியம் — 10
தூக்கமின்மை — 13
ஹலோ மோகன் — 14
ஓட்டிசம் — 18
மறியல் வீடு — 20
குரு அரவிந்தன் பக்கம் — 22
ரொமான்ஸ் உணர்வுகள் — 24
வினாவும் விடையும் — 27
தோல்வி மூலம் வெற்றி — 31
ஆழ் மனத்து அலைகள் — 39
என் மனவானில்... — 40
நினைவுகள் மலருகின்றன — 45
சொல்லாமலே... — 54
ஆர்த்தி பக்கம் — 56
மருத்துவ கேள்விகள் — 57
வடிவேலு கனடாவில் இருந்தால்... — 62




29 *3D TV வாங்கலையோ*



93 விளையாட்டு



35 சேரனின் பதிவுகள்



36 விண்வெளி விபத்து...
அதிர்ச்சி தரும் தகவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சிந்தனைகளும் சமுதாய மாற்றங்களும் !

“எங்கள் மரணங்களாவது மாற்றங்களைக் கொண்டுவருமா...”

மூன்று தசாப்த காலங்களுக்கு மேற்பட்ட தேசிய இனவிடுதலைப் போராட்ட வரலாறுகளில் கிடைத்த கசப்பான உணர்வுகளின் நினைவு நாட்களைத் தாங்கியபடி நிற்கின்றோம்.

கடந்துபோன வரலாறுகளை அன்றாட வாழ்வியலோடு நினைவுபடுத்திக்கொள்ளும்போது வாழ்வின் மீதான ஒரு பற்றுதலும், நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் பிறக்கின்றது.

இன்றைய நிகழ்காலத்தின் தேசிய நீரோட்டத்தில் கால்களைப் பதித்தபடி, கடந்து சென்ற வரலாறுகளின் சுவடுகளைத் திரும்பிப்பார்த்து, ஆக்கபூர்வமான செயல்பாடுகளையும்... விஞ்ஞான ரீதியிலான சிந்தனைகளையும் வளப்படுத்திக்கொண்டு அடுத்த தலைமுறைக்கான தளத்தை உருவாக்கிக்கொடுப்பது இன்றைய தேவை.

புலம்பெயர் சூழலில் வாழும் இன்றைய இளம் தலைமுறையினர் இருமொழிக் கலாச்சாரத்தில் வாழவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளவர்கள். சாதாரண நடைமுறை வாழ்க்கையில், கழிந்துபோகும் ஒவ்வொரு மணித்துளியிலும் இருமொழிக் கலாச்சாரத்தை தழுவியபடி வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பது மிகவும் கடினமான விடயம் என்பதை புரிந்துகொள்வதற்கான மனநிலை இன்று எம்மிடம் இல்லை. மெது மெதுவாக விலகிச்சென்று கொண்டிருக்கும் இன்றைய இளைய சமுதாயத்தின் மாபெரும் சக்தியை எம்மை நோக்கித் திசை திருப்பாவிடில் நாமே எமது இன அழிவுக்குக் காரணமாகிவிடுவோம்.

அந்த வகையில், எமது பாரம்பரியத்தின் தொன்மை குறித்த தேடல்களுடன், எமது சரித்திரத்தின் வேர்கள் பற்றிய சிந்தனைகளுடன், கடந்து சென்ற யுகங்களைத் திரும்பிப்பார்த்து அதன் வளத்தையும் செழுமையையும் நவீனமயமாக்கும் கனவுகளுடன் தூறலின் சாரல் உங்களுக்கு சமர்ப்பணமாகிறது.

தெளிவான நோக்கத்துடன்... சரியான புள்ளியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட தூறல், மாறிவரும் சூழலுக்கேற்ப தன்னை மாற்றிக்கொண்டு, வாசகர்களுக்குத் தேவையான விடயங்களில் அக்கறை கொண்டு, வெற்றியுடன் நேரிய பாதையில் அமைதியாக பயணிக்கின்றது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக...

அன்பு உள்ளம் கொண்ட **வர்த்தகர்களின் ஆதரவு...**


இமயம் தொடும் **எழுத்தாளர்களின் நேசம்...**

ஒன்றிணைந்து நிற்கும் **வாசகப் பெருமக்களின் அரவணைப்பு...**

இவைதான் தூறலின் அசைக்க முடியாத அத்திவாரம்.

நன்றி
பிரதம ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்கள் தோற்றுவிட்டார்கள்?

தேசிய இனவிடுதலைப் போராட்ட வரலாறுகளின் இறுதித் தாக்கமும், எதிர்த்தாக்கமும் சாதாரண அப்பாவி மக்களிடையே தான் சென்று முடிவடைகின்றன என்பது வரலாறுகள் கூறி நிற்கும் உண்மை. போராட்ட வடிவங்கள் வெற்றிபெற்றவையோ தோல்விபெற்றவையோ என்ற உண்மைகளுக்கு அப்பால் மக்கள் தோற்றுவிட்டார்கள் என்பதே உண்மையாகின்றது.

தேசிய இன விடுதலைப் போராட்டங்களின் குறிக்கோள்கள் முடக்கப்பட்டு, மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒரு இனத்தின் பூரணத்துவமான அழிவுக்கு அத்திவாரமிடும் செயல் வடிவங்கள் ஆதிக்கம் பெறுவதும், அவற்றுக்குத் துணைபோகும் குழுக்களின் செயற்பாடுகள் அதிகரிப்பதும் வரலாறுகளில் புதுமையான விடயங்கள் அல்ல.

இன விடுதலைப் போராட்டங்கள் அரசுக்கெதிரான பயங்கரவாதம் எனப்படுவதும், விடுதலைப் போராளிகள் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்படுவதும் இன்றைய சர்வதேச சமூகத்தின் மெருகுபடுத்தப்பட்ட புதிய சிந்தனைகளாகத் தெரிகின்றன. அதுமட்டுமில்லாமல் இல்லாத ஒரு சர்வதேச சமூகத்தை சிருஷ்டித்து அந்த மாயையை ஆயுதமாகப் பயன்படுத்திக் கட்டவிழ்த்து விடப்படும் பயங்கரவாத முறைதான் இன்றைய அரசுகளின் சமாதானத்திற்கான வழிமுறையாக உள்ளது.


ஒரு இன விடுதலைப் போராட்டம் வல்லரசுகளின் பலம் கொண்டு நசுக்கப்படும் போது பெறப்படும் இழப்புகள் பற்றியோ, மக்களின் அழிவுகள் பற்றியோ எவரும் கவனத்தில் கொள்ளாதது இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய துரோகத்தனம். மக்களின் உயிருக்கான பாதுகாப்பு, அவர்களுக்கான அடிப்படை வாழ்க்கைத் தேவைகள், கிடைக்கவேண்டிய ஜனநாயக உரிமைகள்... இது போன்ற வார்த்தை ஜாலங்களின் பயன்பாடு தான் அரசாங்கங்கள் தம்மை உலகிற்கு விற்க பயன்படுத்தும் இலகுவான வழிமுறைகள். நாட்டின் இறைமையையும், மக்களின் சுதந்திரத்தையும், தேசிய ஒருமைப்பாட்டையும் பேசிப் பேசியே ஆட்சியை தக்கவைத்துக்கொள்ளும் அரசாங்கங்கள் ஒடுக்கப்பட்ட இனங்களின் தனித்துவ அடையாளங்களிலோ அல்லது அவர்களுக்கான அடிப்படை உரிமைகளிலோ சற்றுமேனும் கவனமெடுப்பதில்லை.

ஒரு நாட்டில் இனம் என்ற ஒரு பிரிவின் அவசியம் தேவையில்லை என்றும், எல்லா இனமும் மனித இனமே என்ற வாதமும் ஆரோக்கியமான ஒரு விடயமாக இருந்தாலும் இந்த இனங்கள் அடிப்படையில் ஒற்றை நிர்வாகத்தின் கீழ் தரப்படுத்தப்படுவதில்லை என்பதே யதார்த்தமாகும். ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் அவர்களுக்கான ஒரு பொது மொழி, பொருளாதார தன்நிறைவு, கலை–பாண்பாட்டுக் கோலங்கள், பாரம்பரிய பிரதேசம் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் தனித்துவமாக இருக்கின்றன. இந்த தனித்துவமான உணர்வுகளுக்கு சரியான அங்கீகாரம் கிடைக்காத போது மக்களிடையே வெறுப்பும் புரட்சியும் வெடிப்பது தவிர்க்கமுடியாததாகின்றது. அதுவே ஒரு இன விடுதலைப் போராட்டத்தின் விதையாகவும் மாறிவிடுகின்றது.

ஒரு இறுக்கமான தேசிய இனத்தின் விடுதலை இலகுவில் மழுங்கடிக்கப்படமாட்டாது என்ற யாதார்த்த நிலையை தசாப்த கால வரலாறுகள் சுட்டிக்காட்டி நிற்கின்றன. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IN அவை!

மனிதன் அருந்தும் Drink இற்கும் வயதிற்குமான தொடர்பு.....

## Drink Vs Age



....3 4....22 23....50 51....70 71....

" Drinkகிலே ஆடி அடங்கும் வாழ்க்கையடா..."



## என்ன கலர் கார் பாதுகாப்பானது?

நாம் எவ்வளவு கவனமாகக் கார் ஓடினாலும், எதிரில் வருவோர் மோதாதவரை எல்லா நிறக்கார்களும் பாதுகாப்பானதாகத்தான் இருக்கும். ஆனால் சில உளவியல் நிபுணர்களின் கருத்தின்படி, நீலம் அல்லது மஞ்சள் நிறக்கார்கள் தான் அதிகம் பாதுகாப்பானவை என்றும், சாம்பல் நிறக்கார்கள் மிகமோசமானவை என்றும், வெள்ளை, தூயமஞ்சள் அல்லது கடும் மஞ்சள் என்பன பொதுவாகச் சிறந்தவை எனவும் கூறப்பட்டுள்ளது.

*கடன்பட்டு கார் வாங்கினாலும் கலரை மறவாதேங்கோ!!*



## 'மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே' என்பதே பழமொழி.

ஆனால் உண்மையிலே இது 'மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்காதே' என்பதே சரி. மண்குதிர் என்பது ஆற்று நீரின் சுழற்சியால் ஏற்படும் மணல்மேடுகள். இது பாறை போல் காட்சியளித்தாலும், அதன் மீது ஏறினால் அது நீரில் அமிழ்ந்து விடும். எனவே மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்கக் கூடாது. குதிர் என்பது குதிரை என திரிந்து விட்டது.

*இதைவிடுத்து மண்ணில குதிரையை செய்து கிழத்குத்தனமா... ஆத்தில போறது மாதிரி யோசிச்சு இருக்கிறிங்க...*

## உங்க பல்லு, உங்க நாக்கை கடிச்சதுண்டா?

பசி வந்தால் எதையாவது வாயினுள் போட்டுக்கடிக்கத் துணிந்துவிடுகிறோம். அவ்வாறு கடிக்கும்போது, முன்பக்க பற்களால் 24 கிலோ அழுத்தம் வரையிலும், கடைவாய் பற்களால் 90 கிலோவிலிருந்து 120 கிலோவிற்கு மேலானவரையிலும் அழுத்தம் கொடுத்து கடிப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

*"அப்ப... ஆட்களைக் கடிக்கிறத அளக்க ஏதாவது கருவி இருக்கா...."*



டொலர், யூரோ, பவுண்ட்ஸ் போன்றவற்றிற்கு குறியீடு இருப்பதுபோல் ரூபாய்க்கு குறியீடு இதுவரை இருக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து இந்திய அரசால் இக்குறியீட்டினை வடிவமைப்பதற்கான போட்டி ஒன்று நடத்தப்பட்டது. இதற்கான பரிசுத்தொகை 2.5 இலட்சம் ரூபாய்கள். இப்போட்டியில் வெற்றிபெற்றிருக்கிறார் உதய் குமார். இவரது குறியீடு இறுதிமுடிவிற்காக தெரிவு செய்யப்பட்ட 5 குறியீடுகளில் இருந்து தெரிவானது.

*எத்தன குறியீடு கண்டு பிடிச்சாலும், கையில காசு இருக்கனுமே!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# TR தத்துவம்ஸ்

எமன் சிரித்தால் 80தில் மரணம்
வுமன் சிரித்தால் 20தில் மரணம்

தண்ணி அடிச்சா வீக் ஆகும் பாடி
பொண்ணு சிரிச்சா வளரும் தாடி

ஆடிக்கு பின்னால் ஆவணி
தாடிக்கு பின்னால் தாவணி

நண்பர்கள் ஒண்ணுக்குள்ள ஒண்ணு
பிரிஞ்சா காரணம் பொண்ணு

*"ஏ டன்டனக்கா... ஏ டனக்குனக்கா..."*

**Napoleon...**
"The world suffers a lot. Not because of the violence of bad people, But because of the silence of good people!"

**Einstein...**
"I am thankful to all those who said NO to me Its Because of them I did it myself.."

**Abraham Lincoln...**
"If friendship is your weakest point then you are the strongest person in the world"

*யார் யார் என்ன சொன்னாலும்,
சிலர் திருந்தவே மாட்டாங்க...!*




## டாம் இற்கு பதில் ஏஞ்சலினா!

அண்மையில் திரைக்கு வந்த ஆக்ஷன் த்ரில்லர் படம் 'சால்ட்'. இந்தப் படத்தில் முதலில் டாம் குரூஸ்தான் நடிப்பதாக இருந்தது. ஆனால் டாம் குரூஸ் ஏற்கவிருந்த 'சால்ட்' பாத்திரம் ஏற்கனவே அவர் நடித்து உலகம் முழுவதும் வெற்றி பெற்ற 'மிஷன் இம்பாசிபிள்' படத்தின் வேடம் மாதிரி இருந்ததால் அதில் நடிக்க மறுத்து விட்டார் டாம். அத்துடன் வேறு சில முன்னணி நடிகர்களும் இந்த வேடத்தில் நடிக்க தயக்கம் காட்டினர்.

இதனால் கொலம்பியா பிக்சர்ஸ் நிறுவனத்தார் அந்த மைய பாத்திரத்தில் ஒரு பெண்ணை நடிக்க வைத்தால் என்ன? என்று ஒரு யோசனையை முன் வைக்க அந்த வேடத்தில் நடிக்க அனைவரும் ஒரு மனதாக தேர்ந்தெடுத்தவர் ஏஞ்சலினா ஜோலி.


இப்படத்தை இயக்கியிருக்கும் பிலிப் நாய்ஸ், 'கிளியர் அன்ட் பிரசன்ட் டேன்ஜர்' என்ற மாபெரும் வெற்றி படத்தை இயக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

*ஏஞ்சலினா...நீ ஒரு "அஞ்சா..." லீனா...*



## யார் இந்தக் குழந்தை?

25ம் பக்கத்தில் பார்க்கவும்.




## பாலத்திற்கு கீழே நடந்தது என்ன?

பிரபல ஹாலிவுட் நடிகை ரீஸ்விதர் ஸ்பூன், கனடாவில் வாழ்ந்து கொலை செய்யப்பட்ட இந்திய வம்சாவளிப் பெண் ரீனா விர்க்கின் கதையை படமாக தயாரிக்கிறார்.

1997-ம் ஆண்டு கனடாவிலுள்ள சானிச் நகரத்தைச் சேர்ந்த ரீனா விர்க், எட்டு பேர் அடங்கிய கும்பலால் அடித்து கொலை செய்யப்பட்டு கிரேக் ப்லொவர் பாலத்திற்கு அடியில் கிடந்த செய்தி ஊடகங்களால் பரபரப்பாக பேசப்பட்டது.

ஒரு சிறிய விடலை பட்டாளத்தால் மிரட்டி, பயமுறுத்தி கொலை செய்யப்பட்ட ரீனாவிற்கு அப்போது வயது 14. அந்த இளைஞர்களின் இருட்டு உலகை வெளிச்சம் போட்டு காட்டியது "அண்டர் தி பிரிட்ஜ்" என்ற ரீபெக்கா காட்பரி என்பவரால் எழுதி வெளியிடப்பட்ட புத்தகம். அந்த புத்தகத்திலுள்ள சம்பவங்களை எந்த விதத்திலும் சிதைக்காமல் அப்படியே திரைவடிவம் கொடுக்க இருக்கிறார்கள் ரீஸின் தயாரிப்பு நிறுவனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி.எஸ்.சிவநாயகமூர்த்தி

# பரணி இலக்கியத்தில் சில துளிகள்

தமிழ் மொழியிலுள்ள சங்ககால இலக்கியங்களை அவை கூறும் பொருள்களுக்கேற்ப அவற்றை அகப்பொருள் இலக்கியங்களென்றும், புறப்பொருள் இலக்கியங்களென்றும் வகுத்துக் கூறப்பட்டுள்ளது. அறம், பொருள், இன்பம், வீடு என்று சொல்லப்படும் உறுதிப் பொருட்கள் நான்கினில், இன்பத்தைப்பற்றிச் சொல்வது அகம் என்றும் மற்றைய மூன்றையும் பற்றிச் சொல்வன புறம் என்றும் கூறப்பட்டுள்ளது. தமிழில் காதலை வகைப்படுத்திக் கூறும் நூல்களுக்கு அகப்பொருள் நூல்களென்றும், வீரத்தை வகைப்படுத்திக் கூறும் நூல்களுக்குப் புறப்பொருள் நூல்கள் என்றும் பெயர். புறப்பொருள் நூல்கள் சங்ககாலத்திலும், அதன் பின்னரும் தோன்றியுள்ளன. அவற்றுள் பரணி என்பது சங்க காலத்திற்குப் பின்னர் தோன்றிய ஒருவகைப் பிரபந்த இலக்கியமாகும். போர்க் களத்தில் ஆயிரம் யானைகளை வென்று மீண்ட சிறந்த வீரன் ஒருவனைத் தலைவனாக வைத்துப் பாடப் பெறுவது பரணி இலக்கியமாகும்.இதனை

ஆனையாயிரம் அமரிசைவென்ற

மானவனுக்கு வகுப்பது பரணி

என்னும் இலக்கண விளக்கநூற்பா கூறுகின்றது. முதலில் வீரன் மீதும், வீரமன்னன் மீதும் தோன்றிய பரணி பின்னர் கடவுள் மீதும் தோன்றுவதாயிற்று. பரணி இலக்கியத்தில் கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடுபாடியது, கோவில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, இந்திரசாலம், இராசபாரம்பரியம், பேய்முறைப்பாடு, அவதாரம், காளிக்குக் கூளி கூறியது, போர் பாடியது, களம் பாடியது என்னும் பதின்மூன்று உறுப்புகள் உள்ளன. பரணி இலக்கியங்களாக கலிங்கத்துப் பரணி, தக்கயாகப்பரணி, அஞ்ஞாசைப் பரணி, மோகவதைப்பரணி, இரணியவதைப்பரணி, திருச்செந்திற்பரணி, பாசவதைப்பரணி, மோகனாவதைப்பரணி ஆகியவை விளங்குகின்றன. பரணி இலக்கியங்களில் முதன்மை பெற்று விளங்குவது கலிங்கத்துப் பரணி, இதனை இயற்றியவர் சயங்கொண்டார் என்பவராவார். பரணிக்கோர் சயங்கொண்டார் என்பதன் மூலம் இவரின் திறமையை அறியலாம். ஓசை நயமும், கற்பனை அழகும், சொல்வளமும், பொருள் நயமும், சந்த இனிமையும் ஒருங்கே அமைந்து விளங்கும் இலக்கியம் கலிங்கத்துப் பரணியாகும். காலத்தால் முற்பட்ட இக்கலிங்கத்துப் பரணியில், முதற் குலோத்துங்கனின் படைத் தலைவனாகிய கருணாகரத் தொண்டைமான், கலிங்கவேந்தன் அனந்தபதுமன் மீது படை எடுத்துச் சென்று அவனை வென்று நிகழ்த்திய வீரத்தைப் பற்றி விரித்துக் கூறப்படுகிறது. இவ்விலக்கியத்தில், கடைத்திறப்பு காதற்சுவையும், களம்பாடியது வீரச்சுவையும் தோன்ற அமைந்துள்ளன.

விடுமின் னெங்கள் துகில் விடுமினென்று முனி

வெகுளி மென்குதலை துகிலினைப்

பிடிமின் என்ற பொருள் விளைய நின்றருள் செய்

பெடைநலீர் கடைகள் திறமினே

இப்பாடலில் தூங்குகின்ற பெண்களை அவர்கள் இராக்காலத்தை கழித்த முறைதோன்ற அழைத்துக் கதவைத் திறக்குமாறு வேறு சில பெண்கள் கூறி எழுப்பும் காட்சி கூறப்பட்டுள்ளது. இதுவே கடைத்திறப்பு என்னும் பகுதிக்குரிய நிகழ்ச்சியாகும். இப்பரணி இலக்கியத்தில் தூங்கும் பெண்களை எழுப்பும் பெண்கள் எவ்வாறு துயிலெழச் செய்கின்றனர் என்பது கூறப்படுகிறது. அப்பெண்கள் ஏனைய பெண்களை எழுப்பச் செல்லும்போது இரவு நேரம் பள்ளியறையில் தத்தம் கணவன்மார்களுடன் பேசிக் கொண்டிருந்த பெண்களுக்குத் திடீரென்று கோபம் உண்டாகிறது. அதனால் அப்பெண்கள் வெறுப்புக் குறிப்புடன் வேகமாக எழுந்து நடக்கின்றனர். தம்மீது கோபம் ஏன், வெறுப்பு ஏன் என்று கணவன்மார்களுக்கு ஒன்றும் புரியவில்லை. போனால் போகட்டும் என்று எண்ணி அக்கணவர்களால் சும்மாவிருக்கவும் முடியவில்லை. அதனால் அக்கணவர்கள் இருந்தபடியே அப்பெண்களின் ஆடைகளை எட்டிப் பிடித்து இழுக்கின்றனர். கணவர்களின் அச்செய்கையால் அப்பெண்கள் நாணம் அடைந்தவர்களைப்போல் ஆடையை விடுங்கள், விடுங்கள் என்று கூச்சல் இடுகின்றனர். அவ்வாறு கூச்சல் இடுகின்ற அப்பெண்களின் முகங்களில் வெட்கக் குறியும், வார்த்தையில் வெடுவெடுப்பும் காணப்பட்ட பொழுதும், அவர்களின் மனம் கணவர்களின் அச்செய்கையால் இன்பக்கடலில் மூழ்கித் திளைக்கிறது. அதனால் அப்பெண்கள், ஆடையை இன்னமும் கொஞ்சம் இழுங்களேன், இழுங்களேன் என்னும் பொருள் தோன்ற இருந்த இடம் விட்டு நகராமலேயே நின்றனர். இவ்வாறு ஊடலால் இன்பம் அனுபவித்த பெண்கள் பலர். அப்பெண்களின் அச்செய்கை தோன்ற எழுப்பும் பெண்கள் அவர்களை அழைத்துக் கதவைத் திறக்குமாறு கூறுகின்றார்கள். இதனை விளக்கும் இத்தாழிசைப் பாடலில் ஊடலால் உண்டாகும் இன்பத்தின் உச்சநிலையைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

பின்வரும் தாழிசைப்பாடலில் வீரர்களின் வீரமும் கற்பனையழகும் சிறந்து காணப்படுகின்றன. வானம் மின்னியிடித்துப் பெருமழை பெய்ய அதனால் ஆற்றில் நுரைகளுடன் வெள்ளம் பெருகும் நிகழ்ச்சியைப் போர்க்களத்து நிகழ்ச்சியில் பொருந்த வைத்துக் கூறியிருப்பது கவியின்பம் அளிக்கும் கற்பனையாகும்.

"விளைகனல் விழிகளின் முளைக்கவே

மினலொளி கனலிடை யெறிக்கவே

வளைசிலை யுருமென விடிக்கவே

வடிகணை நெடுமழை படைக்கவே

குருதியின் நதி வெளி பரக்கவே

குடையினம் நுரையென மிதக்கவே


கரிதுணி படுமுடல் அடுக்கியே

கரையென இருபுடை கிடக்கவே"

போர்க் களத்தில் சோழமன்னனின் படை வீரர்களும், கலிங்க மன்னனின் படை வீரர்களும் கடும்போர் புரியத் தொடங்குகின்றனர். வீரர்கள் சினம் மிக்கவர்களாகி ஒருவரை ஒருவர் தாக்குகின்றனர். அவ்வாறு தாக்கும்போது அவர்களின் கண்களிலிருந்து சினத்தீ உண்டாகிறது. அந்தத் தீ மின்னலைப் போல ஒளி வீசுகின்றது. வீரர்கள் தம் கையிலே பிடித்த வில் நாண்களைத் தெறிக்கின்றனர். அவ்விற்கள் இடிபோல் முழக்கம் செய்கின்றன. அம்பு மழை பெய்கின்றது. போர்க்களத்தின் வெளியிடங்களிலெல்லாம் இரத்த வெள்ளம் பெருகுகின்றது. புதிதாகப் பெருகி வரும் வெள்ளத்தில் நுரைகள் மிகுந்து வருவதைப்போல போர்க் களத்தில் பெருகிய இரத்த வெள்ளத்தில் இறந்து கிடக்கும் அரசர்களின் வெண்கொற்றக் குடைகள் நுரைகளாக மிதந்து வருகின்றன. பெருகி வரும் ஆற்று வெள்ளத்தின் கரைகள்போல அங்கே வெட்டுண்டு கிடக்கும் யானைகளின் கால், உடல், துதிக்கை முதலிய உறுப்புக்களெல்லாம் ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டு இரத்த வெள்ளத்தின் இரு கரைகளாக அமைந்து கிடக்கின்றன. இவ்வாறு போர்க்களத்தின் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளமை, யுத்த நிலையை நேரில் பார்ப்பது போன்றுள்ளது. இவ்வாறு காதல் சுவையும், வீரத்தின் சிறப்பும் விளக்கப்பட்டுள்ளது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம். ஜி. ஆர் - சிவாஜி - ஜெமினி







தமிழ் சினிமாவில் வரலாற்றிலே வாள் வீரர்கள் வெள்ளித்திரையை ஆக்கிரமித்த ஆண்டு 1958. இந்த பொற்காலத்தின் மன்னர்களான எம்.ஜி.ஆர் சிவாஜி, ஜெமினி மூவரும் முறையே நாடோடி மன்னன், உத்தம புத்திரன், வஞ்சிக்கோட்டை வாலிபன் ஆகிய மூன்று பிரமாண்டமான திரைப்படங்களில் அந்த ஆண்டில் நடித்திருந்தார்கள்.

ஒரு முழு ஆண்டையும் மூன்று வீர சாகச வாட்சண்டைப் படங்கள் - தொடர்ந்து ஆக்கிரமித்து ஆதிக்கம் செய்தது. மூன்று படங்களுமே நூறு நாட்களுக்கு மேல் ஓடி வசூலை வாரிக் குவித்தது.

இம்மூன்று படங்களில் மூலக் கதைகளும் பிறமொழிகளில் இருந்து பெற்றவையாகும். முதல் இரண்டு படங்களில் கதைகள் பிரசித்திபெற்ற பிரெஞ்சு நாவலாசிரியர் அலெக்சாண்டர் தூமாவின் புகழ்பெற்ற சரித்திர நாவல்கள், தூமாவின் 'மான்டி கிஸ்தோவின் மன்னன்' (The Count of Monte Cristo) வஞ்சிக்கோட்டை வாலிபனாகவும், அவரது 'மூகமூடி மனிதன்' (The man in the Iron Mask) உத்தம புத்திரனாகவும், பிரபல பிரித்தானிய நாவலாசிரியர் அந்தனி ஹோப் எழுதிய ஸெண்டாவின் கைதி (The Prisoner of Zenda) நாடோடி மன்னனாகவும் - தமிழ்த் திரைக்கு ஏற்றவாறு மாற்றமடைந்தன.

# முதல் மேடையேற்றம்!



ஒரு சிறுவனின் தயார் ஹென்னா ஹில், மேடைக்கு அருகில் அந்தச் சிறுவனை உட்கார வைத்துவிட்டு வழக்கம்போல ஒரு பாடலைத் தொடங்கினார். ஆரம்பத்தில் எல்லாம் சரியாகத்தான் இருந்தது. ஆனால் சில நிமிடங்களில் திடீரென்று அவருடைய குரல் கரகரப்பாகி விட்டது. சரியாகப் பாடமுடியவில்லை. தொண்டை அடைத்துப்போய்விட்டது. அவர் திணறுவதைப் பார்த்த ரசிகர்கள் அது ஒரு நகைச்சுவை நிகழ்ச்சி என்று நினைத்து கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். மேடையில் இருந்து அழுகையோடு இறங்கினார் ஹென்னா.

இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த சிறுவனுக்கு எதுவுமே புரியவில்லை. அம்மா ஏன் அழுகிறார் என்று திகைப்போடு பார்த்துக்கொண்டிருந்தான் அந்த ஐந்து வயது சிறுவன்.

அப்போது ஒருவர் அச்சிறுவனை "பாடுவாயா" என்று கேட்க, ஆமாம் என்று உட்சாகமாகத் தலையாட்டினான். அதுவரை மேடை ஓரத்திலிருந்து பார்த்து ரசித்துக்கொண்டிருந்த அச்சிறுவன் மேடை கூச்சத்தை ஒதுக்கிவிட்டு பாடத்தொடங்கினான்.

அரங்கில் இருந்த அனைவரும் சிறுவனின் அழகான, மென்மையான குரலுக்கு கட்டுப்பட்டார்கள். பாடி முடித்ததும் கைதட்டல்கள் நெடுநேரத்திற்கு ஒலித்துக்கொண்டிருந்தது.

வெறுமனே கைதட்டுவதோடு நிறுத்தாமல் காசுகளை அள்ளி மேடை மீது எறிந்தார்கள். அதைப்பார்த்து சிறுவன் உற்சாகமடைந்து "கொஞ்சம் பொறுங்கள், இந்தக் காசுகளைப் பொறுக்கிக்கொண்டு அதன்பிறகு பாடுகிறேன்" என்று கீழே குனிந்தான். இதுவும் அரங்கிலிருந்தவர்களுக்கு வேடிக்கையாகத் தோன்ற, குலுங்கி குலுங்கிச் சிரிக்க ஆரம்பித்தார்கள்.

அந்தச் சிறுவன் வேறு யாரும் அல்ல... சார்ளி சப்ளினே!
சார்ளி சப்ளினின் முதல் நிகழ்ச்சியே அவர் தாயின் கடைசி நிகழ்ச்சியாகிவிட்டது.

# 750 வாரங்களைக் கடந்துள்ள திரைப்படம்




ஷாருக்கான், காஜோல், அம்ரிஷ் பூரி, அனுபம் கேர் நடித்து ஒக்டோபர் 1995ல் வெளிவந்த ஹிந்தித் திரைப்படமான தில்வாலே துல்ஹனியா லேயாஜெங்கே, 2010 பெப்ரவரி இல் வெற்றிகரமான 750வது வாரத்தைத் தொட்டு தொடர்ந்து மும்பாய் தியட்டரில் ஓடிக்கொண்டிருக்கிறது.

இத்திரைப்படம் இந்தியாவில் மாத்திரம் 580 மில்லியன் ரூபாய்களையும், வெளிநாடுகளில் 175 மில்லியன் ரூாய்களையும் இதுவரை வசூலித்துள்ளது. ஒக்டோபர் 2009 இல் இத்திரைப்படம் 15வது வருடத்தைத் தொட்டது.

2003 நவம்பரில் பிரித்தானியாவில் வெளியிடப்பட்ட The 1001 Movies You Must See Before You Die நூலில் பட்டியலிடப்பட்ட இரண்டு ஹிந்தித் திரைப்படங்களில் இதுவும் ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கமின்மை

மருத்துவ கலாநிதி **இ.லம்போதரன்**

தூக்கம் இல்லாத பிரச்சனை இப்போது போல பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரும் இருந்திருக்கின்றது. இன்றும்கூட பலர் தூக்கம் இல்லை என்ற காரணத்துக்காக மருத்துவ உதவியையும், மருந்துகளையும் நாடுகின்றனர். இவ்வாறு மருத்துவ உதவியை நாடுகின்றபோது தூக்கமின்மைக்கான காரணம் என்னவாக இருக்கலாம் என மருத்துவர் ஆராய்கின்றனர். அப்போது கேட்கப்படுகின்ற முக்கியமான கேள்வி உங்கள் மனதில் உள்ள பிரச்சினை என்ன என்பதாகும். எமது வாழ்க்கையில் பல்வேறு காரணங்களுக்காக நாம் முயல்கின்றபொழுது ஏற்படுகின்ற மன அழுத்தமே (Stress) தூக்கமின்மைக்கு முக்கிய காரணமென்று இன்றைய மருத்துவம் கூறுகின்றது.

தூக்கமின்மைக்கு என்ன காரணம் இருக்கலாம் என ஏறத்தாழ ஆயிரத்து ஐநாறு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த புலவர் ஒருவரும் ஆராய்ந்திருக்கின்றார். இவர் பெயர் விளம்பி நாகனார். இவர் பாடிய நூல் நான்மணிக்கடிகை. இது நூறு வெண்பா பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலிலும் மணியான நான்கு கருத்துக்களை புலவர் தருகின்றார். அதனால்தான் இதற்கு நான்மணிக்கடிகை என்று பெயர்.

திருக்குறள், நாலடியார் உள்ளிட்ட பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் எனப்படும் பதினெட்டு நீதி நூல்களில் இதுவும் ஒன்று. அந்நூல்களைப்போலவே இதுவும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டதாயினும் இதிலுள்ள கருத்துகள் எக்காலத்திற்கும் எல்லோருக்கும் பொருந்துவதாகும். இலக்கியங்களுள் உலகப்பொது நூல் என்று ஒரு வகையீடு செய்தால் அதில் எமது தமிழ் நூல்கள்தான் பெருமளவில் இடம்பெறும். இவ்வாறான ஒரு தேர்வு முயற்சியில் இலக்கியவாதிகள் யாரும் இதுவரை ஈடுபட்டதாகத் தெரியவில்லை.

இந்த நான்மணிக்கடிகையில் இருந்து ஒரு பாடலை மாதிரிக்குப் பார்ப்போம்.

கள்வம்என் பார்க்குந் துயில் இல்லை, காதலிமாட்டு

உள்ளம் வைப்பார்க்குந் துயில் இல்லை-ஒண்பொருள்

செய்வம் என் பார்க்குந் துயில் இல்லை, அப்பொருள்

காப்பார்க்கும் இல்லை துயில்

மற்றவர்களின் பொருளைக் கபடமாகக் கைப்பற்றும் எண்ணம் உள்ளவர்களுக்கும் தூக்கம் இல்லை. காதலின் வசப்பட்டு தனது காதலியையே நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் துயில் இல்லை. பொருள் தேட வேண்டும் என்ற ஓர்மத்துடன் விடாமுயற்சியில் உள்ளவர்களுக்கும் துயில் இல்லை. தேடிய பொருளைப் பேணிப் பாதுகாப்பதிலேயே கண்ணாயிருப்பவர்களுக்கும் துயில் இல்லை.

இப்பாடலில் உள்ள கருத்துக்கள் எக்காலத்துக்கும் எவ்விடத்திற்கும் பொருந்துவதாய் அமைந்திருப்பதைக் கவனித்திருக்கும் நீங்கள் இவற்றில் மறைந்துள்ள நகைச்சுவையைத் தவறவிட்டிருக்க மாட்டீர்கள். ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களே! உங்கள் உள்ளத்தில் தோன்றும் கேள்விகளை ஹலோ மோகன் பார்வைக்கு அனுப்பி வையுங்கள்.

**Email: hellomogan@thooralonline.com**
**Fax: 416 273 7606**



# ஹலோ மோகன்


## கேள்வி - பதில்




ஸ்ரீதரன் - அரோரா

**பல வருடகாலமாக Factory இல் வேலை செய்யும் எனக்கு எப்படி Leadership ஐ வளர்ப்பது என்று தெரியவில்லை?**

Leadership Skill என்பது ஒருவரின் ஆளுமை வளர்ச்சியின் அடிப்படைகளைக் கொண்டது. வீடு மற்றும் சமுதாய மட்டத்தில் இருந்து உருவாகும் இது வாழ்வியல் முன்னேற்றத்தின் அத்திவாரம். அன்றாடம் வீதியோரங்களில் காணும் Gull பறவைகளை அவதானித்துப்பாருங்கள். அவை தமக்குத் தேவையான உணவுகளை எத்தனையோ தடைகளின் மத்தியில் சேகரிக்கின்றன. அவதானிக்க வேண்டிய அனைத்து விடயங்களையும் உன்னிப்பாகக் கவனித்தபடி, 360 பாகையில் தம் கவனத்தை முழுமையாகச் செலுத்தி தம் கடமையைச் செய்து கொண்டிருக்கின்றன. அதேபோல் உங்களைச் சுற்றி நடக்கும் அனைத்து விடயங்களிலும் பூரணமான தகவல்களைப் பெற்றுக் கொண்டு உங்கள் கடமையை செவ்வனே செய்து கொண்டிருங்கள்... Leadership தன்னால் தொடர்ந்து வரும்.



கோ. சந்திரன் - வெலஸ்லி-பார்லிமென்ட்

**நாற்பதைத் தாண்டிணா நாய்க் குணம் என்கின்றார்களே ஏன்?**

நாற்பதுக்கு பிறது நாய் மாதிரிக் குலைத்துக் கடிக்கிறதுதான் காரணம். மனிதனின் உண்மையான ஆயுள் காலம் 40 வருடங்களாகத்தான் இருந்ததாம். கடவுளிடம் போய் ஆயுளை அதிகரிக்கும் படி கேட்க கடவுளும் நாயின் ஆயுளைக் குறைத்து 20 வருடத்தை மனிதனுக்கு கொடுத்தாராம். இப்படி அந்த நாய்க் குணத்தைப் பெற்ற மனிதன் சும்மாவா இருப்பான் 60 வயதிற்கும் ஒரு ஐடியா போட்டான். 60 வயதுக்கு மேல் எந்த உயிரினம் தன் ஆயுளைக் கொடுத்துதவியது என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.

சித்தார்த் கார்த்திகேசு - மார்க்கம்

**"எறும்புகளைப் போல் சுறுசுறுப்பாக வாழ்" என்பார்கள். இந்த எறும்புகள் அப்படி என்னதான் செய்கின்றன?**


ஒருங்கமைக்கப்பட்ட சமூகக் கட்டமைப்புக்களைக் கொண்ட எறும்புகளின் வாழ்வியல் முறை எம்மை வியக்க வைக்கின்றது. 10,000 க்கும் மேற்பட்ட இன வகைகளைக் கொண்ட இந்த எறும்புகள் பிரிவு பிரிவாக ராணி எறும்பின் கட்டுப்பாட்டில் வாழ்கின்றன. ஒரு எறும்பின் குடியிருப்பில் (colony) ஒரு ராணி எறும்பு (queen), ஆண் எறும்பு (நிச்சயமாக King அல்ல), வேலையாட்கள் (workers), காவலாளிகள் (soldiers) என்று நான்கு விதமான எறும்பு வகைகளைக் காணமுடியும். பெண் எறும்பின் ஆட்சியில் கட்டுப்பட்டு வாழும் ஆண் எறும்பு இனப்பெருக்கத்திற்கு மட்டுமே பயன்படும் ஒரு சோம்பேறி எறும்பாகவே தன் வாழ்நாளைக் கழிக்கும்.

அத்துடன் இதன் ஆயுள் காலம் ஒரு சில மாதங்கள் மட்டும் தான் (கொடுத்து வைத்த எறும்பு...do then die). 30 வருடங்கள் வாழும் ராணியின் வேலை இனத்தைப் பெருக்குவது மட்டும் தான். உணவுகளைச் சேகரித்து, அனைத்து எறும்புகளுக்கும் வாழ்விடம் கொடுப்பது வேலையாட்களின் தொழில். அனைத்து எறும்புகளையும் பாதுகாக்கும் தொழில் காவலாளியினது. அவரவர் வேலையை அவரவர் பார்ப்பது போல, ஒழுங்கு முறையில் தமது தொழிலை ஒவ்வொரு எறும்பும் விசுவாசமாய்ச் செய்ய, ஒரு ஒழுங்கான சமுதாயக் கட்டமைப்பு உருவாகின்றது. மனிதனைப் போல குறுக்கு வழியில் சிந்திக்கும் திறன் இல்லாததால் ஆட்சிக் கவுப்புக்கோ அல்லாவிடில் சதி முயற்சிக்கோ இடமேயில்லை. தமது உடல் எடையை விட 50 மடங்கு சுமையினை சுமக்கக் கூடிய எறும்புகளின் பலம் மனிதனின் பலவீனம். சமூகக் கட்டுப்பாடுகள், ஒழுக்க நெறிகள், காவலாளிகளின் உயிர்த் தியாகம் மற்றும் தமது வாழ்விடத்தை தமக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கும் இயல்பு போன்ற பல விடயங்கள் எறும்புகளின் வெற்றிக்கு காரணமாக அமைகின்றன.

இதற்கு பின்னும் எறும்புகளின் background தெரியாம அவற்றை உதாரணத்திற்கு எடுத்து சுறுசுறுப்பையும் கடின உழைப்பையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று இனி கதை சொல்லாதீங்க... கொஞ்சம் எறும்புகளோட உட்கார்ந்து யோசிச்சுப் பாருங்க புரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சரண்யா சோதி – *பம்பலப்பிட்டி*

**ஈழத்தில் நவீன ஓவியத் துறைக்கு சரியான அடையாளம் கிடைக்காதது பற்றி உங்கள் கருத்து என்ன?**

ஈழத்தில் நவீன ஓவியத்துறையின் முன்னேடியாக இருந்த ஓவியர் மாற்கு (1933 - 2000) "ஓவியத்தைப் பார்த்துப் பழக்கப்பட்ட பரிச்சயம் தமிழ் மக்களுக்கு இருப்பதாகத் தோன்றவில்லை..." என்று கூறியிருந்தாலும், இன்று உலகளாவிய ரீதியில் பல நவீன ஓவியக் கலைஞர்களை உருவாக்கி சரித்திரம் படைத்தவர். அவரது மாணவர்களில் பலர் நவீன ஓவியத்துறையில் புதிய பரிணாமங்களை உருவாக்கி வருவது எமக்குப் பெருமை தரும் விடயம். சமுதாய சிதைவுகளில் சிக்கியிருந்த இனத்தின் மாறுபட்ட தேடல்கள், முற்போக்கான கலை வடிவங்களுக்கு சரியான அடையாளம் கொடுக்காவிடினும் சமூகத்தைப் பிரதிபலிக்கும் ஆரோக்கியமான கலை வடிவங்கள் ஒரு போதும் அழிந்து விடுவதில்லை என்பதற்கு ஓவியர் மாற்குவின் அர்ப்பணிப்பு ஒரு சிறந்த உதாரணம். அடையாளங்களை மட்டுமே எதிர்பார்த்து ஒரு கலை வடிவத்தை சிருஷ்டிக்க முடியாது என்பது யதார்த்தமாகிறது.



அஞ்சலா – ரொரண்டோ

**உலக நாயகன் கமலின் வாரிசுகள் கமலுக்கு பெருமை தேடிக்கொடுப்பார்களா?**

ஷ்ருதி கமல்ஹாசனின் திறமைகள் பல கோணங்களில் வெளிப்படுகின்றன. ஆனாலும் வெறும் ஷ்ருதியின் திறமைகள் என்று பார்த்தால் திரைப்படத் துறையில் அவர் கமலிடம் படிக்க வேண்டிய நிறைய விடயங்கள் உள்ளன. அக்ஷரா கமல்ஹாசனின் இனிங்ஸ் இப்போது தானே ஆரம்பித்திருக்கிறது.

மணிவண்ணன் - ஸ்காபுரோ

**இந்தக் காலப் பிள்ளைகளோட கதைக்க முடியல்ல...?**

இந்தக் காலப் பிள்ளைகளால் புதுப்பிக்கப்பட்ட சமன்பாடு இது. வேறு என்னத்தைக் கூறுவது.

| | | |
|---|---|---|
| No Study | = | Fail |
| Study | = | No fail |
| No Study + Study | = | Fail + No Fail |
| No Study + Study | = | No Fail + Fail |
| Study (No + 1) | = | Fail (No + 1) |
| ∴ Study | = | Fail |

தேவன் - ஸ்ரோவில்

**தாயகத்தில் வாழும் உறவுகளுக்கு நேரடியாகவா அல்லது அமைப்புகள் மூலமாகவா உதவுவது நல்லது?**

யார் மூலம் உதவி செய்கின்றோம் என்பது விடயமல்ல. அவை சரியான விதத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்குப் போய்ச் சேருகின்றனவா என்பதில் கவனமாக இருங்கள். சீனப் பழமொழி ஒன்று உள்ளது..... "பசியாய் இருப்பவனுக்கு மீனைக் கொடுப்பதை விட தூண்டிலைக் கொடுத்தால் அவன் பசியை நிரந்தரமாகத் தீர்க்க வசதியாக இருக்கும்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதைத்தான் எதிர்பார்த்தோம்!

தூறல் இனிமையானது... பெயரிற்கேற்றபடி இனிமையான பல ஆக்கங்களைக் கொண்டுள்ளது. சென்ற இதழில் சிந்தனைப் பூக்கள் பத்மநாதனின் ஆக்கம் மிஸ்ஸிங். என்ன காரணமோ? தூறல் தொடர்ந்து தூற வாழ்த்துக்கள்.

தமிழ்ச்செல்வி — ரொறன்ரோ

இளையராஜாவின் மேடை நிகழ்ச்சி ஒன்றில் நடிகர் கமலஹாசன் கூறியிருந்த ஒரு கூற்று, "கலைஞர்களை கௌரவிக்கத் தவறியவன் தமிழன் என்ற இழிச்சொல் பாரதியாரை கௌரவிக்கத் தவறியதில் ஏற்பட்டது. ஆனால் இன்று அந்த பழி நீங்கிவிட்டது" என்றார். தூறலும் பல்வேறு எழுத்தாளர்களை கௌரவிக்கிறது. அந்த வகையில் இன்னும் புதிய எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க உதவும் என்று எதிர்பார்க்கிறேன்.

செந்தில் - மார்க்கம்

வித்தியாசமான ஆக்கங்கள். வித்தியாசமான சஞ்சிகை. ஆண்களுக்கும் பெண்களுக்கும் டிஷ்யும் டிஷ்யும்... உண்மையான உண்மை. வாழ்த்துக்கள்.

குமார் — ஓஷாவா

குரு அரவிந்தனின் 'ஊக்கமது கைவிடேல்'
Simply Superb!

வரதா — ரொறன்ரோ

நான் சிறுமியாக இருக்கும்போதே எனக்கு கே. எஸ் பாலச்சந்திரன் அவர்களைத் தெரியும். எனது தாயார் அவரது நாடகங்கள் எதனையும் தவற விடமாட்டார். அது மறுஒலிபரப்பு ஆனாலும் சரி, இதன் ஒலிநாடாக்கள் விற்பனையானாலும் சரி... அவரது "என் மன வானில்..." மறைந்த என் தாயை நினைவு படுத்தும் பசுமையான நினைவலைகள்...

தீபா — கொழும்பு

# முரளி...ஒரு கல்லூரி மாணவன்!



நடிகர் முரளியின் மரணச் செய்தி பலருக்கு அதிர்ச்சி.

என்றும் இளமை மாறாத கல்லூரி மாணவனாகவே இறுதிவரை வலம் வந்த முரளி இன்று எம்மிடம் இல்லை என்பது நம்ப முடியாத உண்மை. "ஒரு கல்லூரி மாணவனை இழந்து வாடுகிறோம்" என்று இணையத்தளங்கள் புலம்பி விட்டிருந்தன.

தனது முதல் படத்திலேயே ரசிகர்களை தம் பக்கம் இழுத்தவர் நடிகர் முரளி. ஈர்க்கக்கூடிய பார்வை, அழகிய புன்னகை... யார் இவர் என்று தன் முதல் படத்திலேயே கேட்க வைத்தார். கே.பாலசந்தரின் கவிதாலயா நிறுவனம் தயாரித்து, அமிர்ஜான் இயக்கிய பூவிலங்கு, முரளிக்கு முதல் படம். இந்த படம் முதலில், கன்னடத்தில் முரளியின் தந்தையால், முரளி நடிக்க எடுக்கப்பட்ட படம். அதைத் தான் தமிழில் ரீமேக் செய்தார்கள்.

பூவிலங்கு மிக பெரிய வெற்றியடையவே பல படங்கள் முரளிக்கு ஒப்பந்தமானது. இங்கேயும் ஒரு கங்கை, புதியவன், புதிர், இளங்கன்று, அந்தஸ்து, பகல் நிலவு, கீதாஞ்சலி, துளசி என்று பயணம் தொடர்ந்தது.

பல புதிய இயக்குனர்களின் முதல் பட நாயகனாக முரளி இருந்தார். மிக மிக எளிய மனிதராக இருந்தமையே பலருக்கு ஏணியாக அமைந்தது. பெரும்பாலும் அவை வெற்றிப்படங்களாக அமைந்தது தான் மிகப்பெரிய சிறப்பு. புது வசந்தம் - விக்ரமன், காலமெல்லாம் காதல் வாழ்க - பாலு, இதயம் - கதிர், பகல்நிலவு - மணிரத்னம், மண்ணுக்குள் வைரம் - மனோஜ்குமார், வட்டக்குடி இரணியன் - வின்சென்ட், பாலம் - கார்வண்ணன், காதலே நிம்மதி - கௌதமன், பூமணி - களஞ்சியம், தினந்தோறும் - நாகராஜன், வளையல் சத்தம் - ஜீவபாலன் என்று பட்டியல் நீளும்...

முரளியின் மகன் கதாநாயகனானதைத் தொடர்ந்தே அவர் திரையுலகிற்கு வந்து கால் நூற்றாண்டுக்கு மேல் ஆனதை உணர முடிந்தது. எப்போதும் அவர் குறித்து, தவறாக ஒரு செய்தியை படித்ததில்லை. சிறந்த நடிகர், சிறந்த குடும்பத் தலைவர், சிறந்த மனிதராகவே அவர் இவ்வுலகை விட்டுச் சென்றிருக்கிறார்.


அதற்கு உதாரணம், தான் சார்ந்துள்ள துறையில் அவரது வாரிசாக அவரது மகனையும், மருத்துவக் கல்லூரி மாணவியாக அவரது மகளும்...

முரளியின் தந்தை கன்னடர் என்றாலும், அவரது தாய் ஒரு தமிழ்ப் பெண். இதனால் பிறந்தது பெங்களூர் என்றாலும் சுத்தத் தமிழராக இருந்தவர். ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான போராட்டங்களின்போது கன்னட திரையுலகின் எதிர்ப்பையும் மீறி கலந்து கொண்டு தனது உணர்வைப் பதிவு செய்தார்.

**பானா காத்தாடி** - மகன் நடித்த முதல் படம் - முரளியின் கடைசிப் படம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டிசம்
## Autism

**Autism** (Autism Spectrum Disorders - ASD) என்பது மூளையின் முக்கிய செயற்பாடுகளான பேச்சுத்திறன் (Communication Skills) மற்றும் சமுதாயத் தொடர்பு (Social Interactions) போன்றவற்றுக்குரிய பகுதிகளின் விருத்தியை பாதிக்கும் ஒரு சிக்கலான குறைபாடாகும். வேகமாகப் பரவிவரும் இக்குறைபாடு வட அமெரிக்காவில் 20,000 மேற்பட்ட குழந்தைகளைப் பாதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

Autistic என்று அழைக்கப்படும் இவ்வகைக் குழந்தைகள் தமக்குள்ளேயே ஒரு உலகை உருவாக்கி அதனுள் தமது உணர்வுகளையெல்லாம் முழுமையாக அர்ப்பணித்து தம்மைச் சூழ உள்ள உலகை உணரத் தெரியாதவர்களாக வாழ்ந்து வருவார்கள்.

இக்குறைபாட்டினால் பாதிக்கப்பட்டவர்களின் மரபணுக்களில் இயற்கை வடிவத்திற்கு மாறான சில வித்தியாசங்கள் இருப்பதும், அந்த மாற்றங்கள் பல்வேறு விதமாக இருப்பதும் சமீபத்தில் இடம்பெற்ற ஒரு சர்வதேச ஆராய்ச்சி மூலம் தெரிய வந்துள்ளது.

இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் Nature என்னும் மின்வலை சஞ்சிகையில் வெளியாகியிருந்தது. DNA என அழைக்கப்படும் மரபணுக்களின் சில பகுதிகள் குறைவாக அல்லது சில பகுதிகள் கூடுதலாக அமைந்திருந்தால் அது மூளையின் செயற்பாடுகளைப் பாதிக்கும் என்றும், இதுவும் இந்தக் குறைபாடு ஏற்படுவதற்கான ஒரு முக்கிய காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

"இந்தக் குறைபாட்டின் மூல காரணத்தை அறிந்து சிகிச்சை வழங்குவதன் மூலம் இதனால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது" என இந்த விடயம் தொடர்பான ஆராய்ச்சிகளில் ஈடுபடுபவர்களில் ஒருவரான ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகப் பேராசிரியர் Tony Monaco குறிப்பிட்டுள்ளார்.

ஓட்டிசம் தொடர்பான ஆராய்ச்சிகளை கனடா, அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய இடங்களில் நடத்திக் கொண்டிருக்கும் ஆராய்ச்சியாளர்கள் இந்தக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள 996 ஐரோப்பிய வம்சாவழியினரின் ஆதார அணுக்களையும், இந்த குறைபாட்டினால் பாதிக்கப்படாத 1,287 மக்களின் ஆதார அணுக்களையும் எடுத்து ஆராய்ந்துள்ளனர்.

இந்த ஆராய்ச்சியின் பின்னர் "ஓட்டிசம் குறைபாட்டின் பாதிப்புக்கள் ஒரே மாதிரியாக இருந்தாலும், அவை ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கும் மரபணுக்களில் காணப்பட்ட மாற்றங்கள் வித்தியாசமாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது" என Sick Kids வைத்தியசாலையில் பணியாற்றும் சிரேஷ்ட அதிகாரியான Stephen Scherer குறிப்பிட்டுள்ளார்.

தற்போது கனடாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆராய்ச்சிகள் மரபணுக்களில் ஏற்படும் மாற்றங்களை இனங்காணுவதன் மூலம் இந்தக் குறைபாட்டினால் பாதிக்கப்படும் குழந்தைகளில் குறைந்தது 10 வீதமானவர்களுக்காவது நிவாரணம் வழங்க முடியும் என்று எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த நோயை ஆரம்ப கட்டத்தில் இனங்கண்டு சிகிச்சை அளிப்பதன் மூலம் இந்த நோயினால் பாதிக்கப்படும் சிறுவர்கள் கூடுதலான நன்மையைப் பெறுகின்றனர் என Vincent Du என்ற மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த மரபணுக்களில் ஏற்படும் மாற்றங்கள் பரம்பரையில் இருந்து வந்தவையாகவும் இருக்கலாம் அல்லது இடையிட்டு வந்தவையாகவும் இருக்கலாம். இடையிட்டு ஏற்பட்ட மாற்றங்களாக இருந்தால் சம்பந்தப்பட்ட சிறுவர்களுக்குப் பாரதூரமான பாதிப்புகள் ஏற்படாது இருக்கும். Fragile X போன்ற பரம்பரை பரம்பையாக கடத்தப்படும் மரபணு சம்பந்தப்பட்ட விடயங்களாக இருந்தால் மிகவும் சிக்கலானதாகவே அமைந்திருக்கும்.

மரபணுக்களில் ஏற்படும் எந்த விதமான மாற்றங்கள் இந்தக் குறைபாட்டை ஏற்படுத்துகின்றது என்பதை சரியாக கண்டுபிடிப்பதன் மூலம் இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மூன்று மாதக் குழந்தையாக இருக்கும் பொழுது அல்லது ஆறு மாதக் குழந்தையாக இருக்கும் பொழுது இந்த நோய்க்குரிய அறிகுறிகளைக் கண்டுபிடித்தால் பெரிய அளவில் இதன் தாக்கத்தை கட்டுப்படுத்தும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கின்றது. அத்துடன் ஓட்டிசம் பற்றிய ஆராய்ச்சியில் இது மிகவும் பெரிய விடயமாகவும் கருதப்படும்.


இந்த ஆராய்ச்சிகள் உலகில் உள்ள பல பெற்றோர்களின் நம்பிக்கையை அதிகரித்தாலும் பெருந்தொகையான குழந்தைகள் இந்த மருத்துவப் பரீட்சைக்கும், சிகிச்சைக்கும் நீண்டகாலம் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதுவரை Autism குழந்தைகளின் தேவைகளை அறிவோம். சமுதாயத்தில் உள்ள யாவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவோம். முடிந்த உதவிகளை, ஆலோசனைகளை வழங்குவோம்.●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.முத்துலிங்கம்

# மரியல் வீடு



றிக் பாஸ் என்பவர் அமெரிக்க எழுத்தாளர். இவரை நான் மூன்று தடவை சந்தித்திருக்கிறேன். பழகுவதற்கு அருமையானவர். இவருடைய சிறுகதைகள் அமெரிக்க சிறந்த கதைகளில் தெரிவாகியிருக்கின்றன. இவர் எழுதும் சிறுகதைகள் இயற்கையோடு சம்பந்தப்பட்டவை. மிகவும் நுட்பமாக எழுதப்பட்ட இந்தச் சிறுகதைகளை நான் திரும்ப திரும்ப படிப்பதுண்டு. இயற்கையோடு ஒட்டி இவர் வாழ்வதால் இவருடைய வாழ்க்கை சாகசம் நிறைந்ததாகவும், கேளிக்கை தன்மையுடையதாகவும் இருக்கும். கலேனா ஜிம் பற்றி இவர் எழுதிய சிறுகதை என்.கே மகாலிங்கம் மொழிபெயர்ப்பில் வெளிவந்த "இரவில் நான் உன் குதிரை" சிறுகதை தொகுப்பில் உள்ளது. இவருடைய ஆகச் சிறந்த படைப்புகளில் இதுவும் ஒன்று.

கலேனா ஜிம்முக்கு ஐம்பது வயதிருக்கும். கேளிக்கைப்பிரியர். ஒரே நேரத்தில் பல பெண்களை வைத்திருப்பார். அமெரிக்காவின் ஐடஹோ மாகாணத்திலிருந்து கனடா காட்டுக்குள் களவாகச் சென்று வேட்டையாடுவதில் விருப்பம் கொண்டவர். கதை சொல்லி இளவயதுப் பையன். அவனுக்கு கலேனா ஜிம் குரு மாதிரி. இருவரும் கனடா காட்டுக்குள் களவாக நுழைந்து விட்டார்கள். ஜிம் ஒடுக்கமான பாதையில் வேகமாக ஜீப்பை ஓட்டுகிறார். திடீரென்று பெரிய மூஸ் மான் ஒன்று பாதையில் புகுந்து ஜீப்புக்கு முன் நேராக ஓடுகிறது. ஜிம்முக்கு என்ன பிடித்ததோ வாகனத்தை பையனிடம் கொடுத்துவிட்டு அடுத்த கணம் ஜீப்பின் கூரையில் ஏறிக்கொள்கிறார். பையனும் மிருகத்தின் பின் வேகமாக ஓட்டுகிறான். என்ன நடந்ததென்று ஊகிப்பதற்கு முன்பாக படீரென்று ஆகாயத்திலிருந்து பாய்ந்து மூஸ் மான் மீது சவாரி செய்கிறார் ஜிம். பையன் திகைத்துப் போகிறான். மூஸ் மான் அவரை உதறி விழுத்தப் பார்க்கிறது. அவர் தொங்கிக்கொண்டிருக்கிறார். கடைசியில் ஓர் இடத்தில் அவரை மூர்க்கமாக கீழே தள்ளிவிட்டு மான் மறைந்துபோகிறது.

விலா எலும்பு முறிந்துபோய் வேதனையில் முனகிக்கொண்டு ஜிம் விழுந்து கிடக்கிறார். அவரை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு வீடு திரும்புகிறான் கதைசொல்லிப் பையன்.

சமீபத்தில் இந்தக் கதையை ஞாபகமூட்டும் சம்பவம் நடந்தது. ஓர் அமெரிக்கப் பெண் ஆப்கானிஸ்தானில் தொண்டு வேலை செய்துவிட்டு திரும்பியிருந்தார். ஆப்கானிஸ்தான் பெண்களுக்கு ஏதாவது உதவுவதுதான் அவர் நோக்கம். பெண்கள் வெளியே போகமுடியாது. வீட்டிலிருந்தபடியே வருமானம் வரக்கூடிய தொழிலை அவர்களுக்கு கற்றுத் தரவேண்டும். அதற்கு பொருத்தமானது தேனீ வளர்ப்புத்தான். மரத்தினால் செய்த நாலு தேன்கூட்டு பெட்டிகள்தான் மூலதனம். பல பெண்கள் இதை வைத்துப் பிழைத்தார்கள். அதில் ஒரு பெண் சொன்னது சுவாரஸ்யமானது.

> *"என்னைச் சுற்றிய கட்டுப்பாடுகளின் காரணமாக... தேனீக்கள் எனக்காக உலகத்தை பார்த்து வருகின்றன..."*

ஜிம்முக்கு ஒரு மகன் இருக்கிறான், வயது 19. அவன் ஒருவனைக் கொலை செய்துவிட்டு சிறையில் ஆயுள் தண்டனை அனுபவிக்கிறான். ஜிம் மகனைப் பற்றி கதைப்பதில்லை. ஒரேயொரு முறை "இப்பொழுது என் மகன் என்ன செய்துகொண்டிருப்பான்" என்று சொல்லியிருக்கிறார்.


தனது வயதுக்கு மீறிய சாகச வேலைகளை ஜிம் செய்தார். தன் மகனைப்பற்றியே எந்த நேரமும் நினைத்துக்கொள்ளும் ஜிம் உண்மையில் தன்னுடைய 19 வயது மகனின் வாழ்க்கையை அவனுக்காக வாழ்ந்துகொண்டிருந்தார். கதையில் பெரிதாக அதுபற்றி சொல்லவில்லை, வாசகர்கள்தான் யூகிக்கவேண்டும்.

"நான் இந்த நாலு சுவருக்குள் வாழ்கிறேன்." என்னைச் சுற்றி உயரமான மதில்கள், அதில் ஒரேயொரு ஓட்டை. அதன் வழியாகத் தேனீக்கள் காலையில் வெளியே போகும், மாலையில் திரும்பும். அவை மரங்களையும், மலைகளையும், ஆறுகளையும் பார்க்கும். விதவிதமான நிறங்களுள்ள பூக்களின் மேல் உட்கார்ந்து தேன் சேகரிக்கும். அந்த தேனை பிழிந்து சொட்டு எடுக்கும்போது எனக்கு தேன் தெரிவதில்லை, முழு உலகமும் தெரியும். தேனீக்கள் எனக்காக உலகத்தை பார்த்து வருகின்றன.'

கலேனா ஜிம் தன் மகனுடைய வாழ்க்கையை வாழ்ந்தார். இந்தப் பெண்ணின் வாழ்க்கையை தேனீக்கள் வாழுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணாங்கட்டி என்ன செய்யும்?



சாது பெரிதாக எதுவும் சாப்பிடுவதாகத் தெரியவில்லை. அனேகமாகப் பழங்களைத்தான் சாப்பிடுவது வழக்கம். அன்று புதிதாக ஆச்சிரமத்திற்குச் சேவை செய்ய வந்த சீடன்தான் பழத்தட்டுடன் அவரிடம் வந்தான். அவர் பழங்களைச் சாப்பிடும்போது அதை வியப்போடு பார்த்துக் கொண்டு நின்றான். சாது சாப்பிடுவதை நிறுத்திவிட்டு அவனை நிமிர்ந்து பார்த்தார்.

'என்னப்பா அப்படிப் பார்க்கிறாய், நீ இன்னும் சாப்பிடவில்லையா?' என்றார்.

'உங்களிடம் ஒரு சந்தேகம் கேட்கலாமா?' என்றான் சீடன்.

'நிச்சயமாக, சந்தேகம் பொல்லாதது, அதை உடனேயே நிவர்த்தி செய்துவிடவேண்டும், இல்லாவிட்டால் அது மனிதரையே அழித்துவிடும், கேள் மகனே' என்றார் சாது.

'நீங்கள் இந்த திராட்சைப் பழங்களைச் சாப்பிடுகிறீர்களே, அது மனிதருக்குத் தீங்கு விளைவிக்குமல்லவா?' என்றான் சீடன்.

'பழங்கள் சாப்பிடுவது எனக்குத் தவறாகத் தெரியவில்லையே' என்றார் சாது.

'அப்படி என்றால் திராட்சைப் பழத்தில் இருந்து வடித்தெடுக்கும் சாறுதானே வைன் என்னும் பானம், அதை அருந்தக்கூடாது என்று ஏன் எல்லோரும் உபதேசம் செய்கிறார்கள். அதை அருந்தினால் மட்டும் ஏன் தீங்கு விளைவிக்கும் என்கிறார்கள்?' என்றான் சீடன்.

'உண்மைதான், எதுவுமே வேறு உருவம் பெறும்போது, அல்லது அதன் தன்மை மாறும்போது அதனால் ஏற்படும் பலாபலனும் மாறிவிடும். திராட்சைப் பழத்தின் சாற்றைப் புளிப்படைய வைத்து அதன் தன்மையை மாற்றுவதால் அது மனிதரை வெறிக்கச் செய்து நிலை தடுமாற வைத்துவிடுகிறது. அதனால்தான் மதுபானம் தீமை விளைவிக்கும் என்கிறார்கள்' என்றார் சாது.

'அதெப்படி, பழம் சாப்பிடலாம் என்றால் அதன் சாற்றைக் குடிப்பதும் தவறில்லை என்றல்லவா எடுக்க வேண்டும். சாற்றைக்குடித்தால் வெறிக்கும் என்பதெல்லாம் வெறும் கட்டுக்கதை, அப்படி ஒரு மண்ணாங்கட்டியும் கிடையாது.' என்று வாதாடினான் அந்த சீடன்.

சாது அருகே நின்ற மற்றைய சீடர்களைப் பார்த்தார். ஒரு சிலர் அந்தச் சீடன் சொல்வது சரியாய் இருக்குமோ என்பது போன்ற சந்தேகத்தோடு குருவைப் பார்த்தார்கள்.

நெருப்பு சுடும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக நெருப்பைத் தொட்டுத்தான் பார்க்கவேண்டுமா? ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷமே போதுமே என்பதை உணர்ந்து கொண்ட சாது அவர்களை வெளியே அழைத்துச் சென்று ஒரு தண்ணீர் தொட்டியருகே அந்தச் சீடனை உட்காரச் சொன்னார். ஏனைய சீடர்களைப் பார்த்து அவனது தலையிலே ஒரு பிடி மண்ணை அள்ளி ஒவ்வொருவராகப் போடச் சொன்னார். அவர்கள் மண்ணைப் போடும்போது நோகிறதா என்று சாது கேட்டார். சீடனோ அலட்சியமாய் இல்லை என்று பதிலளித்தான். அதன் பின் அருகே இருந்த தண்ணீர் தொட்டியில் இருந்து தண்ணீரைக் கிண்ணத்தில் எடுத்து ஒவ்வொருவராக அவனது தலையிலே ஊற்றச் சொன்னார். அதற்கும் அந்தச் சீடன் நோகவில்லை என்றே அலட்சியமாகப் பதிலளித்தான்.

'அடுத்து என்ன செய்வது?' என்று சீடர்கள் குருவிடம் கேட்டார்கள்.

அருகே இருந்த செங்கட்டிகளை ஒவ்வொன்றாக எடுத்து அவனது தலையிலே போடச் சொன்னார். சீடர்கள் செங்கட்டிகளை ஒவ்வொன்றாகத் தூக்கிக் கொண்டு அந்தச் சீடனுக்கு அருகே வந்தபோது அந்தச் சீடன் தலையிலே கையை வைத்துத் தடுத்தபடி பயந்துபோய் துடித்துப் பதைத்து எழுந்து ஓடிவந்து சாதுவிடம் 'குருவே புரிந்து கொண்டேன்' என்று மன்னிப்புக் கேட்டான்.

சாது சிரித்துவிட்டுச் சொன்னார், 'மண்ணைத் தனியே போட்டபோது நோகவில்லை என்றாய், தண்ணீரைத் தனியே ஊற்றிய போதும் நோகவில்லை என்றாய், ஆனால் அந்த இரண்டையும் ஒன்றாய்க் கலந்த கலவைதானே செங்கட்டி. அதை உன் தலையில் போட்டால் மட்டும் எப்படி நோகும் என்கிறாய்?' என்றார்.

'குருவே உண்மைத் தத்துவத்தைப் புரிந்து கொண்டேன், விதண்டா வாதத்திற்காக நான் அப்படி நடந்து கொண்டது தப்புத்தான், என்னை மன்னித்து விடுங்கள்' என்றான் சீடன்.

'நல்லது மகனே, தீயதைக் கண்டால் விலத்திக் கொள்வதும், நல்லதைத் தெரிந்து கொண்டு வாழப்பழகிக் கொள்வதும் உன்னைப் பொறுத்தது. ஏனென்றால் உன்னுடைய எதிர்காலம் உன்னில்தான் தங்கியிருக்கிறது' என்று சீடனுக்குப் புத்திமதி சொன்னார் சாது. இதனால் தானோ என்னவோ, குடி குடியைக் கெடுக்கும் என்று ஊரிலே பெரியோர் சொல்வர். இங்கே எப்படியோ? ●

குரு அரவிந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உன்னிடம் மயங்குகிறேன்...

**– கலைவாணி**

"தினமும் புத்துணர்வு பெறுங்கள்..." என்பார்கள். தம்பதியினரின் இல்லற வாழ்க்கை சுவாரஸ்யமாக எழுதப்பட்ட ரொமான்ஸ் உணர்வுகளுடன் பயணிப்பதற்கு இருவருக்கும் இடையிலான ரொமான்ஸ் உரையாடல் முக்கியமாகின்றது.

நிசப்தமாகக் கழிந்து போகும் இரவு நேர ரொமான்ஸ் பொழுதுகளை சற்று மாற்றி காதல் பேச்சுக்கள் மூலம் இனிமையாக்குங்கள். நகைச்சுவை கலந்து பேசும் ஆண்களை அனேகமான பெண்களுக்கு பிடிக்கும் என்பதைவிட பெண் இயல்புகளை உணர்ந்து (கவிஞனுக்குப் பொய் அழகு) கற்பனைக் குதிரையை தட்டிவிடும் ஆண்களையும் சற்று அதிகமாகவே பிடிக்கும்.

காதலன் - காதலி, கணவன் - மனைவி இவர்களுக்கிடையிலான ரொமான்ஸ் பேச்சுக்கள் அவர்களின் வாழ்க்கைப் புத்தகத்தின் இனிமையான பக்கங்களில் தேன் பூசிச் செல்கின்றன. நகைச்சுவை உணர்வுகளையோ, அன்புக்குரியவருக்கான ஆசை வார்த்தைகளையோ வெளிப்படுத்த முன்... அவர்களுடன் பேசுவதற்கான சந்தர்ப்பங்களை நாமே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இன்று அநேகமான குடும்பங்களைப் பார்த்தால் வேலை, வீடு, ரிவி, சமையலறை, படுக்கை அறை என்று மௌனித்த மொழிகளாகவே கழிந்து கொண்டிருக்கின்றன. உங்கள் மனைவியிடம் "நீ ரொம்ப அழகாய் இருக்கிறாய்..." என்று எப்போது சொல்லியிருப்பீர்கள் என்று கேட்டால்... பதில் இருக்காது.

காலைச் சாப்பாடு சிற்றி ரீவியுடன், இரவுச் சாப்பாடு சன் ரீவி சிரியலுடன்... இரவு நேர ரொமான்ஸ் படுக்கை அறை நிசப்தத்துடன்... எப்படி உருவாகும் ரொமான்ஸ் பேச்சு...? எப்படி சுவாரஸ்யமாகும் இல்லற வாழ்க்கை...?

வீடு விற்பனைப் பிரதிநிதியாக இருக்கும் ஒருவர் எவ்வளவு பிஸியாக இருந்தாலும் மனைவி தொலைபேசியில் அழைத்தால் புன்முறுவலுடன் தவறாமல் பேசிக்கொள்வார். அவர்களுக்கிடையிலான நகைச்சுவை கலந்த உரையாடல் மற்றவர்களைக் கூட பொறாமைப்படுத்தும். அவர்களின் அன்னியோன்னியமான வாழ்க்கைக்கு அவர்களது நகைச்சுவை கலந்த உரையாடல் காரணமாக இருக்க முடியும் என்றால் ஏன் எம்மால் முடியாது?

பேசுங்கள்... நேரம் கிடைக்கும் போதெல்லாம்... சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம்... பேசுங்கள். என்ன பேசவேண்டும் என்பதை விட எப்படியும் பேசவேண்டும் என்று எண்ணுங்கள். உங்கள் அன்புக்குரியவரை அரவணைத்து இன்பத்தின் உச்ச நிலையை அடைய... ரொமான்ஸ் பேசுங்கள்.

என்னென்ன விடயங்களைப் பேசவேண்டும் என்று மனதில் குறிப்பெடுக்காதீர்கள். என்னென்ன தோன்றுகின்றதோ அதை எல்லாம் பேசுங்கள். காதலோ களியாட்டமோ காமமோ... பேச்சுக்கு முதலிடம் கொடுத்து அதனை உணர்வுகளாகப் பிரித்துப் பிரித்து அனுபவித்துக் கொள்ளுங்கள்.

அன்பே... அருயிரே... மானே... தேனே... இதயத் தாமரையே... நீதான்டா என் அழகி..., அவள் அப்படி ஒன்றும் அழகில்லை..., கண்ணுக்குட்டி... என்று ஏதாவது பேசுங்கள். கண்ணைப் பற்றி பேசுங்கள்... காதலைப் பறிப் பேசுங்கள்... கொஞ்சுங்கள்... குலாவுங்கள். நகைச்சுவைகளை அள்ளி வீசுங்கள். படம் மற்றும் பாடல் ரசனைகளை வெளிப்படுத்துங்கள்... "இந்த பாட்டைக் கேட்டா ஒரே உங்க ஞாபகம் தான்..." கற்பனைகளை கசிய விடுங்கள். வார்த்தைகள் கிடைக்காது விட்டால்...உணர்வுகளை வார்த்தைகளாக வெளிப்படுத்துங்கள்.

வானொலிக் கலைஞர் ஒருவர் பெண் நேயர்களின் மிகுந்த அபிமானி. அவரது பேச்சு... பெண்களை அப்படியே கட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரங்களை வார்த்தைகளால் அழகுபடுத்தி ரொமான்ஸ் பக்கங்களை சுவாரஸ்யமாக்குங்கள்...


போட்டுவிடும். அவருடன் வானொலியில் பேசுவதற்கு பல பெண்கள் காற்றலையில் காத்திருப்பார்கள். இது அவரது நாளாந்த வாழ்க்கை. அன்று அவர் மனைவியுடன் செல்ல இருந்த ஒரு விழாவை மறந்து இரவு சற்று நேரம் செல்ல வீடு திரும்புகிறார்... மனைவியின் முகத்தைப் பார்க்கவே சகிக்க முடியவில்லை. முகம் அப்படியே 'ஊர்ர்' என்று இருந்தது. கோபக் கணலின் தாக்கம் சாப்பாட்டுக் கோப்பையில் வெளிப்பட்டது.

"என்னடா செல்லம்... அது என் தொழிலம்மா... தொழில் வேற வாழ்க்கை வேற... நீ என்ர வாழ்க்கை... நீ தான் எனக்கு எல்லாம்... தொழில் வரும் போகும். ஆனா நீ அப்படியா? என்னை பார்த்து 'உங்கள் வளர்ச்சிக்கு யார் காரணம்' என்று யாரும் கேட்டால், நீ மட்டும் தான் என்பேன்... உன்னோட மட்டும் தானே சண்டையும் பிடிக்கலாம்... சந்தோசமாகவும் இருக்கலாம்" என்று கூறி முடிய முன் நெஞ்சிலே சாய்ந்த மனைவியின் தலையை அவர் கோதிக்கொண்டிருந்தார்.

என்ன யோசிக்கிறீர்கள்.
புரட்டுங்கள் பாரதியார் கவிதைகளை...
தேடுங்கள் புதுக் கவிதைகளை...
ஒன்றிரண்டு வரிகளை அவுட்டு விடுங்கள்... முடியாவிடில் சினிமா பாடல்களின் வசனத்தையாவது வீசியெறியுங்கள். "உன்னிடம் மயங்குகிறேன்", "அழகே உன்னை ஆராதிக்கின்றேன்" பாடல் வரியின் உணர்வுகளை தாராளமாகவே வெளிப்படுத்துங்கள்.

நேரங்களை வார்த்தைகளால் அழகுபடுத்தி ரொமான்ஸ் பக்கங்களை சுவாரஸ்யமாக்குங்கள். படுக்கை அறை சுகம் கூட ரொமான்ஸ் பேச்சுக்களால் அதிக இனிமையாகும் என்பதில் நம்பிக்கை கொண்டு வாழ்வை சுவாரஸ்யமாக்குங்கள். ●





பக்கம் 9, In சுவை பகுதியில் உள்ள குழந்தை இவர்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MONEY PROBLEMS?™

சிறிய மாதக் கட்டணத்தைச் செலுத்தி உங்களுடைய சகல கடன்
தொல்லைகளுக்கும் தீர்வு காணுங்கள்!

## எம்மால்...

- ✔ உடனடியாக நீங்கள் வட்டி செலுத்துவதை நிறுத்தமுடியும்!
- ✔ உங்களுடைய கடன்பெறும் தகமையை மீழப் பெற்றுத்தர முடியும்!
- ✔ உங்களுடைய கடன் பழுவைக் குறைக்க முடியும்!

## இனிமேல் தொல்லைகள் இல்லை...

- ✘ கடன் அறவிடுவோரிடமிருந்து தொலைபேசி அழைப்புகள் வரமாட்டாது!
- ✘ உங்களுக்கு எதிரான நீதிமன்ற ஆணைகள் இருக்காது!
- ✘ உங்களுடைய ஊதியத்தில் இருந்து பணம் வசூலிக்கப்பட மாட்டாது!
- ✘ உங்களுக்கு ஆதனங்களை இழக்கும் கவலையிருக்காது!
- ✘ அத்துடன் உங்களுக்கு பணச்சிக்கல்கள் எதுவுமே இருக்காது!




எம்முடன் உங்கள் தாய்மொழியில் உரையாட

**416-650-5400**
(West Toronto)

**416-754-1800**
(East Toronto)

திவாலாகும் நிலைமைக்கு அவசியமே இல்லை

வங்கிறோத்து அமைப்பின் அறங்காவலரைச் சந்திப்பதற்கு முன்னர் எம்மைச் சந்தியுங்கள்

அந்த அறங்காவலர்கள் கடன் கொடுத்தவர்களின் பிரதிநிதிகள்

ஆனால் நாம் உங்களுடைய பிரதிநிதிகளாகச் செயற்படுபவர்கள்

gta™ credit

GTA Credit Solutions Services Ltd.

www.gta-credit.com

North York - 1280 Finch Ave. W. Suite 411, M3J 3K6
Scarborough - 4433 Sheppard Ave E. Suite 201, M1S 1V3
Mississauga - 93 Dundas St. E. Suite 114, L5A 1W7
Brampton - 284 Queen St. E. Suite 215 L6V 1C2
Ajax - 30 Hunt Street Suite 203, L1S 3M2
Downtown - 01 Eglinton Ave East, Suite 703 M4P 3A1
Oshawa - 187 King Street East, Suite 102, Oshawa L1HY 1C2
Barrie Office - 129 Dunlop St., Suit 201, Barrie, Ontario, L4M 1A6
Hamilton / Stoney Creek Office - 800 Queenston Road,Suite 302, Stoney Creek, Ontario, L8G 1A7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாவும் விடையும்

வி. கந்தவனம்

## 1. அறிஞர் என்பவர் யார்?

இந்தக் கேள்வியைத் தமிழ்நாட்டில் இன்று கேட்டால் அண்ணாத்துரை என்று பதில் அளிப்பவரும் இருக்கிறார்கள். அறிஞர் என்று அழைப்பதற்கு அவர் தகுதியானவர்தான். ஆனால் இக்காலத்தில் நாம் பலபேரையல்லவா இப்படி அழைக்கிறோம்.

பொதுவாக, ஆசிரியர்மாரை, பட்டங்கள் பெற்றவரை, சொற்பொழிவாளரை, எழுத்தாளரை அறிஞர் என்று அழைப்பது உலக வழக்காகிவிட்டது. அறிஞருக்கு மேலாக, பேரறிஞர், மூதறிஞர் போன்ற பட்டங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

அறிவு கல்வியாலும் வரும் கேள்வியாலும் வரும். இவ்விரண்டுமின்றி அனுபவத்தாலும் வரும். அதனைப் பட்டறிவு என்று அழைப்பர். ஆனாலும் கல்விகற்ற ஒருவரைத்தான் அறிவுக்குரியவராகக் கருதுகின்ற வழக்கம் இருந்துவருகின்றது. கல்வியின் உச்சநிலையாக இருப்பது முனைவர் பட்டம். இந்தப் பட்டத்தைப் பெற்றவர் பலதையும் அறிந்தவர் அல்லது அறியும் தகுதியுடையவர் என்ற மதிப்புக்குரியவர்.

வெற்றி வேற்கை என்று ஒரு நூல். அதிவீரராம பாண்டியன் என்ற அரசர் ஆக்கியது. அதில்,

> பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்
> சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்

என்று சொல்லப்பட்டிருத்தல்போல, அறிஞர் எல்லாம் அறிஞரும் அல்லர் என்று கருதுவதற்கு இடமுண்டு. அவ்விதம் கருதுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் இரண்டு முக்கியமானவை.

1. அறிவு என்ற சொல்லின் பரந்த பொருள்.
2. அறிஞர் தகைமை.

அறிவு எனப்படுவது நாம் நினைப்பதிலும் மேலான சில படிநிலைகளைக் கொண்டுள்ளது. கல்வி அறிவுதான் அறிவு என்றில்லை. 'அறிவெனப்படுவது பேதையார் சொல் நோன்றல்' என்கிறது கலித்தொகை. அதாவது, அறிவிலார் சொல்லைப் பொறுத்துக் கொள்ளுதலே அறிவு எனப்படுகின்றது.

மற்றுமொரு விளக்கத்தை வள்ளுவப் பெருமான் தருகின்றார்:

> எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு.

இதே கருத்தை மெய்யுணர்தல் என்ற அதிகாரத்திலும் வலியுறுத்துகின்றார். கலித்தொகையும் திருக்குறளும் அறிவு என்ற சொல்லுக்குத் தரும் விளக்கம் அறிவுடன் தொடர்புடைய திறன் பற்றியது. மெய்ப்பொருள் காண்பது என்பது ஒரு திறன்(skill). எவ்வளவுதான் கற்றிருந்தாலும் இந்தத் திறன் இல்லாதவரை அறிஞர் என்று சொல்ல முடியாது.

இரண்டாவதாக, கல்வி அறிவினால் ஒருவர் பக்குவம் பெற்றவராக இருத்தல் வேண்டும். இவர்களை 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்' என்கிறார் புறநானூற்றில் பிசிராந்தையார் என்ற புலவர்.

ஆக, கல்வி அறிவுடன், மெய்ப்பொருள் காணும் திறமையும் புலன்களை அடக்கும் பக்குவமும் பிறர் பார்த்துப் பின்பற்றத் தகுந்த குணவியல்புகளையும் ஒழுக்கத்தையும் உடைய சான்றோர் ஒருவரே அறிஞர் எனத் தக்கவராவர். ●

## குழந்தைகளின் மொழியறிவை வளர்க்கும் இசை!

இசையானது குழந்தைகளின் மூளை ஒலி நுண்ணுணர்வுத் திறனை அதிகரிக்கிறது, அதன் மூலம் அவர்களது மொழியைக் கற்கும் திறனை மேம்படுத்துகிறது என்று ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். மொழியறிவு என்கிறபோது அதில் பேச்சும் அடக்கம். இது தொடர்பான ஆய்வை அமெரிக்காவின் சிகாகோ நார்த்வெஸ்டர்ன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் அண்மையில் மேற்கொண்டனர்.

அதில், மூளையின் அறிவு வளர்ச்சி நிலையில் இசையானது அதிகப் பலனளிப்பதாகக் கண்டறிந்தனர். அதிலும் குழந்தைகளுக்கு இசை அதிக நன்மை அளிக்கிறது. குறிப்பாக, கற்றல் குறைபாடு மற்றும் ஓட்டிச பாதிப்பு உள்ள குழந்தைகளுக்கு. இசைத் திறனுக்கும், இசை முறைமைகளைக் கிரகிக்கும் நரம்பு மண்டலத்துக்கும் இடையே உள்ள தொடர்பை விஞ்ஞானிகள் வெளிப்படுத்தியுள்ளனர்.
இசைக் கருவியை வாசிப்பது, மொழியைக் கற்கும் குழந்தையின் திறனில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துவதும் தெரியவந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Rajan Kanagasabai (M. Eng)



தொலைக்காட்சி என்ற பொழுபோக்கு சாதனம் அறிமுகமாகி 75 வருடங்களைக் கடந்துவிட்ட நிலையில், அதன் வளர்ச்சிப் பாதையில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தியது வர்ணத் தெலைக்காட்சியின் வரவு. பின்னர் LCD மற்றும் Plasma தொலைக்காட்சிகளாக slim ஆகி முப்பரிமாண தொலைக்காட்சியில் (3DTV) வந்து நிற்கின்றது. முப்பரிமாண தொலைக்காட்சி அண்மைக்கால தொழில் நுட்ப வளர்ச்சியில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தப்போவதனால், மிகப்பெரிய நிறுவனங்கள் அனைத்தும் போட்டிபோட்டுக்கொண்டு வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுகொண்டிருக்கின்றன.

# முப்பரிமாண தொலைக்காட்சி 3D TV

## 3D தொலைக்காட்சியின் தொழில்நுட்பம்





முப்பரிமாண தொலைக்காட்சியின் தொழில்நுட்பம் பற்றிய அறிவைப் பெறுவதற்கு முன்னர் எமது கண்கள் எப்படி வேலை செய்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு முப்பரிமாண பொருள் ஒன்றை எமது இரு கண்களால் பார்க்கும்போது, ஒவ்வொரு கண்ணும் இரண்டு விதமாக அப்பொருளின் விம்பத்தை பதிவுசெய்கின்றது. அந்த முப்பரிமாண பொருளின் இரு கோணங்களின் விம்பங்கள் எமது மூளைக்கு அனுப்பப்பட்டு, மூளை அந்தத் தகவல்களைக் கொண்டு அப்பொருளின் முப்பரிமாண தோற்றத்தை எமக்கு உணரவைக்கிறது.

இனி முப்பரிமாண தொலைக்காட்சி பற்றிப் பார்ப்போம்.

முப்பரிமாண தொலைக்காட்சியை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.


**Stereoscopic TV:** 3D கண்ணாடியின் உதவியுடன் பார்க்கக்கூடிய முப்பரிமாண தொலைக்காட்சி.

**Autostereoscopic TV:** 3D கண்ணாடியின் உதவியின்றி பார்க்கக்கூடிய முப்பரிமாண தொலைக்காட்சி.




## STEREOSCOPIC TV

ஒரே நேரத்தில் இரண்டு கமராக்களின் உதவியுடன் படங்கள் செங்குத்தாகவும் கிடையாகவும் எடுக்கப்படுகிறது. அது மீண்டும் திரையில் 3D கண்ணாடியின் உதவியுடன் படங்கள் இரு வேறாகப் பிரிக்கப்பட்டு இரு கண்களுக்கும் வெவ்வேறு விதமான விம்பங்களை பதிய வைக்கின்றது. இதன் மூலம் எமது மூளை முப்பரிமாணக் காட்சியை எமக்கு உணர வைக்கிறது. உண்மையான ஒரு சம்பவத்தை நேரிலே பார்ப்பது போன்ற உணர்வு பார்வையாளர்களுக்குக் கிடைக்கும்.




## AUTOSTEREOSCOPIC TV

Autostereoscopic தொலைக்காட்சியும் கிட்டத்தட்ட Stereoscopic தொலைக்காட்சியை ஒத்த தொழில்நுட்பத்தைக் கொண்டது. ஆனால் பார்வையாளர்கள் அணியும் 3D கண்ணாடிகளுக்குப் பதிலாக, தொலைக்காட்சியில் பொருத்தப்பட்டுள்ள சிறிய கண்ணாடி வில்லைகள் (Lenticular Lens) இரு விம்பங்களையும் பிரித்து எமது கண்களுக்கு ஒரே நேரத்தில் காண்பித்து முப்பரிணாமத்தை உணரவைக்கிறது. இந்த முறையின் முக்கிய அனுகூலம் விசேட 3D கண்ணாடிகள் தேவையற்றது. இதன்முக்கிய குறைபாடு ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே இருந்து தொலைக்காட்சியை பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்தால் மட்டுமே முப்பரிமாணக் காட்சியை எம்மால் உணரமுடியும்.

தற்போது இந்த வகைக் குறைபாடுகளை நீக்குவதற்காக பல தொலைக்காட்சி நிறுவனங்கள் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுவதனால் வெகுவிரைவில் விசேட கண்ணாடிகள் ஏதும் அற்ற அல்லது குறிப்பிடப்பட்ட இடத்தில் இல்லாமல் எந்தவொரு இடத்தில் இருந்தும் பார்க்கும் முப்பரிமாண தொலைக்காட்சிகள் சந்தைக்கு வந்து தொலைகாட்சியின் சரித்திரத்தில் மிகப்பெரிய திருப்புமுனையை உருவாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோல்வி மூலம் வெற்றி பெறுவது எப்படி?

"தோல்வியே வெற்றியின் முதல்படி", "தோல்வி கண்டு மனம் தளராது தொடர்ந்து சென்றால் வெற்றி நிச்சயம்" இப்படிப் பல அறிவுரைகள் பலர் சொல்லக் கேட்டிருப்போம். ஏன் நாமே பலருக்குக் கூறியிருப்போம். ஆனால் நம்மில் எத்தனை பேர் தோல்வியை வெற்றியின் முதற்படியாகக் காண்கிறோம்?

ஒரு குறிக்கோளை எடுத்துக்கொண்டு அதை அடைவதற்கு அரைமனதாகச் சில முயற்சிகளைச் செய்துவிட்டு, தோல்வி எதிர்ப்பட்டதும் தம் வாழ்க்கையே இருண்டு விட்டதுபோல் தலையில் கை வைப்பவர்களே நம்மில் அதிகம். தோல்வி என்பது அவமானமல்ல. வாழ்க்கை கற்றுத்தரும் பாடம். தோல்வியிலிருந்து நாம் பல படிப்பினைகளைக் கற்கிறோம்.

தோமஸ் அல்வா எடிசனைப்பற்றி பலர் கேள்விப்பட்டிருப்பீர்கள். 1093 வெவ்வேறு கண்டுபிடிப்புக்கள் அவர் பெயரிலுள்ளன. இன்னுமொரு சாதனையும் அவர் பெயரிலுண்டு. உலக சரித்திரத்தில் அதிக தோல்விகளைச் சந்தித்த மனிதர் என்பதே அது. இதை ஏன் சாதனை என்கிறேன்? அவரது கண்டுபடிப்புக்களில் அனைவரும் பெரிதும் அறிந்த ஒன்று மின்குமிழ் (பல்ப்). இந்த மின்குமிழைக் கண்டுபிடிக்க அவர் செய்த முயற்சிகளில் ஆயிரமாவது முயற்சியே வெற்றி பெற்றது. தொடர்ந்து 999 பரிசோதனைகளில் தோல்வியையே சந்தித்தார். அவரிடம் சிலர் கேட்டனர் "இத்தனை முறை தோற்றீர்களே உங்கள் மனம் சோரவில்லையா?" அதற்கு எடிசன் கூறினார் "இல்லவேயில்லை. இதுவரை ஓர் மின்குமிழ் வேலைசெய்யாமல் போவதற்குரிய 999 காரணங்களைக் கண்டுபிடித்திருக்கிறேன்". இது சாதனைதானே.

எடிசன் மட்டுமல்ல எல்லா வெற்றியாளர்களின் வாழ்விலும் தோல்வி ஓர் அம்சமாய் இருந்துள்ளது. ஆனால் இறுதியில் பேசப்படுவது அவர்களது வெற்றிபற்றியே என்பதால் அவர்கள் சந்தித்த தோல்விகள் பற்றியும் அதிலிருந்து அவர்கள் மீண்டு வந்த கதைகளும் எமக்குத் தெரியாமலேயே போய்விடுகின்றன.

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர், புதிய வியாபாரம் ஒன்றினை ஆரம்பித்தார். பெரிய அளவில் திறப்புவிழாவும் சிறப்பாக நடைபெற்றது. சிறிது மாதங்களின் பின் வியாபாரத்தில் பெருத்த நஷ்டம். எங்கோ தவறு நடந்துள்ளது. அது என்ன, அதை எப்படி சீர் செய்யலாம் என்று ஆராய்வதை விடுத்து சோகத்தில் ஆழ்ந்திருக்கிறார் நண்பர். "ஐயோ ஆடம்பரமாக ஆரம்பித்தேனே! இன்று வியாபாரம் உள்ள நிலை கண்டால் மற்றவர்கள் என்ன

> *உலக சரித்திரத்தில்*
> *அதிக தோல்விகளைச் சந்தித்த*
> *வெற்றியாளர்*
> *தோமஸ் அல்வா எடிசன்.*

நினைப்பார்கள். சிரிப்பார்களே! இதை எப்படி நான் வெளியில் தெரியாமல் மறைப்பது?" எனப் புலம்பினார்.

"புது மனைவியிடம் தாய்மையையும் புது வியாபாரத்தில் இலாபத்தையும் மூன்று வருடங்களுக்கு எதிர்பார்க்காதே" என்கிறார் கவிஞர் வைரமுத்து. அதன்படி வியாபாரத்தில் நஷ்டமடைவதென்பது கேவலமல்ல. ஒவ்வொரு முறையும் நஷ்டப்படும் போதுதான் நாம் இலாபத்திற்கான புதுப் புது உத்திகளைக் கண்டுபிடிக்கிறோம். அடுத்தவர் நினைப்புகளுக்கு பயந்தால் எப்படி முன்னேற்றம் காணமுடியும். தோல்விகளை தைரியமாக எதிர்கொள்ளுங்கள்.

இந்தத் தோல்விப் பயத்தின் காரணமாகத்தான் பலர் எந்த முயற்சியிலுமே இறங்குவதில்லை. இப்படியானவர்கள் முன்னேறுவதற்கு எந்த வழியும் இல்லை. என்னென்ன செய்யக்கூடாது எனக் கற்றுத்தருவதற்கே தோல்வி ஏற்படுகிறதென நீங்கள் கருதுவீர்களானால் அத்தோல்வியின் மூலமே வெற்றி இலக்கை எட்டலாம். வாழ்க்கைப் பாடத்திற்கு தோல்வியைத் தவிர சிறந்த ஆசான் எதுவும் இருக்க முடியாது.

ஆம், ஒவ்வொரு தோல்வி ஏற்படும் போதும் "ஏன்", "எதனால்" என்ற கேள்விகளைக் கேளுங்கள். அவற்றைச் சீர்செய்ய முயலுங்கள். அது உங்களை வெற்றியை நோக்கி நகர்த்தும். தோல்வியைச் சந்தித்திராத எவருமே வெற்றி பெற்றதாய் சரித்திரமில்லை. தோல்வி ஏற்பட்டால் சந்தோஷப்படுங்கள். ஏனெனில் எப்படிச்செய்தால் வெற்றி கிடைக்காது என்ற அனுபவத்தை அது உங்களுக்குத் தருகிறது. உங்களின் தோல்விகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க நீங்கள் வெற்றியை நெருங்கி விட்டதாக அர்த்தம்.

ஒரு முறை வெற்றிபெறுவதற்காக 999 முறை தோற்க நீங்கள் தயாரா? அப்படியென்றால் நீங்களும் வெற்றியை எட்டப்போவது உறுதி. உங்கள் வெற்றிப்பாதையில் விழும் தடைக்கற்கள் உங்களை நசுக்காது இருக்கப் பழகிக் கொள்ளுங்கள். அவற்றைப் படிக்கட்டுகளாக்கி முன்னேறுங்கள். எத்தனை முறை விழுந்தோம் என்பது பெரிதல்ல. எவ்வளவு விரைவாக எழுந்தோம் என்பதே பெரிது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூறலில் நனைந்த நிகழ்வுகள்...

## NEW SPICE LAND இன் இரண்டாவது கிளை திறப்பு விழா





NEW SPICE LAND 2வது கிளை திறப்பு விழா, செப்டெம்பர் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 6065 Steeles Avenue East, Toronto,Ontario M1X 0A8 (Markham & Steeles) இல் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

## JRS College இன் வருடாந்த பட்டமளிப்பு விழா








**JRS College** இன் வருடாந்த பட்டமளிப்பு விழா செப்டெம்பர் மாதம் 23ம் திகதி வியாழக்கிழமை ரொறன்ரோ **Armenian Youth Centre** இல் இடம்பெற்றது.

## சிந்தனைப் பூக்கள் - பாகம் 3
## வெளியீட்டு விழா




சமூக சிந்தனையாளரும் பிரபல கட்டுரையாளருமான திரு.எஸ்.பத்மநாதன் அவர்களின் ''சிந்தனைப் பூக்கள் - பாகம் 3'' நூல் வெளியீடு அண்மையில் நடைபெற்றது. இந்நூலின் வெளியீட்டு வைபவத்திற்கு நான்காவது பரிமாணம் சஞ்சிகையின் பிரதான ஆசிரியர் திரு.க.நவம் தலைமை தாங்கினார்.
செல்வி ஆதிரை விமலநாதனின் தேசிய கீதத்தை தொடர்ந்து வரவேற்புரையை திரு.த.சிவலோகநாதன் நிகழ்த்தினார். கவிநாயகர் திரு.வி.கந்தவனம், நகரசபை உறுப்பினர் திரு.லோகன் கணபதி, திருமதி.லீலா சிவானந்தன், உதயன் ஆசிரியர் திரு.ஆர்.என்.லோகேந்திரலிங்கம் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கினர். தலைமை உரையை திரு.நவம் நிகழ்த்திய பின்பு அதிபர் திரு.பொ.கனகசபாபதி அவர்கள் நூலின் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். கலாநிதி அஞ்சலின் திசைராஜா, வைத்தியகலாநிதி. ஆர்.லம்போதரன், கலாநிதி. கவிஞர் சுல்பிகா ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்தினர். இறுதியாக எஸ்.பத்மநாதன் ஏற்புரையும் நன்றியுரையும் வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேரனின் பதிவுகள்

## கொலைக்காட்சி

பொய்மையும் வன்மம் சூழ் மாயக் காட்சிகளும்
அவர்களுடைய படையெடுப்பில்
புகையுடன் சேர்ந்து மேலெழுந்தபோது

சொல் பிறழ்ந்தது
படிமங்கள் உடைந்தன
வாழ்க்கை குருதி இழந்தது

எறிகணை பட்டுத் தெறிக்கக்
காயம் பட்ட
இரண்டரை வயதுக் குழந்தையின் கைகளை
மயக்க மருந்தின்றி அறுக்கின்ற மருத்துவன்
இக்கணம் கடவுள்
நீரற்ற விழிகளுடன் அலறும் தாய்
ஒரு பிசாசு.

## அஞ்சலி

புதையுண்டவர்கள்
எரியுண்டவர்கள்
கடலோடு போனவர்கள்
–எல்லோரதும் தெளிவான, திருத்தமான தகவல்கள்
உலகப் பணிமனையின்
நிலத்தடி ஆவணக் காப்பகங்களுக்குப் போய் விட்டன

எங்கள் எல்லோருடைய ஒற்றைப் புதைகுழி மீது
படைத்தளபதியின் கோவணத்தை
தேசியக் கொடியாக ஏற்றுகிறார்கள்

எங்கள் கண்ணீர் எழுப்பிய நினைவுச் சின்னத்தில்
ஒருவர் வெற்று வார்த்தைகளை எழுதுகிறார்
பலர் கனவுகளைப் பின்னுகிறார்கள்

மௌனம் கலையாமல்
அவன் கவிதையை எழுதுகிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலக்சிகளின் மோதுகை

## விண்வெளி விபத்து

-கனி-

**விண்வெளியில் பிரமாண்டமான விபத்து ஒன்று நடைபெற இருப்பதை வானவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். எமது தாய்க் கலக்சியான பால்வழிக் கலக்சியும் எமது அயற் கலக்சியான அன்றோமேடா கலக்சியும் படு வேகமாக ஒன்றை ஒன்று நெருங்கிவருகின்றன. கிட்டத்தட்ட மணித்தியாலத்திற்கு 270,000 மைல் கதியில் (190,000 கிலோமீற்றர்/மணி) ஒன்றை ஒன்று நெருங்கிக் கொண்டுவரும் இவையிரண்டும் ஒன்றுடன் ஒன்று மோதி பெரியதொரு விண்வெளி விபத்தினை உண்டாக்கப் போகின்றன என்பதை வல்லுனர்கள் உறுதியாகக் கூறுகின்றார்கள். என்ன இது! ஒன்றை ஒன்று நெருங்கிக் கொண்டு வருகின்றனவா? அப்படியாயின் மில்கிவேயும், அன்றோமேடாவும் ஒன்றுடன் ஒன்று மோதப் போகின்றனவா? அப்படியாயின் எமது கதி? விபரம் அறியுமுன் கலக்சிகள் பற்றிப் பொதுவாகப் பார்ப்போம்.**

நமது கதிரவன் போன்ற கோடிக் கணக்கான விண்மீன்களையும், பெரும் தூசுக் கூட்டங்களையும் கொண்ட மிகப்பெரிய தொகுதியை கலக்சி என்கின்றார்கள். எமது கதிரவன் இருக்கும் கலக்சி 'பால்வழி' கலக்சி ஆகும். நம்முன்னவர்கள் இதனைத்தான் ஆகாய கங்கை என்றார்கள். ஆங்கிலத்தில் இதனை மில்கிவே (Milkyway) என்கின்றார்கள். பேரண்டத்தினுள் குறைந்தது ஐம்பதாயிரம் கோடி (500பில்லியன்) கலக்சிகளாவது இருக்கும் என வானவியலாளர்கள் மதிப்பிட்டுள்ளார்கள். ஒவ்வொரு கலக்சியினுள்ளும் பத்தாயிரம் கோடியில் இருந்து ஐம்பதினாயிரம் கோடி விண்மீன்கள் இருக்கும் என்பது அவர்களது மதிப்பீடு. கதிரவக் குடும்பத்தினைக் கற்பனை பண்ணிப் பாருங்கள். எவ்வளவு பெரியது.! ஆயின் இது போல ஐம்பதாயிரம் கோடி மடங்கு பெரியதான கலக்சி எவ்வளவு பகுதியைப் பிடித்திருக்கும் என்று ஒரு தடவை யோசித்துப் பாருங்கள். இதற்கும் மேலே பேரண்டத்தின் பருமனையும் கற்பனை பண்ணிப் பாருங்கள். அப்பாடா! இம்ம்ம்ம்மாம்...... பெரியதா எமது பேரண்டம்?

பேரண்டமானது கிட்டத்தட்ட 1450 கோடி (பதின்நான்கரை பில்லியன்) ஆண்டுகள் முன்னர் பிக் பாங் கில் இருந்து தோன்றியது என்பது இந்நாட்களில் ஏற்றுக் கெள்ளப்பட்ட முடிவாகும். இந்த பிக் பாங் கொள்கையானது கலக்சிகள் ஒன்றை ஒன்று விலத்தி நகர்வதை அவதானித்ததன் பின்னரே அறியப்பட்டு கணிக்கப்பட்டது. மில்கிவே கலக்சியிற்கு மிக அண்மையில் உள்ள இன்னொரு பெரிய கலக்சி அன்றோமேடா கலச்சியாகும். எமது மில்கிவேயில் இருந்து அன்றோமோடா கலக்சியின் தூரம் கிட்டத்தட்ட 2.5 மில்லியன் ஒளியாண்டுகள் ஆகும். இந்த அன்றோமேடா கலக்சியும், எமது மில்கிவே கலக்சியும் உட்கூட்டுத் தொகுதிக் கலச்சிகளாக இருப்பதால் இவை அவற்றின் ஈர்ப்பின் காரணமாக ஒன்றை ஒன்று விலத்தி நகர்வதில்லை. மாறாக ஒன்றை ஒன்று நோக்கி படு வேகமாக நெருங்கிவருகின்றன.

இவை ஒன்றுடன் ஒன்று மோதுமா? அப்படி என்றால் எப்பொழுது அவை மோதிக் கொள்ளும்? மோதினால் என்ன நிகழும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 190,000 KM/hrs வேகத்தில் ஒன்றை ஒன்று நெருங்கிக் கொண்டு வரும் மில்கிவேயும் அன்றோமேடாவும் மோதி எமக்கு சாவுமணி அடிக்கும்.

எமது பூமியின் கதியென்ன? உயிரினங்களுக்கு என்ன நிகழும்? இது போன்ற பல கேள்விகள் உங்களைக் குடைந்து கொண்டிருக்குமே! அவற்றிக்கான பதில்களை இனிப் பார்ப்போம்.

ஆம், இரண்டு கலக்சிகளும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளத்தான் போகின்றன. தவறுவதற்கான ஒருவழியுமே இல்லை என்கின்றார்கள் ஆய்வாளர்கள். என்ன இந்த விஞ்ஞானிகள்! விண்கல் ஒன்று மோதி எமது பூமிக்கு ஆபத்து வர உள்ளது எனப் பயமுறுத்துகின்றார்கள்! வால்வெள்ளியினாலும் எமக்கு ஆபத்து வந்தது, இனியும் வரும் எனவும் பயமுறுத்துகின்றார்கள். இப்படியிருக்க, அடுத்த பிரச்சனையா என்று நீங்கள் முணுமுணுப்பது எனக்குக் கேட்கிறதுதான். ஆனால் இந்தப் ஆபத்தினைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் இன்னமும் 500 கோடி ஆண்டுகளின் பின்னர்தான் இவை ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளப் போகின்றன.

இந்த மோதலானது சடுதியில் நிகழ்ந்துவிடும் ஒன்றல்ல. இன்றில் இருந்து சுமாராக 250 கோடி ஆண்டுகளின் பின்னராக இவையிரண்டும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ள ஆரம்பிக்கும். பின்னராக முற்றாகவே அவை மோதுண்டு போவதற்கு அடுத்த 250 கோடி ஆண்டுகள் எடுக்கும் என வல்லுனர்கள் கணித்துக் கூறுகின்றார்கள். அப்படியா சங்கதி! அப்படியெனில் ஏன் இப்பொழுது எங்களைப் பயமுறுத்துகின்றீர்கள் எனக் கேட்கின்றீர்களா? பயமுறுத்தவில்லை, விபரங்களைச் சொல்லுகின்றேன். இந்த மோதுகையின் முக்கியத்துவம் என்னவெனில், இப்படியாக கலக்சிகள் ஒன்றுடன் ஒன்று மோதுவது என்பது வான்பரப்பில் நிகழும் அரிய சம்பவமாகும். வானவியலாளர்கள் இது போன்ற அரிய நிகழ்வினை உயர் வலுக் கொம்பியூட்டர்களில் அவதானித்து 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று எங்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்கள்.

**கதிரவன் இன்னமும் 500 கோடி ஆண்டுகளுக்குத்தான் உயிர் வாழுவான். அதன் பின்னர் உருவில் உப்பிப் போய், சிவப்பு நிறமாகி எமக்கு இராட்சதனாகி விடுவான்.**

எமது கதிரவன் இன்னமும் 500 கோடி ஆண்டுகளுக்குத்தான் உயிர் வாழுவான். அதன் பின்னராக உருவில் உப்பிப் போய், சிவப்பு நிறமாகி, சிவப்பு இராட்சதனாகி விடுவான். அப்பொழுது பூமியில் உயிரினங்கள் இல்லாது போய்விடும். எனவே மனிதர் இந்த மோதுகையினால் ஆபத்து என்பதனைக் கருத்தில் எடுக்கத் தேவையில்லை. அல்லாமலும் கலக்சிகள் ஒன்றுடன் ஒன்று மோதித்தான் புவியில் மனித இனம் அழியவேண்டும் என்றில்லை. அவை மோதுவதற்கு முன்னராக நாங்களே எங்களின் முடிவுக்கு ஒருவழி செய்துவிடுவோம், இல்லையா!

மில்கிவே கலக்சியும், அன்றோமேடா கலக்சியும் மோதிச் சுக்கு நூறாக சிதறுண்டு போகப் போவதில்லை. பதிலாக ஒன்றுடன் ஒன்று இணைந்து புதியதாக, இன்னொரு பெரிய கலக்சியை உருவாக்கப் போகின்றன. தோன்றப் போகும் அந்தப் புதிய கலக்சியிற்கு புதிய பெயரையும் வைத்துவிட்டார்கள். 'மில்கோமேடா' (Milkomeda) என்பது அப்புதிய கலக்சியின் பெயர். அன்றோமேடாவும் மில்கிவேயைப் போன்றே சுருளி வடிவிலான கலக்சிதான். எமது கலக்சியையும் விடப் பெரியது. (புதிய ஆய்வுகள் மில்கிவேயும், அன்றோமோடாவும் சம பருமனான கலக்சிகள் எனக் காட்டுகின்றன என்கின்றார்கள் சிலர்) இவையிரண்டும் இணையும் (மோதும்) நிகழ்வின் போது, இரண்டு கலக்சிகளின் விண்மீன்களும் மீள் ஒழுங்கு செய்யப்படப் போகின்றன. அதனால் இவையிணைவதால் தோன்றப் போகும் புதிய கலக்சியானது நீள்வளைய கலக்சியாக இருக்கப் போகின்றது.

இப்போது எமது மில்கிவே கலக்சியில் இருந்து சுமாராக 25 இலட்சம் ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள அன்றோமேடா கலக்சியில் சுமாராக ஐம்பதினாயிரம் கோடி (500பில்லியன்) விண்மீன்கள் இருக்கலாம் என்கின்றார்கள். அன்றோமேடாவை M31 என அடையாளமிட்டுள்ளார்கள். முடிவாக இன்னமும் 500 கோடி ஆண்டுகளின் பின்னராக பேரண்டத்தினுள் மில்கிவே கலக்சியும் M31 கலச்சியும் இருக்கப் போவதில்லை. அவை மட்டுமா? எமது கதிரவனும்... கூடத்தான்! ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிஞர் அண்ணாவும் மூக்குப்பொடியும்...



ஆண்டு 1965. அண்ணாமலைப் பல்கலைக்கழக சாஸ்திரி மண்டபத்திற்கு அறிஞர் அண்ணா சிறப்புரை ஆற்ற வருகை தந்தார். அப்பொழுது தமிழ்நாட்டை காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்தது. முதல்வராக பக்வத்சலம் பொறுப்பேற்றிருந்தார். காமராஜர் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர். அண்ணா சொற்பொழிவு நிகழ்த்தும் பொழுது இடையிடையே மூக்குப்பொடி போடும் இயல்பினர். எத்தனை தடவை போடுவார் என்பது தெரியாது. எவருக்கும் தெரியாமல் அவர் பொடி போட்டுக்கொள்வது ஒரு தனிக் கலையாகப் பேசப்படும். இம்முறை அவர் பேச்சைக் கேட்பதோடு அவர் எத்தனை முறை மூக்கில் பொடி வைக்கிறார் என்று எண்ணிக் கணக்கெடுப்பது என்ற திட்டத்துடன் மாணவர்கள் சிலர் மண்டபத்திற்குச் சென்று முன் இருக்கைகளில் இருந்தோம்.

நான், மே.து. ராசுகுமார், பொன். செல்லக்கணபதி, தேவதாஸ் ஜெயரட்ணம், பொன் சுந்தரலிங்கம், வேலாயுதம்பிள்ளை, ஜெகதீஸ்வரன் என்று நினைவு. மேடைக்குப் பேசவரும்படி அண்ணாவை அழைத்தார் பல்கலைக்கழகத் துணைவேந்தர்.

மேடை அழகனுக்கு மேனி அழகு இல்லை. வெற்றிலைக்காவி படிந்த தெத்துப்பற்கள். தோளில் சேட்டுடன் ஒரு வெள்ளைத் துண்டு. வேட்டியிலும் வெள்ளைத் துண்டிலும் கரைகள் கறுப்புச் சிவப்புக் கோடுகளால் கவர்ச்சிகாட்டும். சேட்டில் வெற்றிலைத் தூறல்கள். சவரம் செய்யாத முகத்தில் வெள்ளை மயிர்களின் வெள்ளோட்டம்.

பேச்சுத் தொடங்கி தூறல் கொட்டி... தமிழ் சாரல் அடித்து, 'சோ' என்று பொழியத்தொடங்கியது ஆற்றோட்டமா? தேன்மாரியா? பாலைப்பொழிந்து தரும் பசுவா? எதனை உவமையாகச் சொல்வது? சரியான இடத்தில், சரியான சொற்களால், சரியான முறையில், சரியான விளைவை உண்டாக்கும் குளிர்மாரித் தமிழ் பெய்தது. சபை உறங்கவில்லை கிறங்கியது.

ஒரு மணி நேரம்... தடங்கல் இல்லாத தாராளத் தமிழ் அடை மழை விட்டது போன்று நின்றது. சபை சக்கரைப் பந்தலில் தேன் சுவைத்த திருப்தியில் திளைத்தது...

## பேச்சிலே ஒரு பகிடிப் பொடி தூவி... சபையோரைச் சிரிப்பில் மயக்கிவிட்டு......

கூட்டம் முடிய மண்டபத்தை விட்டு வெளியேறி வந்தோம். மூக்குப்பொடி எண்ணம் வந்தது. ஒருவர் மூன்று முறைக்கு மேல் என்னால் எண்ணமுடியவில்லை என்றார். அண்ணா பேசும்போது மூக்குப்பொடி போட வேண்டிவந்தால், மெல்லக் கையை நாஷனலுக்குள் நுழைத்து இரு விரல்களால் பொடிப் பெட்டியைத் திறந்து ஒரு சிட்டிகை பொடியை எடுத்துக்கொண்டு, பேச்சிலே ஒரு பகிடிப் பொடி தூவி சபையோரைச் சிரிப்பில் மயக்கிவிட்டு "டக்கென்று" மூக்கில் வைத்து உறிஞ்சிவிடுவார். இந்த வித்தையை எற்கனவே அறிந்திருந்த மாணவருக்கு மூன்று முறை மட்டுமே எண்ண முடிந்தது. அதற்கு மேல் முடியவில்லை. மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். பேசும்போது இடையிடையே மூக்கைக் கசக்குவார். இதனை எண்ணிவிடலாம். ஆனால் அண்ணாவின் பொடி போடலை எண்ண முடியாது. காரணம் அவரின் சபையோரைக் கட்டிப்போடும் கெட்டித்தனம்.

பேச்சின் இனிமை, தெளிவு, ஈர்ப்பு, வன்மை, வளம், அத்தகையது. இனி எந்தப் பிறப்பில் அந்தச் சொல்வல்லானை, சோர்விலானை, தமிழ் மலர்ந்து மணம்பரப்பிய மலரனைய, மாண்பினைக் காண்போம்?

**புலவர் ஈழத்துச்சிவானந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மனவொலியில்...



கே.எஸ். பாலச்சந்திரன்

ஏறக்குறைய 10ஆண்டுகளுக்கு முதல் இது நடந்தது. 2000ம் ஆண்டில் ரொரன்ரோவில் நடந்த சர்வதேச திரைப்படவிழாவில் கமல்ஹாசன் எழுதி, இயக்கி, தயாரித்து, நடிக்கவும் செய்த "ஹேராம்" திரைப்படம் காண்பிக்கபட்டது. அந்தவிழாவில் கலந்துகொள்வதற்காக கமல் ரொரன்ரோவிற்கு வந்திருந்தார்.

செப்ரெம்பர் மாதத்தில், ஒருநாள் பகல்பொழுதில், நான் வேலையில் இருந்தபொழுது, அப்போது 'கலாபம்' என்ற தொலைக்காட்சியை நடாத்திக்கொண்டிருந்த ஸ்ரீனிவாசன் என்னை அழைத்து, "நடிகர் கமல்ஹாசனை தொலைக்காட்சிக்காக நேர்காணல் செய்யப் போகிறோம். நீங்களும் வருகிறீர்களா" என்று அழைத்தார். ஒரு இலக்கியவாதியின் பேச்சைக்கேட்க போகலாம்... ஒரு சங்கீதக்கலைஞரின் இசையைக்கேட்டு ரசிக்க போகலாம்... ஆனால் ஒரு நடிகரை வெறுமனே பார்ப்பது என்பது எனக்கு விருப்பமான காரியமல்ல... என்றாலும், நாயகன் திரைப்படத்தின் மூலம் என்னை கவர்ந்த கமலுடன், சில கருத்துக்களை பகிர்ந்துகொள்ளலாம் என்ற ஒரே நம்பிக்கையினால் சம்மதித்தேன்.

திரைப்படவிழாவில் கலந்து கொள்ளும் நடிகர்கள், இயக்குனர்கள் போன்றோரை பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சிக்காரர்கள் சந்திப்பதற்காக, விழா ஏற்பாட்டாளர்கள் ஒரு ஹோட்டலில் வசதி செய்திருந்தார்கள். கமல்ஹாசனையும் அங்கு சந்திப்பதாகத்தான் ஏற்பாடு. படப்பிடிப்பாளர்கள், உதவியாளர்கள் என்று வருவதற்கு முன்னதாகவே நானும், ஸ்ரீனிவாசனும் அந்த ஹோட்டலுக்குச் சென்று, மேலே செல்வதற்காக, 'லிப்டி'ற்காக காத்து நின்றோம். வேறு ஒருவரும் எங்களைப்போல நின்றார். நாங்கள் அவரை ஆரம்பத்தில் கவனிக்கவில்லை.

சில விநாடிகளின் பின்னர், தற்செயலாக திரும்பிப்பார்த்த ஸ்ரீனிவாசன், "பாலாண்ணா... இங்கே கமல் நிற்கிறார்" என்று சொல்லவும்தான், எங்களுக்கு அருகில் இவ்வளவுநேரமாக ஒரு வெள்ளை ரீசேர்ட்டுடன் நடிகதோரணையெதுவும் இல்லாமல் வெகுசாதாரணமாக நின்றது, கமல்ஹாசன் என்று தெரிந்துகொண்டேன். என்னை ஸ்ரீனிவாசன் கமலுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

"இவர்தான் எங்கள் நடிகர் - எழுத்தாளர் கே.எஸ்.பாலச்சந்திரன்"

அதற்குப் பதிலாக கமல்ஹாசன் சொன்னதுதான் எனக்கு மிகுந்த ஆச்சர்யத்தைத் தந்தது.

"நீங்கள்தான் 'வாத்தியார் வீட்டில்' பாலச்சந்திரனா?" என்றார்.

இலங்கை வானொலிக்காக நான் எழுதி, நடித்த நகைச்சவைத் தொடர்தான், "வாத்தியார் வீட்டில்". பின்னர் நான் அந்தத் தொடரை ஒலிநாடாவாக வெளியிட்டதும் உண்மை. அது எப்படி... கமலுக்கு தெரிந்தது? எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

கமல்ஹாசன்தான் விளக்கினார். தான் 'தெனாலி' படத்தில் யாழ்ப்பாணத் தமிழ் இளைஞனாக நடிப்பதற்கு, உதவியாக எனது 'வாத்தியார் வீட்டில்', 'கிராமத்துக்கனவுகள்' நாடக ஒலிப்பதிவு நாடாக்களை, நண்பர் பி. எச். அப்துல் ஹமீட் தனக்கு தந்ததாகச் சொன்னார்.

இந்த நேரத்தில் 'லிப்ட்' வர, நாங்கள் மூவரும் ஏறிக்கொண்டோம். மேலே போகும்வரையில், கமல் எனது 'வாத்தியார் வீட்டில்' இடம்பெற்ற நாடகங்களைப்பற்றியே பேசிக்கொண்டு வந்தார். 'கல்லுக்குள் வைரம்', 'தூக்குக்காவடி' இப்படி ஒவ்வொன்றையும் விலாவாரியாக ரசித்து சொல்லிக்கொண்டு வந்தார். எனக்கு சந்தோசமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே போய்ச்சேரவும், நாங்கள் நீண்டகால நட்பு உள்ளவர்கள் போன்ற மனநிலைக்கு வந்து விட்டோம். இந்த அழகிய அனுபவத்தை பெறுவதற்காகவே நான் அங்கு வந்தது நல்லது என்று எனக்குப்பட்டது. இதற்கிடையில், தொலைக்காட்சிப் பேட்டிக்காக வந்திருந்தவர்கள் பேட்டியை ஆரம்பித்தார்கள். வழக்கமான கேள்விகள். எதிர்பார்த்த பதில்கள். கமலின் பரந்துபட்ட தேடலுக்கும், அக்கறைக்கும் பொருத்தமானவையாக கேள்விகள் அமையவில்லை என்று எனக்குள் நினைத்துக்கொண்டேன். பேட்டி முடிந்தது.

'கலாபம்' ஸ்ரீனிவாசன், "கமலோடு உரையாடுங்கள்... பதிவு செய்து கொள்கிறோம்" என்றார். கமல்ஹாசனுக்கும் அது சம்மதமாய் இருக்கவேண்டும். தயாரானார். இருவரும் நிறையவே பேசிக்கொண்டோம். எனக்கு ஒன்று தெளிவாகப் புரிந்தது. ஒரு நடிகன் என்பதற்கு மேலாக, ஒரு இலக்கியவாதியாக கவிதா







ரசனையுள்ளவராக, பரந்துபட்ட ஆளுமையுள்ளவராக கமல் இருப்பது தெரிந்தது.

கனடாவில் வாழும் புகழ்பெற்ற எழுத்தாளரான மைக்கேல் ஒண்டாட்ஜி ஒரு இலங்கையர் (தமிழ் உட்பட பல இனங்களின் கலப்பு இவர்) என்று நான் சொல்லவும், அவர் எழுதிய 'பில்லி த கிட்' பற்றிய கவிதைத் தொகுப்பைப் பற்றிச்சொன்னதோடு, அதை வாசித்தபோது கலிங்கத்துப்பரணியின் சில காட்சிகள் ஞாபகத்திற்கு வந்ததாக கமல் எனக்குச் சொன்னார். பின்னர் அந்த ஆங்கிலக் கவிதைகளை நான் வாசித்தபோது, கமல் ஒப்பிட்டது சரியாகவே எனக்குப் பட்டது.

நாயகன் திரைப்படத்தில் அவரது நடிப்பு முறை, **"A Streetcar Named Desire"** என்ற திரைப்படத்தில் நடித்த மார்லன் பிராண்டோவின் நடிப்புமுறை சார்ந்ததா என்று கேட்கவும், அந்தப்படத்தின் இயக்குனர் எலியா கார்சான் பற்றி, அந்த நடிப்புமுறையை போதித்த ஸ்ரனிலோவ்ஸ்கி பற்றியெல்லாம் அலசித்தள்ளிட்டார்.

நிறையப் பேசினோம். குலோத்துங்க சோழனுக்கு சுங்கம் தவிர்த்த சோழன் என்று பெயர் இருந்ததாம். அப்போதே **Dutyfree** ஐ அறிமுகப்படுத்தியவர் என்றார். (அண்மையில் 'தசாவதாரத்தில்' இதைப்பற்றி கூறியிருந்தார்.)

இறுதிவரை 'தெனாலி' திரைப்படத்தைப்பற்றி நான் எதுவும் கேட்கவில்லை. அப்படி கேட்டால், எனது பங்களிப்பு பற்றி அவர் சொல்லவேண்டுமென்று நான் எதிர்பார்ப்பதாக அவர் நினைக்கலாம் அல்லவா? ஆனால் அவர் விடவில்லை. உரையாடலின் இறுதிக்கட்டத்தில், தெனாலியில் தான் பேசிய வசனங்களுக்கு நான் எவ்வளவு உதவியாக இருந்தேன் என்று மனப்பூர்வமாகச் சொன்னார்.

அதைக்கூட, நேருக்கு நேராக சந்தித்தபோது சொல்லப்பட்ட முகமன் வார்த்தைகள் என்று நினைக்கலாம். பல நாட்களுக்கு பிறகு, பல்லாயிரம் மக்கள் குழுமியிருந்த 'தெனாலி' படத்தின் வெள்ளிவிழா மேடையிலே, எனது பெயரைச் சொல்லி, என்னை கனடாவில் சந்தித்தைச் சொல்லி, எனது நாடகங்களைக் கேட்டுத்தான் 'தெனாலி' யில் தான் யாழ்ப்பாண மொழிநடையில் பேசியதாகச் சொல்லியிருக்கிறார். அப்போதுதான் கமல் எனக்கு நேரில் சொன்னவை வெறும் முகமனுக்காகவல்ல என்பதை தெரிந்துகொண்டேன்..

அண்மையில் என் நாவலைப் (கரையைத்தேடும் கட்டுமரங்கள்) பெற்றுக்கொண்டபோதுகூட, அன்போடு என் நலம் விசாரித்திருக்கிறார். எங்கள் நட்பு தொடர்கிறது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தானத்தின் டெக்னிக்!




ஏணியில ஏற்றிவிடுகிற அதே ஜோரில் அடியிலிருக்கிற படிகளை பிடுங்கி விடுகிற அற்புதமான வேலையையும் செய்வார்கள் கோடம்பாக்கத்தில்!

இந்த படிக்கட்டு பார்ட்டிகளால் அப்படி ஒரு இக்கட்டை சந்தித்து விடுவோமோ என்று அதிர்ந்து போயிருக்கிறார் சந்தானம். முன்பெல்லாம் கவுண்டமணியால முன்னுக்கு வந்தவர்தான் இந்த ஹீரோ என்று பலரையும் அடையாளம் காட்டுவார்கள். யார் ஹீரோவா இருந்தா எங்களுக்கென்ன? கவுண்டரு இருக்காரா என்று கேட்டுதான் படத்தையே வாங்கினார்கள் அப்போதெல்லாம். இதனால் சற்று தெனாவட்டாகவே திரிந்தார் கவுண்டர்.

படத்துல விவேக், வடிவேலு மட்டும் இல்லேன்னா உட்கார முடியாதுப்பா என்ற கமென்ட் கேட்டு சம்பந்தப்பட்ட ஹீரோக்களே பல்லை நறநறத்த சம்பவங்கள் எல்லாம் இங்கு உண்டு. இந்த பாராட்டுகள் ஒரு கட்டத்தில் நமக்கே வினையாக முடியும் என்பதை சற்று தாமதமாகவே உணர்ந்தார்கள் இருவரும். முன்னவர்கள் மாதிரி கொள்ளிக்கட்டையை எடுத்து தலை சொறிந்து கொள்ள தயாராக இல்லை சந்தானம்.

இந்த படத்துல மட்டும் நீங்க இல்லன்னா... என்று யாராவது பேச ஆரம்பித்தாலே நன்றி பிரதர். போயிட்டு வாங்க என்று கை குலுக்கி அனுப்பி விடுகிறார். மார்க்கெட்டில் டாப்பில் இருந்தாலும் தினம் ஒரு முறையாவது முன்னணி ஹீரோக்களுக்கு போன் அடித்து நம்மளையும் கவனிச்சுக்கங்க என்று ரிக்வெஸ்ட் பண்ணுகிறாராம் மனுஷன். வாலு நுழையுற இடத்துலதான் தலையும் நுழையும்னு நம்புவான் புத்திசாலி!



# கமலும் கருத்தும்...

ஒரு படம் கருவிலிருக்கும் போதே ஏறத்தாழ தெரிந்துவிடும், உள்ளேயிருப்பது காக்கையா, அன்னமா என்று! அப்படி தெரிந்து கொண்டு பலராலும் போற்றப்படும் படம்தான் மைனா. நடிகர் கமல், டைரக்டர்கள் பாலா, இராம.நாராயணன் போன்ற சாதனையாளர்கள் பார்த்து வியந்து போன இந்த படத்தை பற்றி ஒரு லேட்டஸ்ட் தகவல்.

இந்தப்படத்தின் க்ளைமாக்ஸ் குறித்துதான் படம் பார்த்த எல்லாரும் சில கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்களாம் இயக்குனர் பிரபு சாலமனிடம். அதிலும் கமலின் கருத்து சாலமனை சற்றே குழப்பியும் விட்டிருக்கிறது.

இவ்வளவு அழுத்தமான க்ளைமாக்சை மக்கள் மனம் தாங்கி ஏற்றுக் கொள்வார்களா? ரத்தமும் சதையுமான ஒரு படத்தில் ரணமும் வலியும் இருப்பது சகஜம்தான் என்றாலும் அது கொஞ்சம் அளவுக்கு மீறியதாக இருக்கிறதோ என்று தனது ஐயத்தை தெரிவித்தாராம் கமல். முடிந்தால் க்ளைமாக்சை மாற்றுங்கள் என்று அவர் சொன்னதாகவும் தகவல் கசிகிறது. ஆனால், இந்த முடிவில் பிரபு சாலமன் பிடிவாதமாகவே இருக்கிறாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# KESAVAN LAW OFFICE

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும் சந்திக்கலாம்

## சட்டம் சம்பந்தமான சகல தேவைகளுக்கும்
## கேசவன் சட்ட நிறுவனம்

## THANGAVEL M. KESAVAN
**(Barrister & Solicitor)**

- Real Estate
- Business Law
- Immigration Law
- Family Law
- Last Wills
- Power of Attorney
- Affidavits

5200 Finch Ave. East, Unit 302, Scarborough, ON M1S 4Z5 (Middlefield & Finch)

Tel: 416 754 9843 Fax : 416 754 2362 E-mail : Kesavanlawoffice@bellnet.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள் மலர்கின்றன...

தமிழ் செம்மொழி மகாநாட்டுக்கான அறிவித்தல் வந்த பொழுது என் நினைவலைகளில் 1949 ஆம் ஆண்டினிலே யாழ்ப்பாணத்தில் நடந்த 4வது தமிழ் மகாநாடு ஞாபகத்திற்கு வந்தது.

தமிழுக்கும் மூன்றுக்கும் இடையே ஒரு அசாதாரண பொருத்தம் இருப்பதை உணரலாம். முத்தமிழ் என்பார்கள்... கடைச்சங்கம், இடைச்சங்கம் முதற்சங்கம் என மூன்று தமிழ் சங்கங்கள் இருந்ததாகக் கூறுவார்கள். இப்போது கூட மூன்று தமிழ் மகாநாடுகள். தமிழகத்தினைக் காங்கிரஸ் ஆட்சி செய்த காலத்தில் அவினாசிலிங்கம் செட்டியார் தலைமையிலான தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தமிழ் விழா முதலில் தோன்றியது. அதனைத் தொடர்ந்து தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியின் போது அண்ணாவின் தலைமையிலும் அதனைத் தொடர்ந்து எம்.ஜி.ஆர், அதன் பின்னர் ஜெயலலிதா தலைமையிலும் தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகள் நடந்துள்ளன. இப்போது இறுதியாக கலைஞர் தலைமையில் தமிழ் செம்மொழி மகாநாடு என மூன்று வகையான மகா நாடுகள்.

1949ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்விழா நான்காவது மகாநாடு. யாழ்ப்பாணம் பரமேஸ்வராக்கல்லூரி வளாகத்தில் மூன்று நாட்கள் வெகு விமரிசையாக நடைபெற்றது. 1947ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிலே அன்று வீசிய தமிழ்காங்கிரஸ் அலையினைத் தாக்குப் பிடிக்க முடியாமல் திரு. செல்வநாயகத்திடம் காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வி கண்டவர் முன்னாள் மந்திரியும் சேர் பொன். இராமநாதன் அவர்களின் மருமகனுமாகிய திரு. சு. நடேசபிள்ளை அவர்கள். நடேசபிள்ளை அவர்கள் தலைசிறந்த தமிழ் அறிஞர். மிக அழகாகத் தமிழ் பேசும் ஆற்றல் உடையவர். அவரது வேண்டுகோளின் பிரகாரமே தமிழ்வளர்ச்சிக் கழகம் யாழ்ப்பாணத்தில் நான்காவது தமிழ் விழாவினை வைப்பதற்குச் சம்மதித்தது.

புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை, அருட் தந்தை தனிநாயகம் அடிகளார் ஆகியோருடன் பரமேஸ்வராக் கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியரான திரு. சிதம்பரப்பிள்ளை மற்றும் தமிழாசிரியரான வித்துவான் வேந்தனார் மட்டுமே. ஆனால் தமிகத்தில் இருந்தோ, பன்மொழிப்புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரம், டாக்டர். மு. வரதராசனார், சொல்லின் செல்வர் ரா.பி சேதுப்பிள்ளை, பேராசிரியர் ஸ்ரீனிவாசராகவன், சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞான கிராமணியார், திருமதி இராஜாம்பாள் தேவதாஸ், எழுத்தளர் டாக்டர் திரிபுரசுந்தரி (லஷ்மி), குன்றக்குடி அடிகளார் ஆகியோர் வந்திருந்தார்கள்.

தமிழ்நாட்டு அறிஞர்கள் யாபேரும் ஏதோவிதத்தில் எனக்குப் பரிச்சயமானவர்கள். பெரும்பான்மையோரின் நூல்கள் வாசித்திருந்தேன். மொழி நடை மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது. சேதுப்பிள்ளயின் 'வீரமாநகர்' அழகு தமிழ் எதுகை மோனை கவிதை நயத்துடன் மிளிர்ந்தது. ம.பொ.சியின் 'கப்பலோட்டிய தமிழன்' உணர்ச்சிப் பிளம்பு. தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரின் 'பிறந்தது எப்படியோ' பிள்ளையார் பற்றி அவர் கூறியது சிந்திக்க வைக்கவல்லது. ஆகவே இவர்கள் யாவரது உரைகளையும் நான் தவற விடத்தயாராயில்லை. காலையிலேயே பேருந்து எடுத்து போய் கொட்டகையுள் உட்கார்ந்து விடுவேன். கோடை காலம் என்பதால் வியர்க்கும். இரண்டாம் நாள் கரிசனமாய் பனை ஓலை விசிறிகள் தந்தார்கள். ஒருவர் விசுக்கியபோது அருகில் இருப்பவருக்கும் காற்று விழுந்தது.

முதல் நாள் விழா திருவுடைமருதூர் வீருசாமிப் பிள்ளையினுடைய நாதஸ்வரக் கச்சேரியுடன் ஆரம்பமானது. தொடக்க உரை நிகழ்த்துவதற்குப் பிரபல விஞ்ஞானியாகிய R.S கிருஷ்ணனை அழைத்திருந்தார்கள். அவர் வராமையால் அதனை குன்றக்குடி அடிகளார் நிகழ்த்தினார். அன்று இரவு திருமதி. M. L வசந்தகுமாரி அவர்களது இன்னிசைக் கச்சேரி நடந்தது. அவர் அப்போது தான் திருமணம் செய்திருந்தார். ஆகவே அவருடன் கணவர் விகடன் கிருஷ்ணமூர்த்தியும் வந்தருந்தார்.

## "தலைவருக்காகத் தமிழன் காத்திருக்கமாட்டான்..."

தமிழ் வளர்ச்சிக் கழகத்தினது இணைச் செயலாளர்களாக திரு. பெரியசாமித்தூரன் அவர்களும், பேராசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களும் கடமையாற்றினர்.

எனக்கு அப்போது பதின்மூன்று வயது. மூன்று நாட்களும் சென்று விழாவினைக் கண்டு களித்தேன். நான் தனியேதான் செல்வேன். எனக்கு நண்பர்கள் பெரிதாக இருந்தது இல்லை. உள்ளவர்களும் என்னைப் போல் இப்படியான கூட்டங்களுக்குச் செல்வதற்கு அவாவுள்ளவர்களாக இருந்ததில்லை. ஆகவே நான் தனியேதான் செல்வேன். எங்கள் வீட்டைப் பொறுத்த மட்டிலே, அது சிதம்பரமோ, மதுரையோ என யாராவது கேட்டால் மதுரை என்றே சொல்ல வேண்டும். அம்மா தன் தீர்மானங்களை எடுப்பார். ஆகவே அம்மாவின் உத்தரவு கிடைத்தால் எனக்குப் பிரச்சினை இல்லை. தமிழ் விழா என்றமையால் அம்மா பச்சைக் கொடி காட்டிவிட்டார்.

அந்த விழாவிலும் ஓரளவு அரசியல் இருக்கவே செய்தது. தமிழ்நாட்டில் இருந்த பிரபல பேச்சாளர்கள் அத்தனை பேர்களையும் காண முடிந்தது, தி.மு.கவினரைத் தவிர. இலங்கையைப் பொறுத்த மட்டிலே நடேசபிள்ளையைத் தவிர பண்டிதமணி, கணபதிப்பிள்ளை, சோ. இளமுருகனார், முதுதமிழ்ப்புலவர் நல்லதம்பி மற்றும் மட்டக்களப்பின்

எனது நினைவில் இன்றும் பசுமரத்தாணி போன்று நிற்பது இரண்டாம் நாள் மதியம் நடந்த நிகழ்ச்சி. அன்று மதிய போசனத்திற்குப் பின்னர் சொல்லின் செல்வர் ரா.பி சேதுப்பிள்ளை தலைமையில் அருட்தந்தை தனிநாயகம் அடிகளார் பேசுவதாக இருந்தது. மதிய போசனம் முடிந்தது. தலைவர் வரக் காணவில்லை. தனிநாயக அடிகளார் மேடையில் வீற்றிருந்தார். ஆகவே திரு. நடேசபிள்ளை அவர்கள் மேடையில் ஏறி தலைவர் வந்து கொண்டிருக்கிறார். அவர் வரும் வரை தாமதிக்காமல் அடிகளார் பேசட்டும். தலைவர் உரை பின்னர் நடக்கும் என்றார். அடிகளார் அவர்கள் 'Tamil Culture' என்ற ஆங்கில காலாண்டு சஞ்சிகையை நடத்தி தமிழ் அறியாதோருக்கும் தமிழின் பெருமையைப் பறை சாற்றிக் கொண்டிருப்பவர். அருமையான உரை நிகழ்த்தினார். தலைவர் அவர்கள் அடிகளார் உரை நிகழ்த்தும் போது வந்துவிட்டார். ஆகவே அடிகளாரின் உரை முடிந்த பின்னர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமை உரை நிகழ்த்தினார். தான் தாமதமாக வந்தமைக்கு மன்னிப்புக் கோரியவர் தலைவருக்காகத் தமிழன் காத்திருக்கமாட்டான் எனப் பெருமையாகக் கூறியபின்னர் தனிநாயக அடிகளாரைப் பார்த்து, "அவரோ தனிநாயகம். பின்னர் அவருக்கேன் ஒரு சபாநாயகம்" என்றார். அவை கரகோசத்தால் வானைப் பிளந்தது. சொல்லின் செல்வர் சொல்லின் செல்வரே. ●

பொ. கனகசபாபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்றும் பசுமை நிறைந்த உடன் மரக்கறி

# NEW SPI

## SUPER

Fast, Friendly and




எம்மிடம் **Shopping** செய்திடுங்கள்
வாகனத்திற்கு சொந்தக்காரராகிடுங்கள்

செப்டெம்பர் 12ம் திகதி முதல் டிசெம்பர் 31ம் திகதி வரை
$25 இற்கு மேல் எம்மிடம் கொள்வனவு செய்து
ஜனவரி 1, 2011 அன்று இடம்பெறும் மாபெரும் சீட்டிழுப்பில்
பங்குபற்றி கார் (Honda Civic 2011 DXA) ஒன்றினை
பரிசாக பெற்றுக்கொள்ளுங்கள்.

எந்தவொரு கிளையிலும் கொள்வனவு செய்து
சீட்டிழுப்பில் பங்கு பெறலாம்.





உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள், உடன் மரக்கறி, இ

**இரண்டு கிளைகளிலும் ஒரே விலையி**

**6065 Steeles Avenue East, Scarborough, Ontario M1X 0A8 (M**
**5790 Sheppard Ave. E, Unit 4,5 & 6 Scarborough**
Email: info@newspiceland.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

, மீன், இறைச்சி வகைகளில் ஓர் புரட்சி”

# CELAND
# MARKET

Efficient Service




## செலவழியுங்கள் ! சேமியுங்கள் !

தமிழர் வர்த்தகத்தில் புதிய அறிமுகம் **Points Card.**
எம்மிடம் பொருட்கள் வாங்கும் போது
நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு டொலருக்கும்
ஒரு புள்ளியினை பெற்று
நாம் வழங்கும் சலுகைகளைப் பெற்றிடுங்கள்.

**Points Card ஐ எந்தவொரு கிளையிலும் பாவிக்கலாம்.**








றைச்சி, மீன் வகைகள்மற்றும் பூஜைக்கான பொருட்களையும் பெற்றுக்கொள்ள எங்களிடம் வாருங்கள்.

ல் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்!

arkham & Steeles) Tel: 416 292 9769 Fax: 416 335 3032
N M1B 5J6 Tel: 416 292 9769 Fax: 416 292 9709
Web: www.newspiceland.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூர்யாவுடன் ஜோடி சேரும் எமி!



குஷ்புவுக்கு கோவில் கட்டி ரசித்தவன் தமிழன். அந்தளவுக்கு இதயம் கவர்ந்த நாயகிகளை இப்போதெல்லாம் பார்க்கவே முடிவதில்லை. இன்டஸ்ட்ரிக்கு வந்து முதல் படம் முடிந்த கையுடன் மூட்டை முடிச்சை கட்டிக் கொண்டு கிளம்புகிற அளவுக்குதான் அமைகிறது வாய்ப்புகள். இதில் நயன்தாரா, த்ரிஷா, அனுஷ்காவெல்லாம் கொஞ்சம் அழுத்தசாலிகள்தான்.

இவர்களது இடத்தை பிடிக்கிற முழு தகுதியும் இருக்கிறது என்று சமீபத்தில் அனைவராலும் வியக்கப்பட்ட நாயகி எமி ஜாக்சன். மதராசப்பட்டினம் பட நாயகி. 'அந்த பொண்ணு அடுத்தா என்ன படத்துல நடிக்குதாம்' என்று கேள்வி மேல் கேள்வி கேட்டவர்களில் காதில் தேன் வந்து பாய்கிற செய்தி விரைவில் சூர்யாவுடன் ஜோடி சேர்க்கிறார் எமி.

'எனக்கு தமிழ்நாடு ரொம்ப பிடிச்சுருக்கு. நல்ல சான்ஸ் வந்தா நான் இங்கேயே செட்டில் ஆயிருவேன்' என்றெல்லாம் ஆசை தெரிவித்த எமி, இந்த வாய்ப்பை கெட்டியாக பிடித்துக் கொண்டாராம். எமியை இங்கே வரவழைத்தவர் விஜய் என்றால் வாழ வைத்தவர் கவுதம் மேனன். இவர் இயக்கப் போகும் படத்தில்தான் சூர்யாவுக்கு ஜோடியாகிறார் எமி.



# ஷங்கரின் அதிர்ச்சியூட்டும் முடிவு

எந்தத் தொழிலாக இரந்தாலும் வரவு – செலவுக் கணக்கு பார்த்தால்தான் வியாபாரம் நிலைக்கும். இந்த வரவு செலவு கணக்கை கொஞ்சம் லேட்டாகப் பார்த்திருக்கிறார் ஷங்கர்.

ஒரு பக்கம் இமய மலையை கட்டி இழுத்துட்டு வர்ற மாதிரி "எந்திரன்" வேலைகளில் பிசியா இருந்தவர், தன்னுடைய எஸ் பிக்சர்ஸ் சார்பாக படம் தயாரித்த வகையில் சம்பாதித்தது என்ன என்று கணக்கு போட்டார். பேரும் புகழும் தந்தாலும் அதிர வைத்தது கணக்கு. சுமார் ஒன்பது கோடி நஷ்டம். அதுவும் முக்கியமான மூன்று படங்களில்!

இனிமேலும் கம்பனியை தொடர வேண்டுமா என்ற முடிவுக்கு வந்த ஷங்கர், அனந்தபுரத்து வீட்டோடு கம்பனிக்கு பூட்டு போடுவதாக முடிவெடுத்திருக்கிறாராம். அவசரம் வேண்டாம் என்று கூறும் அளவுக்கு யாருக்கும் தைரியம் இல்லை என்பதால் பூட்டும் சாவியும் தயாராகிக் கொண்டிருக்கிறது எஸ் பிக்சர்சுக்கு!

# விஜய்யின் ராஸ்கல்!



நவம்பர் முதல் வாரத்தில் ஷூட்டிங் போகலாம் என்று தீர்மானித்திருக்கிறார்கள் த்ரி இடியட்ஸ் படத்தின் ரீமேக்கான தமிழ் படத்திற்கு. இதில் விஜய், தமன்னா, ஜோடியாக நடிக்கிறார்கள் என்பதும், ஷங்கர் இயக்குகிறார் என்பதும் பரவலாக அறியப்பட்ட செய்திதான்.


இப்படத்திற்கு 'ராஸ்கல்' என்று பெயர் வைத்திருக்கிறாராம் ஷங்கர். இதற்கிடையில் விஜய் ரசிகர்கள் சந்தோஷப்படுகிற அளவுக்கு தனது பட ரிலீஸ்களை பிளான் பண்ணியிருக்கிறார் அவர். வருகிற தீபாவளிக்கு காவலன் திரைக்கு வருகிறான். வேலாயுதம் பொங்கலுக்கு.

ரசிகர்களின் சம்மர் விருந்துதான் இந்த ராஸ்கல். இதற்கிடையில் சீமானின் பகலவன் படத்திலும் நடிக்க முழு வேகத்துடன் இருக்கிறார் விஜய். இப்படத்தின் திரைக்கதை வசனத்தை சிறைக்குள்ளேயே எழுதி முடித்துவிட்டார் சீமான்.

விஜய்யின் இந்த மின்னல் வேகப் பாய்ச்சலுக்கு ஒரு காரணம் இருக்கிறது. தமிழ்சினிமாவில் ரஜினி கமல் தவிர்த்து தான் மட்டுமே டாப்பில் இருக்க வேண்டும் என்பதுதான் விஜய்யின் எண்ணம். கடந்த சில படங்களின் தோல்வி அவரது ரேங்க்கை சற்று கீழே இழுத்திருக்கிறது. அதை சமன்படுத்த வேண்டும் என்பதற்காகதான் இந்த பாய்ச்சல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் திரையுலகில் வெற்றிப்பட இயக்குநராக வேண்டுமா?

உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டியது...

**ஹாலிவுட் திரைக்கதை + சிறிது தமிழ் கலாச்சாரம் + ஆறு பாடல், மூன்று சண்டைக்காட்சி + இளமையான ஹீரோயின் = சுப்பர் ஹிட் தமிழ் திரைப்படம்**

## இதோ சில முன்னுதாரணங்கள்...




2000





2005





1998





2002




2005




2007




1985





1997




2009




2010




2002




2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




We are always there to determine your both current financial mortgage needs and future personal needs...

**VINCE SINNADURAI - 416 917 9462**
Senior Accounts Manager - Residential Mortgages

**MIKE AHILAN - 416 220 1184**
Senior Accounts Manager - Residential Mortgages

**RBC Royal Bank of Canada**
Kennedy & Ellesmere Branch
1421 Kennedy Road, Scarborough, ON M1P 2L6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருஜி

# சொல்லாமலே...



"ரமேஷ் எனக்கு ரொம்ப பயமா இருக்கு. என்னோட பன்ரெண்டாவது வயசில என் அப்பா அம்மா அக்சிடன்டில இறந்தப்போ... என் அண்ணனுக்கு இருபது வயசுதான் இருக்கும். அப்போ இருந்து இப்ப வரைக்கும் எங்கட சொந்தக்காரரோட எந்தவித உதவியும் எதிர்பார்க்காம, எனக்கு எந்தவிதமான குறையும் வைக்காம, நான் விரும்பினது எல்லாத்தையும் என் அண்ணா எனக்கு செய்து தந்தவன்... ஆனா உங்க விசயத்தில மட்டும் அண்ணனுக்கு ஏன் இவ்வளவு கோபம் என்று தான் எனக்கு விளங்கமாட்டேங்கிது. அவனுக்கு நல்லாத் தெரியும், நான் உங்கள மனசார விரும்புறன் என்று... அத்தோட காதலுக்கு அவன் எதிரியும் இல்ல. ம்...நீங்க ரெண்டு பேரும் சந்திச்ச சூழ்நிலையோ என்னவோ... உங்க பேரைக் கேட்டாலே அவனுக்கு வாற கோபம் இருக்கே... யப்பா..." என்று சலித்துக் கொண்டாள் நிவேதிகா.

"உங்க அண்ணனை என்னால புரிஞ்சுக்க முடியும் நிவே... அவருக்கென்று ஒரு வாழ்க்கையை அமைச்சுக்காம உன்னை கண்ணும் கருத்துமா பார்த்துக்கிற ஒருத்தர்... அவ்வளவு ஆசையா உன் பிறந்த நாளுக்கு அந்த கமராவை வாங்க வரும் போது, நானும் உனக்கு gift தர அதே கமராவ வாங்கப்போனதும், அந்தக் கடையில வேற stock இல்லாம ஒரு கமராக்கு இரண்டு பேரும் சண்டை போட்டதும்... ஏதோ ஒரு சினிமா பார்த்த மாதிரி இருக்கு எனக்கு. தன்னோட தங்கை ஆசையா கேட்டதை வாங்கிக்குடுக்க தடையா இருந்த என்மேல கோவம் வாறது சகஜம். அத ஈசியா மாத்திடலாம்... ஆனா எங்கப்பா... அம்மாவுக்கு அப்புறம் இந்த சித்தி கொடுமை அது இது என்று கல்யாணமும் பண்ணிக்கல, அதே நேரம் அவரா ஒரு கற்பனைய வளர்த்துக்கிட்டாரு... தான் பாத்து கட்டிவைக்கிற பொண்ணுதான் நல்லவ, நான் லவ் பண்ணினா அந்தப் பொண்ணு எங்க ரெண்டுபேரையும் பிரிச்சிருவா என்று... இதத்தான் எப்படி மாத்திறது என்று எனக்குத் தெரியல" என்றான் ரமேஷ்.

"ரமேஷ், இந்த வீட்ட விட்டு ஓடிப்போறத்துக்கெல்லாம் நான் வரமாட்டேன். நாமளும் சந்தோசமா இல்லாம, அவங்களும் சந்தோசமா இல்லாம... நான் தற்கொலை பண்ணிக்கிட்டாலும் பண்ணிப்பனே தவிர இந்தக் கொடுமைக்கு சம்மதிக்கமாட்டன்" என்றாள் நிவேதிகா.

"நிவே... முட்டாள் மாதிரி பேசாத... உனக்கு மூளையே இல்லையா? வீட்ட விட்டு ஓடிப்போறத்துக்கும் நீ தற்கொலை பண்ணுறத்துக்கும் என்ன சம்பந்தம். ஒரு விசயத்த நல்லா புரிஞ்சுக்கோ... உன்ன வீட்ட விட்டு வா என்று நான் கூப்பிட மாட்டன். நமக்கு ஒரு நல்ல காரியம் நடந்தா அது நம்ம இரண்டு வீட்டுக்காரரோட சம்மதத்தோடயும் தான் நடக்கும். அடுத்தது நீ உன் சுயநலத்தால தற்கொல பண்ண... நான் பைத்தியக்காரனா அலைய... உங்க அண்ணன் நீ செத்த துக்கம் தாங்காம அவனுக்கு ஏதாவது நடக்க... என் பிள்ள இப்படி ஆயிட்டானேன்னு எங்கப்பா... இதுமட்டும் நல்லாவா இருக்கு." என்று கூறிய ரமேஷ்... "முதல்ல உங்க அண்ணாவை சமாதானப்படுத்துவோம்... அதுக்குப்பிறகு எங்கப்பாவுக்கு ஒரு ஷாக் ரீட்மண்ட் குடுக்க எல்லாம் சரியாயிடும். அந்த ஷாக் ரீட்மண்ட் என்ன என்று எனக்குத் தெரியும். இந்த சனிக்கிழமை உங்க அண்ணா வீட்டில தானே இருப்பான். நான் வந்து அவனோட பேசுறன். பிறகு மிச்சத்த பாப்பம். அதுவரைக்கும் ரெண்டுபேரும் சந்திச்சுக்க வேண்டாம். சனிக்கிழமை உங்க அண்ணா கூட பேசினதுக்கப்புறம் சந்தோசமா இதே இடத்தில சந்திப்பம். எதுக்கும் யோசிக்காத கண்டிப்பா நல்லதே நடக்கும்... ஓ.கேயா? பை.. பை" விடைபெற்றான் ரமேஷ்.

இரண்டு நாட்கள் இரண்டு யுகமாய் நகர சனிக்கிழமை காலையிலேயே நிவேதிகாவின் அண்ணன் ராஜாவைச் சந்திக்கச் சென்றான் ரமேஷ். வாசற்கதவு திறந்திருக்க ரமேஷ் கண்ட காட்சி அவனை நிலைகுலைய வைத்தது. ரமேஷைக் கண்டதும் கோபத்தோடு வெளியே வந்த ராஜா, "டேய் உன்னால தாண்டா என் தங்கச்சிக்கு இந்த நிலமை. அழகா சிரிச்சுக் கொண்டிருந்தவளை, அவ படத்துக்கு மாலைய போட்டு சுவரில மாட்ட வைச்சிட்டியே... உன்ன சும்மா விடமாட்டன்..." என்று கத்தியவாறு ரமேஷின் சேட்டைப் பிடித்தான்.

ரமேஷின் வெறித்த பார்வை ராஜாவின் கைகளை உதாசீனப்படுத்த, எல்லாவற்றையும் இழந்த பார்வையும் நடையும் அவனது காரை நோக்கிச் செல்ல அந்தப் பார்வையிலும் நடையிலும் ஸ்தம்பித்து நின்றான் ராஜா.

உள்ளேயிருந்து ஓடிவந்த நிவேதிகா, "பாத்திங்களா அண்ணா... அவன் எப்படி ஆயிட்டான் என்று. இப்பவாவது உங்களுக்கு புரியுதா அவன் என்ன எவ்வளவு லவ் பண்ணுறான் என்று" என்றவளிடம், "என்ன மன்னிச்சிரம்மா... நான் முதன் முதலா கண்ட ரமேஷுக்கும் இந்த ரமேஷுக்கும் நிறைய வித்தியாசம்.

**அவ படத்துக்கு மாலைய போட்டு சுவரில மாட்ட வைச்சிட்டியே...**

அவன் கண்டிப்பா உன்ன நல்லா வைச்சிருப்பான். அவனத்தவிர வேற யாராலயும் உன்ன நல்லா வைச்சிருக்க முடியாது. உடன அவனுக்கு கோல் பண்ணம்மா" என்ற அண்ணனைப் பார்த்து கண்சிமிட்டி, "இல்லண்ணா... அவன் இப்ப எங்க போறன் என்று எனக்குத் தெரியும். வாங்க ரெண்டுபேரும் அங்க போய் அவனுக்கு ஒரு ஷாக் குடுப்பம். அவன் எப்படி ஷாக் ஆகிறான் என்றத நான் பாக்கனும்" என்ற நிவேதிகாவைப் பார்த்து சிரித்தவாறு காரை ஸ்டாட் செய்தான் ராஜா.

அவர்கள் மீண்டும் சந்திப்போம் என்ற இடத்திற்கு சென்ற நிவேதிகா, தூரத்தில் ரமேஷின் காரைக் கண்டவுடன், "பாத்திங்களா அண்ணா.. நான் சொன்னன்" என்றவாறு காரில் இருந்து அவசரமாக இறங்கி அவர்கள் வழக்காமாக உட்காரும் 'பெஞ்சை' நோக்கி ஓடினாள். மூச்சிறைக்க ரமேஷ் முன் போய் நின்றவள் "ஹாய் ரமேஷ்... எப்படி...?" என்றவள் உறைந்துபோனாள். அருகே விஷ போத்தல் சிதறிக்கிடக்க உயிரற்றவனாய் இருந்தான் ரமேஷ்! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Marriage

by: Aarathi

**Commitment, compromise, acceptance, space, forgiveness, respect, possessiveness and re-assurance**

For love to end in marriage is a blessing. Not all love end in marriage. That doesn't mean the concern persons weren't in love.

Marriage is a commitment to oneself and acceptance of forth coming responsibilities.

This is the day when reality starts (living in one roof). First few months, which is the so- called honeymoon period, is always sweet and rosy for most people. As always, there are few exceptions as well.

What is marriage? It's the start of new relationship with someone chosen by oneself or by the family with the hope that it would be an ideal union.

**Commitment**

It's the commitment of one to another person, and it's always mistaken to be a commitment to a spouse. To lay a strong foundation for a happy married life everyone has to first commit themselves to this relationship.

It is like, for good success in carrier we commit ourselves to our job.

**Compromise**

Both parties of marriage have to compromise. Taking turns helps relationship grow. Taking turns applies to grown up too.

**Acceptance**

Reality comes to light when we start living under the same roof. (Marriage) Accepting the partner's family as they are is the first step. Accept your partner as he or she is, because that's the way friends are.

That is the time when all the rough side of each other comes up. Accept yourself and the other. It might be tough, but again, if there is love you can do it.

**Space**

Space is needed in every relationship whether it be with the son, daughter, husband, wife, mother, father or anyone else. In an intimate relationship space is very important. Allow your spouse a guy's night or a gal's shopping day. Everyone need to have their own kind of fun which other might not even be interested in.

**Forgiveness**

It's human nature to make mistakes. We learn by mistakes. Forgive each other and forgive yourself too, if you were the cause for the mistake. Forgiving and letting it go is important. Don't start over from the first point where it started.

**Possessiveness**

It's usually like, if you love a person you tend to be possessive of that person. Wake up girls and boys. Everyone is possessive of somebody, but it should always be under control without going to excess.

**Re-assurance**

Usually when we get married we stop saying 'I love you' to our spouse.

Do not stop anything which you were doing when you were in love. Continue whatever you did and integrate marriage into it and then see how beautiful life is.

**Sex**

For a relationship between couples to lay the foundation for a new family, sex is a must. Rather, making love is a must. Good sexual life will make relationships stronger.

Share your thoughts with your partner. Don't stop exploring. Respect each other's feelings.

Marriage is all about adjusting to a new life and starting up a family. Anything new is exciting and thrilling in the start and tougher in the middle and comfort in the progress.

So, try and see how you handle marriage with an open mind. When it comes to marriage, I always say, marry the person you love for healthy relationship. Chemistry is very important.

Always think from other's position before saying anything gross. It might be tough to put into practice, but it's worth it.

## How to make a marriage strong? These few points are very important

✓Love ✓Acceptance ✓Commitment ✓Compromise ✓Space ✓Make love ✓Forgive and forget



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# • கேள்வி-பதில் •

# மருத்துவ மகத்துவம்

டாக்டர் போல் ஜோசெப்
முன்னாள் பேராசிரியர் : தமிழ்நாடு டாக்டர். எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்லூரிகள்
ஹோமியோபதி மருத்துவம், அக்குப்பங்சர் சிகிச்சை சிறப்பு நிபுணர்.

**• கொஞ்ச நாளாக கொழுப்பு அதிகம் என்று என்னுடைய குடும்ப மருத்துவர் கூறியுள்ளார். அதற்கு முதலே என்னுடைய மனைவியும் அடிக்கடி சொல்லுவார் கொழுப்பு அதிகம் (வாயில்) என்று. உங்களின் ஆலோசனையை எதிர்பார்க்கிறேன்.**

லிங்கம்-ரொரன்ரோ

கொழுப்பு, கொலஸ்ரோல் கொஞ்சம் கொஞ்சமாக கூடினால் கொலைக்களம் நோக்கிய பயணம் தொடங்கிவிட்டது என்று அர்த்தம். நண்பரே என்ன இப்படி பயமுறுத்துகின்றேன் என்று எண்ணுவது எனக்குப் புரிகிறது. ஆனால் உண்மை இதுதான். கொழுப்பில் பல வகையுண்டு. இதில் முக்கியமாக மூன்றுவகை. HDL, LDL, TGL என்பதாகும். HDL நல்ல கொழுப்பு என்றும், LDL கெட்ட கொழுப்பு என்றும் சொல்லலாம். நல்ல கொழுப்பு கொஞ்சம் அதிகம் இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் கெட்ட கொழுப்பு அதிகமானால் கெட்டகாலம் தான். அதோடு TGL என்ற கொழுப்பும் சேர்ந்து கொண்டால் மாரடைப்பு என்பதை மாற்ற முடியாது. இது ஏன்? எப்படி? என்ன செய்கிறது என்ற மருத்துவ ஆராய்ச்சியை விபரிப்பதைவிட இதிலிருந்து விடுபட வழிகளை சொல்லுகிறேன் பயன்படுத்திப் பாருங்கள். நீங்கள் இலகுவாக நினைவில் வைத்துக்கொள்ள மூன்று மூன்றாகத் தருகிறேன்.

- பொரியல், கரியல், வறுவல் தவிர்த்தல்
- பால், நெய், பாலாடைக்கட்டி வேண்டாம்.
- ஆடு, மாடு, பன்றி வேண்டவே வேண்டாம்.
- உப்பு, கொழுப்பு, இனிப்பு இனி வேண்டாம்.
- Hurry, Curry, Worry கனவிலும் வேண்டாம்.
- புகை, மது, உடற்பருமன் - என்றுமே எதிரிகள்.
- மார்பில் அழுத்தம், படபடப்பு, இளைப்பு - ஆரம்ப அறிகுறிகள்.
- மார்பில் வலி, வியர்வை, நெஞ்செரிச்சல் - மாரடைப்பின் அறிகுறிகள்.
- மாரடைப்பு, உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு -இவை கொழுப்பின் உடன் பிறப்புகள்.
- பழங்கள், காய்கறிகள், முளைகட்டிய விதைகள் - இதயத்தின் காவலர்கள்.
- தியானம், யோகா, பிராணாயமம் - இதயத்தின் ஆசிரியர்கள்.
- நீச்சல், நடை, சைக்கிள் சவாரி - இதயத்தின் தாய்.
- மன அமைதி, மகிழ்ச்சி, நகைச்சுவை உணர்வு - இதயத்தின் காதலி.
- உறக்கம், உழைப்பு, உடலுறவு - இதயத்தின் நல்ல மனைவி.
- பகிர்தல், உணர்தல், உண்மையாயிருத்தல் - இதயத்தின் நல்ல நண்பர்கள்.

**• தாயின் கருவறை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ஜெயவதி-பிரம்டன்

இந்தப் பிரபஞ்சத்திலே மிக அற்புதமானது, மிகவும் அதிசயமானது ஒன்றே ஒன்றுதான். அதுதான் தாயின் கருவறை. இன்னொரு மனிதனைப் படைக்கும் சக்தி கொண்ட அந்தக் கருவறையில் கருக்கள் கலந்து

17வது நாள் - இரத்த அணுக்கள் தோன்றும்.
19வது நாள் - இதயம் உருவாகத் தொடங்கும்.
20வது நாள் - மூளை நரம்புகள் உருவாகத் தொடங்கும்.
30வது நாள் - ஐம்புலன்கள் உருவாகத் தொடங்கும்.
42வது நாள் - எலும்புகள் மற்றும் சிறுநீரகம் உருவாகத் தொடங்கும்.
43வது நாள் - மூளையின் கலங்களில் மின் அதிர்வுகள் உருவாகும்.
56வது நாள் - தோன்றிய உறுப்புகளின் செயற்பாடு தொடங்கும்.
60வது நாள் - இனப்பெருக்க உறுப்புகள் உருவாகும்.
65வது நாள் - சிசுவின் அசைவு தொடங்கும்.
20வது வாரம் - முடி, நகம், பற்கள் தோன்றிவிடும்.
28வது வாரம் - சிசு கண்களைத் திறந்து இருட்டை முதலில் பார்க்கும்.
7வது மாதம் - நூறுவீதம் வளர்ச்சி.
9வது மாதம் (280வது நாள்) புதிய உயிரின் பிறப்பு.
இதுதான் கருவறை செய்யும் அற்புதம்.



**• அன்புள்ள டாக்டர் அவர்களுக்கு வணக்கம். எனது 21 வயது மகளுக்கு, ஆண்களுக்கு இருப்பதுபோல முகத்தில் முடி அதிகமாக இருக்கிறது. மற்றும் கை, கால்களிலும் அப்படியேதான். ஏன் இப்படி?**

ராதிகா-மொன்றியல்

அன்புள்ள சகோதரி, இன்று பெரும்பாலும் பல பெண்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். இதனை மருத்துவத்தில் Hirtutism என்பர். பொதுவாக பலரில் இது பாரம்பரியமாக ஏற்படுகிறது. சிலரில் வேறுபல காரணங்களாலும் உண்டாகிறது. குறிப்பாக பெண்களில் ஆண் இயக்குநீர் சுரப்பு (Male Hormone) அதிகமாக இருப்பதால் இவ்வாறு உரோமங்கள் காணப்படலாம்.

மேலும் PCOS என்ற சினைப்பை நீர்க்கட்டுகள் ஒரு காரணமாக அமையலாம். இதற்கு சிகிச்சை முறையாகச் செய்தால் உரோமங்கள் மறைந்துபோக வாய்ப்புள்ளது. மற்றும் இதற்கு வேறு ஏதாவது வியாதிகளும் காரணமாக இருக்கலாம். அவற்றையும் அதற்குரிய பரிசோதனைகளைச் செய்து தெரிந்து கொள்வது அவசியமாகும்.

மூளைக்கு அடியிலுள்ள பிற்யூற்றரி என்ற கபச்சுரப்பி, கழுத்திலுள்ள தைரொயிற் என்கிற கேடயச்சுரப்பி மற்றும் பால்சுரப்புக் ஹோர்மோன்களான புறோலக்ரின் போன்றவற்றிலுள்ள பிரச்சினைகளும் இதற்கு காரணமாக அமையலாம்.

மாதவிடாய் ஒழுங்கின்மை, அதற்காக எடுக்கப்படும் ஹோமோன் குளிசைகள், உடற்பருமன் அதிகரித்தல், சீரற்ற உணவுப் பழக்கமும் வாழ்க்கை முறையும் இதனோடு நெருங்கிய தொடர்புடையவையாகும்.

வாசகர்களே! உங்கள் மருத்துவக் கேள்விகளை தூறலுக்கு அனுப்பி வையுங்கள். editorial@thooralonline.com · Fax : 416 273 7606



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சினிமா, டான்ஸ்தான் வாழ்க்கை!

# கமல் மகள்

'சினிமாவுக்கு வருவேன். திரைக்கு பின்னால்தான் பணியாற்றுவேன். நடிக்க மாட்டேன்' என்று கமல்ஹாசனின் இளைய மகள் அக்ஷரா கூறியுள்ளார். நடிகர் கமல்ஹாசனின் மூத்த மகள் ஸ்ருதி ஹாசன். 'உன்னைப்போல் ஒருவன்' படத்துக்கு இசை அமைத்ததுடன் 'லக்' படம் மூலம் இந்தியில் அறிமுகமானார். '7ம் அறிவு' படம் மூலம் தமிழில் ஹீரோயினாக அறிமுகமாகிறார். இவரது தங்கையும், கமலின் இரண்டாவது மகளுமான அக்ஷரா. நடனத்தில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்.

அவர் அண்மையில் அளித்த பேட்டி ஒன்றில்:

பலவகை நடனம் கற்றிருக்கிறேன். இதில் சாதிப்பதே என் குறிக்கோள். ஹிப் ஹாப் நடனம் மிகவும் பிடிக்கும். குச்சுப்புடி, பரதநாட்டியமும் கற்றிருக்கிறேன். இதை மேடையில் ஆட மாட்டேன். இந்தியில் 'சொசைட்டி' படத்தை இயக்கும் ராகுல் தோல்கியாவிடம் உதவி இயக்குனராக பணியாற்றுகிறேன். எனது அம்மா சரிகா முக்கிய வேடத்தில் நடிக்கிறார். சினிமா சம்பந்தமாக எந்தப் படிப்பும் படிக்கவில்லை. உழைப்பின் மூலமே அதை அறிய விரும்புகிறேன்.

ஏற்கனவே நண்பர்களுடன் சேர்ந்து 3 விளம்பர படம் இயக்கி உள்ளேன். எப்போதாவது சோர்வாக உணர்ந்தால் அம்மா, அப்பாவிடம் பேசுவேன். நானும் ஸ்ருதியும் சகோதரிகள் மட்டுமல்ல. நெருங்கிய தோழிகள்போல் பழகுவோம்.

நடிப்பில் எனக்கு விருப்பமில்லை. கேமராவுக்கு பின்னாலிருந்து வியக்கத்தக்க படங்கள் இயக்குவேன். நடனம், சினிமா இந்த இரண்டும் இல்லாமல் என்னால் வாழ முடியாது. அப்பாவை இயக்கும் ஆசையும் எனக்கு உண்டு. அவருக்காக ஒரு கதாபாத்திரத்தை நான் உருவாக்குவது கடினம். ஏதோ ஒரு கதாபாத்திரத்தை கொடுத்து நடிக்க வேண்டும் என்று என்னால் அவரிடம் சொல்லவும் முடியாது என்று அக்ஷரா கூறினார்.





# முருகதாசின் வெற்றி நிச்சயம்!

ஒரு சாதாரண உதவி இயக்குனராக நுழைந்து வெற்றிப்பட இயக்குனராகி இன்று தயாரிப்பாளராகவும் உயர்ந்திருக்கிறார் ஏ.ஆர்.முருகதாஸ். வெட்டிப் போட்டாலும் விடைத்துக் கொண்டு திரியாத அவரது பண்புக்கும், எவ்வளவு உயரத்தில் இருந்தாலும் பழசை மறக்காத அவரது நட்புக்கும் கிடைத்த வெற்றி இது என்றே கொண்டாடுகிறது அவரது நட்பு வட்டம்.

"20 செஞ்சரி" ஃபாக்ஸ் தயாரிச்ச படங்களை பார்த்து பிரமிச்சு போனவன் நான். அவங்களோட சேர்ந்து படம் தயாரிக்கிற வாய்ப்பு கிடைச்சது ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு. இந்தி கஜினி பார்த்துட்டு என்னை அழைத்து, சேர்ந்து படம் பண்ணலாம்னு சொன்னாங்க. நான் மீண்டும் தமிழ் படம் இயக்கணும்னு ஆசைப்பட்டேன். அதனால் இப்ப என்னால பாலிவுட்ல படம் பண்ண இயலாதுன்னு சொன்னேன். அப்படின்னா நாம சேர்ந்து படம் தயாரிக்கலாம்னு சொன்னாங்க. எவ்வளவோ டேலண்ட்டான இளைஞர்கள் வாய்ப்பு கிடைக்காம அலைஞ்சுட்டு இருக்காங்க. அவங்களுக்கும் இவங்களுக்கும் நடுவில நான் ஒரு பாலமா இருக்கேன் அவ்வளவுதான்.

பொதுவா இந்த மாதிரி வர்ற கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சுது. அதுக்கு காரணம் எங்கிருந்தோ வந்திருக்காங்க. படம் எடுத்தா போதும்னு ஏதாவது ஒரு படத்தை எடுத்து கொடுத்து அத்துடன் அனுப்பி வச்சிடுறோம். அந்த மாதிரி இந்த வாய்ப்பு அமைஞ்சுரக் கூடாது. அவங்க தொடர்ந்து படம் எடுக்கணும். நிறைய பேருக்கு வாய்ப்பு கொடுக்கணும் என்ற நோக்கத்தில் அவசரப்படாம நிதானமா இந்த கதையை தேர்ந்தெடுத்தேன்.

முதல் படத்தில் விமல், ஜெய் இருவரும் ஹீரோவாக நடிக்கிறாங்க. என்னுடன் தினா படத்திலிருந்து அசிஸ்டென்ட் டைரக்டராக வேலை பார்த்த சரவணன் இயக்குகிறார். ஹீரோயின் தேர்வு நடந்துகிட்டு இருக்கு. பெரிய பெரிய ஹீரோக்களை மட்டுமே வச்சு படம் எடுத்த இந்த நிறுவனம், என்னோட சேர்ந்து கதையை மட்டுமே ஹீரோவாக நினைச்சு படம் எடுக்க வந்திருக்காங்க. அவங்களுக்கு வெற்றி நிச்சயம்" என்றார் முருகதாஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Barrister & Solicitor

# DILANI GUNARAJAH



Languages : Tamil, Sinhala & English

- **Real Estate** (Residential & Commercial - Purchase, Sale, Mortgages)
  வீடு, வர்த்தக நிலையம், வாங்குதல், விற்றல், அடைமானம் வைத்தல்
- **Family Law** (Divorce, Custody, Agreements, Support)
  குடும்பம் தொடர்பான வழக்குகள், விவாகரத்து, பிள்ளைகள் பராமரிப்பு
- **Business Law** (Purchase, Sale, incorporation)
  வாணிபச்சட்டங்கள் சம்பந்தமான விடயங்கள்
- **Estate Law** (Continuing Power of Attorney for Property / Personal Care, Wills, Estate Administration)
  உயில் தத்துவப்பத்திரம் சம்பந்தமான விடயங்கள்
- **Immigration Law**
  ( Refugee Claim, Appeal, Humanitarian & Compassionate applications, sponsorship, Group Sponsorship, Sponsorship appeal, Skilled worker)
  குடிவரவு, அகதி நிலை, விண்ணப்ப விசாரணைகள், மேல்முறையீடுகள், மனிதாபிமான அடிப்படை விண்ணப்பங்கள், ஸ்பொன்சர் சம்பந்தமன சகல விடயங்களும், ஸ்பொன்சர் சம்பந்தமான மேல் முறையீடுகள், புள்ளிகள் அடிப்படையில் குடிவரவு

**2401 Eglinton Ave, E. Suite # 210, Toronto, ON M1K 2N8**
(South West Corner of Kennedy & Eglinton)

**Tel: 416 755 7777 / 416 321 2956 / 416 288 8701**

**Fax: 416 288 8633 - Email: dilani@bellnet.ca**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவித் தூறல்

## In Five Long Seconds

-Ramya Amuthan

"Go."
May I ask you a question that the universe won't answer?
May I tell you a story that is impossible to hear?
If I could, I would take you to "forever and ever after".

"Five..."
There's a miracle I'm looking for,
is it in the sky or on the floor?
I see a creature, it looks invincible.
It seems happy, yet it's miserable.

"Four..."
She's falling while she's flying.
He's failing but he's trying.
She's laughing when she's crying.
He's coughing and he's lying.

"Three..."
I see Ruby, Emerald, Diamond crowns.
They tumble down, but miss the ground.

"Two..."
Time is running, but not faster than me!
Gravity's trying to pull us while he's chasing us down the streets!
Blood is pooring down my face, but hunger is eating me alive!
A kid is down there crying and if he doesn't stop, he won't survive!

"One..."
A tree is snapped, killed and placed on my desk.
Ink drenched in its bark, while I ace all my tests.
Scholarships for me, for Mother Nature it's threat after threat.
We use and breathe in beauty, then grant that beauty death.

"Stop!"
Now, I will ask you some odd questions that the universe can't answer.
Then, I will tell you some strange stories that you won't have desire to hear.
Too bad, there's no such place called "forever and ever after".

## LIVES...

The tides have existed for thousands of years
Flowing on bravely without any fear
The winds have blown centuries on
Always raging and never to be gone
Their immortality is the point of this rhyme
These beings were born at the dawn of all time
But humans have only arrived today
And their fate is amazingly easy to say
Here today but gone tomorrow, immortal is not the human race
And without them Earth is a better place

**- M.SAJAMBBU**

## ஏக்கம்!

உலகமே நீ
ஊமையானது எப்போது?
உண்மைகளின் உறக்கம்
கலைவது எப்போது?
மனிதமே நீ
மடிந்தது எப்போது?
புனிதமான பூமி
புலர்வது எப்போது?

ப – சிவம்

## மாறியது ஏனோ?

சுகந்தமாக பேசி
சுகமாக என்னுடன்
வசந்தமாக
வாழவந்தவள்
இன்று
வானிலைபோல்
மாறிவிட்டாள்.

ச.குணம்

## ஆண்டவனுக்கே...!

சந்நிதியில்...
ஆண்டவன் படைத்ததை
அவனுக்கே அளித்துவிட்டு,
நேர்த்தி முடித்தேனென்று
நெஞ்சினை நிமிர்த்திடல்
நிறைவாயாயிடுமோ?
இல்லை... பாவங்கள்தான்
அழிந்துவிட்டதென
மகிழ்ந்திடலாமோ?

செ.மதன்

**கவிதை தலைப்பை நீங்களே தெரிவு செய்யலாம்!**
கவிதைகள் 8 வரிகள் அல்லது 32 சொற்களுக்கு மிகாமல் எழுத வேண்டும்.

P.O. Box 4056
McCowan Square, 1235 McCowan Road,
Scarborough, Ontario M1H 0A4
Fax : 416 273 7606
E-mail : editorial@thooralonline.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண் பலமா, இல்லை பலவீனமா?



- ரஞ்சனி

சராசரியான ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இருக்க வேண்டிய இயல்புகள் இவை, எனச் சில வரையறைகள் எல்லாச் சமுதாயங்களிலும் காணப்படுகின்றன.

உடல் பலமும் மனப்பலமும் மிக்கவன் ஆண் என்ற பொதுவான கருதுகோள் ஒன்று பெரும்பாலானவர்களின் மனதில் பதிந்துள்ளது. தன்னம்பிக்கை உள்ளவன், உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் சிந்தித்துச் செயலாற்றுபவன், துணிச்சல் மிக்கவன், விடயங்களைச் செய்து முடித்து தன் இலட்சியங்களை அடைபவன், நோவைத் தாங்கக் கூடியவன், வேதனைகளைச் சகித்துக் கொள்ளக் கூடியவன், சார்ந்து வாழ வேண்டிய தேவை அற்றவன் என்றெல்லாம் ஒரு ஆணின் இயல்புகள் உருவகிக்கப்படுகின்றன. அவ்வகையில் ஆண் ஒருவன் எதற்காகவும் அழக் கூடாது, அன்புத் தேவைக்காக யாரையும் எண்ணி ஏங்கக் கூடாது, தனிமையிலோ அல்லது துக்கத்திலோ துவண்டு போகக் கூடாது என்றும் சமுதாயம் அவனுக்கு சொல்லிக் கொடுக்கிறது. பயப்படுவது ஆணில் இயல்பல்ல என்றும் கோபம் வருவது அவனின் இயல்பு என்றும் கூட பேசப்படுகிறது.

அதே வேளையில் இதற்கு சரி நேர் மாறான இயல்புகளை சமுதாயம் பெண்ணிடம் எதிர்பார்க்கிறது. ஆனால் பெண்களுடன் சம்பந்தப்பட்டு ஆண் இருக்கும் சந்தர்ப்பங்களில் மட்டும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட அத்தனை பொறுப்புக்களையும் சமுதாயம் பெண்ணிடமே விட்டு விடுகிறது. இதனால் சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு இவ்வகையான முரண்பாடு குழப்பத்தை ஏற்படுத்துகின்றது.

**"ஆண்... பிழை செய்யவென சந்தர்ப்பம் நோக்கிக் காத்திருப்பவன்"**

ஒரு குடும்பமாக வாழும் போது பெண் ஆணுக்கு ஆலோசனை சொல்லும் மந்திரியாக, அவன் தேவைகளை நிறைவேற்றும் சேவகியாக இருக்க வேண்டும் என்றும் குடும்பத்தை கட்டிக் காக்க வேண்டியது அவளது தலையாய கடமை என்றும் சமுதாயம் அவளுக்கு சொல்கிறது. குடும்பம் ஒன்று சீர்குலைந்து விட்டால் அதன் முழுப் பொறுப்பும் அந்தக் குடும்பப் பெண்ணையே சேர்கிறது. அதே போல் ஆணுக்கு கோபத்தை அடக்கத் தெரியாது. அவன் எளிதில் கோபம் கொள்பவன். அவனுக்கு கோபம் ஏற்படக்கூடியதாக பெண் நடந்தால் அவனால் என்ன செய்ய முடியும் என்று ஆணுக்கு பரிதாபப்படுகிறது. இவையெல்லாம் ஆணை ஒரு கையாலாகதவன் என்றெல்லவா சொல்லாமல் சொல்கிறது.

மேலாக ஆண் தவறாக நடக்கும் சந்தர்ப்பங்களில் அதற்கான முழுப் பொறுப்பும் பெண் மேல் தான் சுமத்தப்படுகிறது. தவறுக்கு பெண் தான் காரணம் என அவள் குற்றம் சாட்டப்படுகிறாள். குறித்த பெண்ணின் உடை, நடை தான் அந்த ஆண் தப்பான வழியில் போக காரணமாக அமைந்தன என தீர்ப்பு வழங்கப்படுகிறது.

அப்படியான சந்தர்ப்பங்களில் குறித்த ஆணின் உணர்ச்சி வழி போகாத சிந்திக்கும் அறிவு எங்கே போய் விட்டது என கேள்வி கேட்கத் தோன்றுகிறது இல்லையா? இப்படி பெண்ணைக் காரணமாக்கும் சமுதாயம், ஆண் மனபலம் அற்றவன், அவனால் தன்னைத் தானே கட்டுப்படுத்த முடியாது என்றெல்லாவா சொல்லாமல் சொல்கிறது. அது மட்டுமன்றி, ஆண் இயல்பில் ஒரு கொடுமைக்காரன், பிழை செய்யவென சந்தர்ப்பம் நோக்கிக் காத்திருப்பவன். அவன் அப்படிப் பிழை செய்யாமல் அவனைத் தடுத்தாள ஒரு பெண் தேவை என்றெல்லாம் இது பொருள்படுகிறது. இத்தகைய நிலைப்பாடு ஆண்களுக்கு அவமானம் தரும் ஒரு விடயம் அல்லவா? ஒரு பெண்ணின் அழகால் நிலை குலைந்து போவதோ அல்லது அவளின் ஒரு செயலால் தன் இயல்பை இழப்பதோ ஆணின் இயல்பு என்றால் ஆண் பலமுள்ளவனா இல்லை பலமற்றவனா? ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெடிவேலு

## கனடாவில இருந்தால்...!

(வடிவேலு பாணியில் சொல்லிப் பார்க்கவும்...)

- திருமணம் முடிந்த பின்பு : **"சொல்லவே இல்லை..."**
- இரண்டு வேலை : **"ஷ்... இப்பவே கண்ண கட்டுதே..."**
- விபத்துகள் எதுவும் இன்றி வாகன காப்புறுதி உயர்வு : **"உட்காந்து யோசிப்பானுகளோ!"**
- Bankruptcy : **"எதையும் பிளான் பண்ணாம பண்ணக்கூடாது..."**
- நலன்புரியில் இருந்து கொண்டு வாகனம் ஓட்டுதல் : **"றிஸ்க் எடுக்கிறதெல்லாம் றஸ்க்ஸ் சாப்பிடிறமாதிரி."**
- விவாகரத்து : **"பேச்சு பேச்சாயிருக்கணும். இந்தக்கோட்டத் தாண்டி நீயும் வரக்கூடாது. நானும் வரமாட்டன்."**
- பூப்புனித நீராட்டுவிழா சம்பிரதாயங்களைப் பார்த்து : **"என்னைய வைச்சுக் காமெடி கீமெடி பண்ணலையே?"**
- Flu shot : **"வேணா... வலிக்குது... அழுதிடுவேன்."**
- Lay-Off : **"பில்டிங் ஸ்ராங்கு. பேஸ்மன்ற் வீக்கு!"**
- தமிழ் பெண் அறிவிப்பாளர் பிறந்தநாள் விழா ஒன்றில் ஆங்கிலத்தில் அறிவித்தல்: **"பாவம். யாருபெத்த பிள்ளையோ? தனியா நிண்ணு புலம்பிக்கிட்டு இருக்கு."**
- TTC bus in winter : **"வரும்... ஆனா வராது."**
- புதிய HST வரி : **"மாப்பு! வைச்சிட்டான்ரா ஆப்பு!"**
- Credit Card Limit increase : **"இன்னுமாடா இந்த ஊரு நம்மளய நம்புது?"**
- Vote கேட்கும் அரசியல்வாதி : **"ஒரு குரூப்பாத்தான் அலையிறாங்கய்யா"**
- Return Policy (பாவித்துவிட்டு திருப்பிக் கொடுத்தல்) : **"எப்பிடித்தான் கண்டுபிடிப்பாங்களோ?"**
- இறக்கத்தில் மறைந்திருந்து speeding பிடிக்கும் பொலிஸ் : **"என்ன இது சின்னப்புள்ளத்தனமா இருக்கு?"**
- Election : **"வந்துட்டாங்கையா... வந்துட்டாங்க..."**
- Parking Ticket : "Be Careful... **என்னைச் சொன்னன்"**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# Mother Theresa

**By: Saakethiya Sriranjan**

Agnes Gonxha Bojaxhiu, known to the world as **Mother Theresa** was born in Skopje, Macedonia on August 26, 1910 and lived to be 87 years old. After the death of her father at eight, Agnes' mother brought her up with very strong religious views in Roman Catholicism. Stories of missionaries attracted the attention of Agnes and, at twelve, convinced her that she could be part of religious life. The last time she saw her mother and sister was when she left her home to join the Sisters of Loreto when she was only 18 years old. On May 24, 1931, she took her oaths as a nun and began her path to a new life. The life of a nun cannot be considered an occupation but a lifelong commitment to the service of the Church and humanity which Mother Theresa chose to do. For the services she had rendered, there was nothing in the world that could repay her. In appreciation for her commitment and love, Mother Theresa was awarded the prestigious Nobel Prize in 1979.

Mother Theresa's commitment to society was immense. "Missionaries of Charity" is the charity founded by Mother Theresa which consists of thousands of nuns who help those in poverty. What first began in Calcutta, India, has spread awareness throughout the world and now helps abandoned children, AIDS victims and many more. In 1965, she and five sisters travelled to South America to teach women about their culture and dignity. In Australia, she helped drug-addicts, alcoholics and prisoners recover from the sins that they had committed. Mother Theresa was there for millions of souls in need when no one else would step up. She became a significant figure to the nuns and sisters who began to share her belief.

Mother Theresa's main motivation was religion. Her belief in Roman Catholicism was what determined this new life for her. As she went to India to teach at St. Mary's High School in Calcutta, she saw something that struck her heart. The poverty and agony that she saw happening just outside the school made her realize that she needed to help them. Mother Theresa then dedicated not months but years of working in the deepest and poorest slums of Calcutta.

Mother Theresa's freewheeling and lovable personality helped her become the global citizen she was in all respects. She was dealing with an International crisis, but her confidence and perseverance helped her do what her heart told her to do and not what the government lacked in doing. Mother Theresa's parents also helped raise her as a loving, caring, and gentle woman. Dealing with the loss of her father made her even stronger.


What Mother Theresa did was astounding and no one could even have the heart to go against a woman like her. She wasn't tortured or treated with injustice but she saw people being treated that way. The tormenting of others is what motivated her to step in and make the change. As children didn't have food or shelters, she knew she needed to help. The violation of human and social rights made her want to do all that she could to save these innocent souls.

Mother Theresa is a Global Citizen. Mother Theresa started "Missionaries of Charity" to help the Indians in the slums. She eventually travelled all over the world, despite her health conditions, and helped people recover from health problems, poverty, AIDS etc. Of course, she was able to do all of this work because of the commitment of the other nuns and sisters. Mother Theresa and her charity's work was recognized world-wide and still honoured..



"I feel like a citizen of Skopje, my city of birth, but I belong to the world"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலக் கடிகாரம் காத்திருப்பதில்லை

**காலம் பொன்னானது.** உலகில் எதை இழந்தாலும் மீண்டும்பெற முடியலாம். ஆனால் காலத்தைச் இழந்தால் மறுபடியும் பெறமுடியாது. காலத்தைப் பற்றி ஒரு ஆங்கிலக் கவிஞன் கூறுகின்றான்.

"காலம் ஆற்று நீரல்ல… கையில் ஏந்திய நீர்…
கணநேர கவனக்குறைவில்… கைதவறித் தொலைந்து விடும்"

இன்றைய உலகில் இயந்திரங்களோடு இயந்திரங்களாக காலத்துடன் போட்டியிட்டு கால்களில் இறக்கை கட்டிப் பறந்து கொண்டிருக்கின்றோம் நாம். ஆனால் எப்படி ஓடினாலும் காலத்தை வென்றவர் எவரும் இல்லை.

காலத்தைக் கட்டிப்போட எவராலும் முடியாது.

"காலம் வரும்வரை காத்திருப்போம்" என்பர்.
காலத்திற்காக காத்திருப்பதைவிட காலத்தை வீணாக்காமல் தனக்கும் பிறருக்கும் பயனுள்ளதாய் மாற்றுபவன் மட்டுமே காலத்தினால் பயன்பெறுகின்றான்.

காலம் அவ்வப்போது எம்முடன் கைகோர்த்துக் கொள்ள விளையும். எமக்காக சாமரம் வீசும். எம்மோடு இசைந்து நடக்கும். அவ்வேளையில் நாம் காலத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். காலத்தை வசப்படுத்திச் சாதனைகள் செய்யவேண்டும். காலத்தைக் காதலிக்க வேண்டும்.

காலத்தை பிற்போடுவது எம்மில் பலரது வழமையாகவுள்ளது. காலத்தை போகவிட்டு பின்னால் திரும்பிப் பார்ப்பது தவறு. காலத்தை எதிர்கொள்ளும் போதே கைகுலுக்கிக் கொள்ள வேண்டும்.

"எதற்கும் நேரமேயில்லை!" என்கின்றோம். காரியங்களை முழுமையாக முடிப்பதற்கு நேரமில்லை என்றாலும் நேரத்தைப் பங்கிட்டு காரியங்களைப் பிரித்துப் பகுதி பகுதியாகவேனும் செய்தால்தான் வேலைகள் நிறைவேறும். அதைவிடுத்து கடைசி நிமிடம் வரை செய்யவேண்டிய காரியங்களைப் பிற்போட்டு செய்து முடிக்க முடியாமல் திணறி சிக்கல்களை எதிர்நோக்குபவர்களாக நாம் இருக்கலாகாது.

நாம் காலத்திற்கேற்ப மாறவேண்டும். இல்லையேல் மாற்றப்படுவோம். காலத்தின் அருமையை உணராதவர்கள் வாழ்வின் அருமையை உணராதவர்க்குச் சமனானவர்கள். கடிகாரத்தை 'watch' என்பர். கைக்கடிகாரத்தை வெறுமனே காப்பு, சங்கிலி மாதிரி அலங்காரப் பொருளாக கருதி அணியக்கூடாது. "நேரத்தை அவதானமாகப் பார்" என்பதற்காகத்தான் watch என அழைக்கின்றனரோ என எண்ணத் தோன்றுகின்றது.

நேரத்தை மதிப்பவர்கள் வீணாகப் பொழுதைக் கழிக்கமாட்டார்கள். வீண் பேச்சு, வீண் செயல், வீண் நினைப்பு என வீணான எதையும் நாடமாட்டார்கள். காலத்தில் மதிப்பு வைத்து வாழ்வைச் சிறப்பாக வீணாக்காமல் வாழ்வார்கள். ஒரு பொழுதில் ஒரு விடயத்தில் மட்டும் புலனைச் செலுத்தி நேர அட்டவணையிட்டு வேலை செய்பவர்கள் வேலைகளை திட்டமிட்டு செயலாற்றி வெற்றிகரமாக முடிப்பர்.

அதிகாலைப்பொழுது பட்சிகளுக்கு மட்டுமல்ல மனிதர்களுக்கும் புத்துணர்ச்சியூட்டும் பொழுதாகும். சுறுசுறுப்பாக ஆற்றவேண்டிய வேலைகளைச் செய்வதற்கு உகந்த காலம் காலைப்பொழுது. எத்தகைய பொழுதானாலும் கிடைத்த பொழுதை வீணாக்காமல் செலவிடக்கற்றுக் கொள்ள பழகினோமானால் நேர வீணடிப்பை தவிர்த்து, கருமங்களை தவறாமல் ஆற்றலாம்.

பலர் தம் வாழ்நாளில் பெரும் சாதனைகளைச் செய்ய ஆர்வம் கொண்டாலும் அவற்றை எட்டாக்கனவு என்றும், நேரமில்லை என்றும் எண்ணிக் கைவிடுவர். ஆனால் நேரப்பங்கீடை கற்றவர்களுக்கு எத்தகைய கனவையும் இலட்சியமாக வகுத்து உழைத்து முன்னேறி இலக்கை அடைய முடியும்.

சார்ல்ஸ் சிஃப்ராஸ்ட் என்னும் காலணி தைப்பவர் ஒருவர் தினமும் தன் வாழ்நாளில் ஒரு மணி நேரத்தை கல்வி கற்பதற்கெனச் செலவிட்டு வந்ததனால் பின்னாளில் அமெரிக்காவின் மிகச்சிறந்த கணித மேதையாகி சாதனை புரிந்தார்.

எதிர்காலம் எமதாக வேண்டுமானால் இன்றைய பொழுதின் ஒவ்வொரு மணித்துளியிலும் ஒவ்வொரு கணத்திலும் எமது கவனத்தை நாம் செலுத்த வேண்டும். கணப்பொழுதுகளில் கவனம் வைத்தால் மணித்தியாலங்கள் தம்மைத்தாமே கவனித்துக் கொள்ளும்.

நாம் காலவங்கியின் கணக்கிருப்பில் ஒவ்வொரு நாளும் 86400 வினாடிகளை முதலீடு செய்கின்றோம். அவை உண்மையிலேயே முதலீடுகளாகி நாம் பயனெய்தும் வண்ணம் இலாபம் ஈட்டித்தர வேண்டுமானால் இயன்றவரை பொழுதுகள் வீணடிக்கப்படாமல் பேணப்பட வேண்டும்.

ஒவ்வொரு நாளும் ஆரம்பிக்கப்பட முன் அன்றைய வேலைத்திட்டங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு அட்டவணைப்படுத்தப்படவேண்டும்.

கடந்து சென்ற காலத்தை எண்ணி கலங்குவதை விடுத்து நிகழ்காலத்தில் நாம் அதிக கவனத்தை செலுத்த வேண்டும். எதிர்காலம் நலமாக வேண்டுமானால் நிகழ்காலத்தில் உழைக்க வேண்டும். "உலகத்தின் கொடைகளெல்லாம் உழைப்பவர்க்கே உரியவை" என்றார் துளசிதாசர். "பாடுபடுபவர்க்கே இந்த பாரிடம் சொந்தமையா" என்றார் பாரதிதாசன். காலம் தானாக கனியும் என இலவு காத்த கிளியாக காத்திருப்பது முட்டாள்த்தனம். காலம் கனிய வேண்டுமானால் நாம் பாடுபட வேண்டும். மந்திரத்தால் எங்கும் மாங்காய் காய்க்காது. மண்ணுக்குள் வேர் நடத்தும் போராட்டத்தினதும், உழைப்பினதும் விளைச்சலே மரத்தில் தொங்கும் கனிகள். தலை குனிந்து படிப்பது தலை நிமிர்ந்து வாழ்வதற்கு. இன்றைய உழைப்பே நாளைய வெற்றி.

முடிந்த பொழுதுகள் மடிந்து போனவை. அவற்றை எண்ணி வருந்தும் வெறுமையை விடுத்து இருக்கும் பொழுதுகளில் இறக்காமல் இருப்புக் கொண்டால்… பொழுதுகள் என்றும் இறவாமல் பூமியெங்கும் அன்புப் பூங்காவாக நறுமணம் வீசமுடியும். ●

**சிவவதனி பிரபாகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிச்சன் Corner!

– ஷெரின்

# Spanish Rice



தேவையான பொருட்கள்

- 1 கிலோ பசுமதி அரிசி (கழுவி நீர் வடிய விடவும்)
- 100 கிராம் பேக்கன் – Bacon (சிறிதாக வெட்டிக்கொள்ளவும்)
- 200 கிராம் பொரித்த ஆட்டிறைச்சி துண்டுகள் (இறைச்சியை சிறிது அவித்து பொரித்துக்கொள்ளவும்)
- 250 கிராம் அவித்த இறால்
- 3 பெரிய மிளகாய் (விதை நீக்கி மெல்லியதாக அரிந்துக்கொள்ளவும்)
- 2 பெரிய வெங்காயம் (மெல்லியதாக அரிந்துக்கொள்ளவும்)
- 2 சிறிய தக்காளி (வட்டமாக வெட்டிக்கொள்ளவும்)
- 2 அவித்த முட்டைகள் (வட்டமாக வெட்டிக்கொள்ளவும்)
- 4 பல்லு வெள்ளைபூடு (அரைத்துக்கொள்ளவும்)
- 3 கப் தக்காளி சாறு
- பட்டர், உப்பு தேவைக்கேற்றவாறு.

செய்முறை

ஒரு அகன்ற பாத்திரத்தில் பட்டர் சேர்த்து, வெங்காயம், உள்ளி சேர்த்து வதக்கவும். வதங்கியதும் பேக்கனை சேர்த்து வதக்கி பின், இறால், ஆட்டிறைச்சி சேர்த்து வதக்கி, கடைசியாக அரிசியையும் சேர்த்து நன்கு வதக்கி, சிறிது நிறம் மாறியவுடன் ரைஸ் குக்கரில் போட்டு தக்காளிச்சாறு, உப்பு, அளவான நீர் சேர்த்து வேக விடவும். வெந்ததும் தட்டில் பரவலாக போட்டு மேலே தக்காளி துண்டுகள், அவித்த முட்டை என்பவற்றைக்கொண்டு அலங்கரிக்கவும்.

# Spanish Chicken

தேவையான பொருட்கள்

- 1 கிலோ கோழி (சுத்தம் பண்ணி அளவான துண்டுகளாக வெட்டி, உப்பு சேர்த்து பின் பொரித்துக்கொள்ளவும்).
- 2 பெரிய வெங்காயம் (மெல்லியதாக வெட்டிக்கொள்ளவும்.)
- பெரிய மிளகாய் (விதை நீக்கி வட்டமாக வெட்டவும்.)
- சிறிது Celery (அரிந்தது)
- 100 கிராம் Bacon
- 2 தே.க. வெள்ளைப்பூடு, இஞ்சி அரைத்தது
- 2 கப் தக்காளிச் சாறு
- 2 மே.க Tomato Ketchup
- 1 மே.க சிலி சோஸ்
- 1 தே.க சீனி
- சிறிது எண்ணெய்


செய்முறை

ஒரு பாத்திரத்தில் சிறிது எண்ணெய் சேர்த்து வெங்காயம், இஞ்சி, உள்ளி சேர்த்து வதக்கவும். வெங்காயம் வதங்கியதும் Bacon, மிளகாய் சேர்த்து வதக்கி Celery ஐ சேர்க்கவும். பின் தக்காளிச் சாறு, Tomato Ketchup, சிலி சோஸ், சீனி இவைகளை கலந்து இறக்கவும். பேக் பண்ணும் பாத்திரத்தில் பட்டர் பூசி, பொரித்த கோழி துண்டுகளை அடுக்கி, அதனுள் காய்ச்சிய கலவையை ஊற்றி அளவான சூட்டில் அரை மணித்தியாலம் பேக் பண்ணவும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தியின் வர்த்தகச் சோலை

கோடை கால வசந்தங்களைத் தடவிச் செல்லும் மெல்லிய காற்றலையின் ஊடே சமூகத்திற்கான ஒரு தொடர்பு மையம் வருடா வருடம் வலுப்பெற்று வருகின்றது. நீண்ட கால வரையறைகளை நோக்கிய கனேடிய தமிழர் சமூகத்திற்கும் வர்த்தகர்களுக்குமிடையிலான உறவுப் பாலம் வருடா வருடம் முனைப்புப் பெறுகின்றது.

இந்த முனைப்புக்களின் கட்டுமானம் இன்றுவரை ஒரு ஆரோக்கியமான அத்திவாரத்தை சமுதாய மட்டத்தில் உருவாக்கியுள்ளது என்பது மறுக்கப்பட முடியாத ஒரு விடயம்.







கோடையில் குதூகலம்... சோலையில் செந்தூரம்... செந்தியின் வர்த்தகச்சோலைக்கு வயது ஏழு வருடங்கள் மட்டுமல்ல ஏழு தசாப்தங்கள். 2003ம் ஆண்டு மே மாதம் 24ம், 25ம் திகதிகளில் முதன்முறையாக ஒரு புதிய சிந்தனை வர்த்தகச் சோலையாக அரங்கேறியது.

1995ஆம் ஆண்டு ஏப்ரல் 5ம் திகதி 24 மணிநேர தொலைபேசிச் செய்திச் சேவையில் கால் பதித்து 1996ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ம் திகதி "தமிழன் வழிகாட்டி" என்ற விளம்பரக் கைநூல் பல பயனுள்ள தகவல்களுடன் வெளிவந்தது.

விளம்பரங்களின் வளர்ச்சி, வர்த்தகர்களின் குளிர்ச்சி வழிகாட்டியின் பயணங்களை மாற்றியமைக்க, புதிய பாதைகள் உதயமாகி அடுத்த பரிமாணத்தில் வர்த்தகச்சோலையாக கால் பதித்தது தமிழன் வழிகாட்டி.

டவுண்ஸ்வியூ பார்க்கில் கடந்து சென்ற குதூகலமும் நடந்து முடிந்தது, சிறுவர் முதல் பெரியவர் வரை கூடிக் கூத்தாடி உறவாட ஒரு தளம் கிடைத்தது. மேடையில் கலைஞர்களுக்கான முழு அங்கீகாரம் கிடைத்தது. கலை, கலாச்சாரம், பொழுதுபோக்கு என்று பல அம்சங்கள் அடங்கிய முழுமையான பொழுதுகள் சங்கமமாகியிருந்தன.

உள்ளூர்க் கலைஞர்களின் மேம்பாடு, மாணவர்களின் ஆளுமை, மக்களின் மகிழ்ச்சி, வர்த்தகர்களின் ஆதரவு என்று வர்த்தகச் சேலையின் இரண்டு நாட்களின் பக்கங்கள் இனிமையாக எழுதப்பட்டிருந்தன.

வெற்றிக்குரிய எல்லைகள் எதுவும் நிர்ணயிக்கப்படாமல் புதிய மாற்றங்களையும் புதிய சிந்தனைகளையும் கொண்ட தமிழன் வழிகாட்டியின் இன்னொரு சேவை இணையத்தளத்தில் உறவாடுகின்றது. www.tamilsguide.com. தமிழர் வர்த்தகத்துறையின் தகவல் பரிமாற்றத்திற்கு சரியாக அத்திவாரமிட்ட தமிழன் வழிகாட்டியின் சேவை ஒரு தேவை. பயனுள்ளவர்களுக்குப் புரியும். புரியாதவர்களுக்கு பயனுள்ளதாகமாறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. PAUL HEALTHY LIFE CLINIC

## (Homeopathy and Acupuncture)

## Dr. போல் ஜோசேப்

BHMS (Ind.), HD (can.) RAP (can.)



### ஹோமியோபதி (ஜெர்மன் மருத்துவமுறை)
### அக்குபங்சர் (சீன மருத்துவமுறை)

B.H.M.S (Bachelor of Homeopathy Medicine and Surgery)
Qualified from Tamilnadu Dr. M.G.R. Medical University, Madras, india.
Doctor of Homeopathy, Doctor of Acupuncture

முன்னாள் பேராசிரியர், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்
மருத்துவப் பல்கலைக் கழகத்தின் மருத்துவ கல்லூரிகள்.

முன்னாள் விரிவுரையாளர், விநாயகா மிஷன்ஸ்
பல்கலைக் கழகம் சேலம், இந்தியா.

மருத்துவ ஆலோசகர், சண்முகா மருத்துவ
ஆராய்ச்சி நிறுவனம், சேலம்.

இந்தியாவின் பல்வேறு பல்கலைக் கழகங்களின் தேர்வாளராகவும்,
சிறப்பு வருகை விரிவுரையாளராகவும் பணிபுரிந்தவர்.

இலங்கையின் முதல் B.H.M.S
மருத்துவ பட்டம் பெற்ற மருத்துவர்.

கனடா, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில்
பதிவு பெற்ற மருத்துவ நிபுணர்.

ஹோமியோபதி, அக்குபங்சர், அக்குபிரஷர், நாடிப் பரிசோதனை
தியானம், யோகா மற்றும் உளவியல் ஆலோசகர்.

பக்க விளைவுகளில்லாத, பத்தியமேதுமில்லாத, அனைத்து
நோய்களிலிருந்தும் சுகமடைந்து ஆரோக்கிய வாழ்வு பெறலாம்.

**Tel : 416 438 3939 Cell : 416 9864903 drjp63@yahoo.com**

**Unit 10, 1193 A, Brimley Rd., (Brimley & Brimorton) Scarborough M1P 3G5**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொகுப்பு: மாலினி அரவிந்தன்



# சூடுகண்ட பூனை

சுட்டிகளே! நீங்கள் கோடைவிடுமுறைக்கு எங்கே சென்றீர்கள்? இம்முறை கோடை விடுமுறையை நீங்கள் நன்றாக அனுபவித்தீர்களா? பல சுட்டிகள் விடுமுறைக்கு தாங்கள் தாய் நாட்டிற்குச் சென்று வந்ததாகக் குறிப்பிட்டார்கள். அவர்களோ, அவர்களின் பெற்றோர்களோ அல்லது அவர்களின் மூதாதையினரோ பரம்பரை பரம்பரையாகப் பிறந்து வளர்ந்த மண்தான் அந்தத் தாய்மண். தாய் மண்ணைப் பற்றிக் குறிப்பிடும்போது மகாகவி பாரதியார், 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே' என்று குறிப்பிடுகின்றார்.

தாய் மண்ணுக்குச் சென்று திரும்பி வந்த சில சுட்டிகள், தாய் மண்ணைத் தரிசித்தது மட்டுமல்ல உறவுகளைப் பார்த்ததில் மிகவும் மகிழ்ச்சியோடும் பெருமிதத்தோடும் இருந்தார்கள். அவர்கள் கூறிய தங்கள் அனுபவத்தை உங்களுடன் கொஞ்சம் பகிர்ந்து கொள்ள நினைக்கிறேன்.

கோடை விடுமுறைக்கு கனடாவில் இருந்து மதனும், மதியும் தங்கள் பெற்றோருடன் பெற்றோர் பிறந்த ஊருக்குச் சென்றிருந்தனர். லண்டனில் இருந்து அவர்களது ஒன்று விட்ட சகோதரங்களும் விடுமுறை காரணமாக அங்கே வந்திருந்தனர். இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களே இலங்கைத் தமிழரின் பூர்விக நிலங்களாகும். அதிக தமிழர்கள் பரம்பரை பரம்பரையாக இப்பகுதிகளிலேயே வாழ்ந்து வருகின்றார்கள். வடபகுதியில் இருக்கும் நிலத்தை யாழ்ப்பாண தீபகற்பம் என்று சொல்வார்கள். வீடு, வளவு என்று அவர்களது வசிப்பிடத்தைக் குறிப்பிடுவர். நீர்வளம் கொடுக்கும் பெரிய ஆறுகள் அங்கே கிடையாது. எனவே ஒவ்வொரு வளவிற்குள்ளும் அனேகமாக கிணறுகள் தனித்தனியே தோண்டப்பட்டு இருக்கும். இந்தக் கிணற்றில் இருந்துதான் தங்களுக்குத் தேவையான குடிநீரை மக்கள் பெற்றுக் கொள்கிறார்கள். வளவிற்குள் இருக்கும் கிணற்றைச் சுற்றி அனேகமாக வேலி போடப்பட்டிருக்கும். அந்த வேலி பாதுகாப்பாக இல்லாவிட்டால், தனியே விடப்பட்ட குழந்தைகள் எட்டி உள்ளே பார்க்கும்போது சில சமயங்களில் தவறி உள்ளே விழுந்து விடுவதுமுண்டு. அப்படித்தான் கோபி என்ற சிறுவன் உள்ளே விழுந்தபோது அதிஸ்டவசமாக அருகே நின்ற அவர்களின் வளர்ப்புப் பிராணியாகிய நாய் குரைத்துப் பெரியவர்களின் கவனத்தை ஈர்த்ததால் அந்தச் சிறுவனின் மாமன் உடனே கிணற்றில் குதித்து அந்தக் குழந்தையைக் காப்பாற்றக்கூடியதாக இருந்ததாம். தண்ணீருக்குள் மூழ்கி மூச்சுத் திணறிய அனுபவத்தினாலோ என்னவோ அதன்பின் கிணற்றடிப்பக்கம் செல்லவே கோபி பயப்பட்டான். பெற்றோர்கள் கிணற்றை எட்டிப் பார்க்க வேண்டாம் என்று அறிவுரை சொல்லியும் அதைக் கேட்காமல் எட்டிப் பார்த்ததால் வந்த வினையை கோபி புரிந்து கொண்டான்.

கோபி இனிமேல் கிணற்றை எட்டிப் பார்க்க மாட்டான், சூடுகண்ட பூனை அடுப்பங்கரைக்குப் போகாது என்று பாட்டியம்மா அடித்துச் சொன்னாள். அம்மாவின் அம்மாவை அம்மம்மா என்றும், அப்பாவின் அம்மாவை அப்பம்மா என்றும், சிலர் அவர்களைப் பாட்டியம்மா என்றும் அழைப்பர். சிலர் 'கிறான்மா' என்றும் ஆங்கிலத்தில் அழைப்பதுண்டு. இரவிலே தூங்கப் போவதற்குமுன் ஊரிலே அனேகமாகப் பாட்டியம்மா பேரப்பிள்ளைகளுக்கு கதைகள் சொல்வது வழக்கம். சுட்டிகளுக்குப் பாட்டியம்மா சொன்ன முதுமொழி புதுமையாக இருந்தது. 'சூடுகண்ட பூனை அடுப்பங்கரைக்குப் போகாது' என்றால் என்ன என்று இரவு படுக்கும்போது கதை கேட்கும் ஆர்வத்தோடு சுட்டிகள் பாட்டியம்மாவிடம் கேட்டார்கள்.

குழந்தைகளுக்காகத் தினமும் பாலைக் காய்ச்சி அடுப்பங்கரையில் வைத்துவிட்டு வந்தால் பூனை ஒன்று களவாக உள்ளே நுழைந்து பாலைக் குடித்துவிட்டு ஓடிவிடுமாம். பலநாள் கள்ளன் ஒருநாள் அகப்படுவான் என்பதுபோல, ஒருநாள் தாமதமாகப் பாலைக் காய்ச்சி வைக்கவே பால் கொதித்த நிலையில் இருப்பதை அறியாத பூனை பாலைக் கள்ளமாய்க் குடிப்பதற்காகச் சட்டிக்குள் வாயை வைக்கவே அதன் நாக்கு வெந்து போனது. வேதனை தாங்க முடியாத பூனை கத்திக் குளறிக் கொண்டு வெளியே ஓடிப்போனது. அதன்பின் ஒருநாளும் அந்தப்பூனை அடுப்பங்கரைப் பக்கம் வருவதில்லையாம். அதனால்தான் ஒருமுறை தவறு செய்யும்போது அகப்பட்டுக் கொண்டால் சூடுகண்ட பூனைபோல அனேகமாக மறுபடியும் அந்தத் தவற்றைச் செய்ய விரும்பமாட்டார்கள். அது அவர்களுக்கு எப்பொழுதும் ஒரு படிப்பினையாக இருக்கும் என்று பெரியோர் குறிப்பிடுவர்.

இதில் இருந்து எமக்குத் தெரியவருவது என்னவென்றால் யாராக இருந்தாலும் தவறு செய்வது என்பது இயற்கை தான், தப்பித்தவறி தவறு செய்தாலும் சூடுகண்ட பூனைபோல அதை உணர்ந்து திருத்திக் கொள்ள வேண்டும். சுட்டிகளே, நீங்கள் சில சமயங்களில் செய்வது தவறு என்று தெரிந்தால் அதைச் சின்ன வயதிலேயே திருத்திக் கொள்ளப் பழகிக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இங்கிலாந்து (England)



இங்கிலாந்து ஐரோப்பா கண்டத்தில் இருக்கும் ஐக்கிய இராச்சியத்தின் ஒரு பகுதியாகும். ஐரோப்பாவையும் இங்கிலாந்தையும் ஆங்கிலக் கால்வாய் பிரிக்கிறது. இதன் தலைநகரம் லண்டன். ஆங்கில மொழி இங்கே பேசப்படுகின்றது. லண்டன் மாநகரத்தில்தான் நாங்களும் சிறிது காலம் வாசித்தோம். நான் படித்த பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் மிகவும் அன்பானவர்கள். அங்கே இருக்கும் மெழுகுப் பொம்மைப் பெருட்காட்சிக்கு நாங்கள் சென்றபோது பல தலைவர்களின் உருவப் பொம்மைகளைக் கண்டு களித்தோம். லண்டனில்தான் பிக்பென் என்ற பிரசித்தி பெற்ற மணிக்கூட்டுக் கோபுரம் இருக்கிறது. இங்கே உள்ள தேம்ஸ் நதி மிகவும் அழகானது. சிறுவர் சிறுமிகள் பாடும் லண்டன் பிறிச் என்ற பாடலில் வரும் லண்டன் பாலம் இங்கே உள்ள தேம்ஸ் நதிக்கு மேலாகச் செல்கிறது.

**மிதுனா கிருபாகரன்**

## பிரான்ஸ் நாடு (France)



பிரான்ஸ் நாட்டில் பிரெஞ்ச் மொழி பேசுபவர்களே அதிகம் வசிக்கிறார்கள். இதன் தலைநகரத்தைப் பாரிஸ் என்று அழைப்பர். ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு அங்கத்துவ நாடாகவும் பிரான்ஸ் இருக்கிறது. இங்கேதான் முதன் முதலாக 1792ல் மக்கள் புரட்சி மூலம் மன்னராட்சி அகற்றப்பட்டு, மக்களாட்சி அமைக்கப்பட்டது. இது சரித்திரப் புகழ்பெற்ற நெப்போலியன் பொனப்பாட் ஆட்சி செய்த நிலமாகும். 1889ம் ஆண்டு உருவாக்கப்பட்ட உலகப் பிரசித்திபெற்ற Eiffel டவர் கட்டிடம் இங்கேதான் இருக்கிறது. பாரிசிலே அதி உயர்ந்த கோபுரமும் இதுதான். இதன் உயரம் 1063 அடியாகும். இதை வடிவமைத்த பொறியியலாளரின் பெயரையே இந்தக் கோபுரத்திற்கும் சூட்டப்பட்டது. சராசரி 80 மில்லியன் உல்லாசப் பிரயாணிகள் வருடா வருடம் இங்கே செல்கிறார்கள். உலகிலே அதிக உல்லாசப் பிரயாணிகள் செல்லும் இடமாகவும் பிரான்ஸ் திகழ்கிறது.

**பிரித்திகா சுதாகரன்**

## நயாகரா நீர்வீழ்ச்சி (Niagara Falls)



கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான எல்லையில் நயாகரா நீர்வீழ்ச்சி அமைந்திருக்கிறது. நயாகரா அருவி இரண்டாகப் பிரிந்து, அமெரிக்காவின் நியூயோர்க் எல்லைப்பகுதியில் ஒருபகுதி நீர் வீழ்ச்சியும், கனடாவின் ஒன்ராறியோ எல்லைப்பகுதியில் மறுபகுதி நீர்வீழ்ச்சியும் அமைந்திருக்கின்றன. நயாகரா அருவியில் இருந்து இந்த நீர்வீழ்ச்சி உற்பத்தியாகிறது. உலகின் பல பாகங்களிலும் இருந்தும் உல்லாசப் பிரயாணிகள் இங்கே வந்து இந்த நீர்வீழ்ச்சியின் அழகை ரசிப்பார்கள். ஒவ்வொரு வருடமும் சராசரி 14 மில்லியன் மக்கள் இங்கே வந்து இதனைப் பார்க்கிறார்கள். கனடியப் பகுதியில் உள்ள நீர்வீழ்ச்சி மிகவும் அழகானது. 167 அடி உயரத்தில் இருந்து நீர் வீழ்ச்சியடைகிறது. கனடியப் பகுதியில் உள்ள இந்த நீர்வீழ்ச்சி 2600 அடி அகலமானது. பனிக்காலத்தில் நீர்வீழ்ச்சியின் ஒரு பகுதி நீர் உறைந்து போயிருப்பதை வர்ணமின்விளக்கு வெளிச்சத்தில் பார்ப்பது மிகவும் அழகானது. இந்த நீர்வீழ்ச்சியின் உதவியோடு மின்சாரமும் உற்பத்தி செய்யப்படுகின்றது.

**சுஜீனா உதயணன்**

## ஒட்டாவா (Ottawa)



கனடாவில் எனக்குப் பிடித்தமான இடம் ஒட்டாவா. 1855ம் ஆண்டு இது கனடாவின் தலைநகரமானது. இது 1080 சதுரமைல் பரப்பளவு கொண்ட கனடாவின் நான்காவது பெரிய நகரமாகும். 23 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்ட இந்த நகரம் கிழக்கு மேற்காக 90 கிலோமீற்றர் அகலத்தைக் கொண்டது. இங்கே சுமார் 895,000 வரையிலான பல்கலாச்சார மக்கள் குடியிருக்கிறார்கள். கனடாவின் நாடாளுமன்றம் இங்கேதான் அமைந்திருக்கிறது. இங்கே கால்ரன், ஒட்டாவா பல்கலைக்கழகம் போன்ற புகழ் பெற்ற பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. இங்கேதான் கனடாவின் தேசிய பொருட்காட்சி நிலையம் அமைந்திருக்கிறது. இதைவிட 1000 வருடங்களுக்கு மேற்பட்ட கனடிய வரலாறுப் பொருட்காட்சிச் சாலை, யுத்த நினைவு சம்பந்தமான பொருட்காட்சிச் சாலை, விவசாய, நாணய, விமானக் காட்சிச் சாலைகளும் இங்கேயுண்டு. உயர் நீதிமன்றமும் இங்கேதான் அமைந்திருக்கிறது. இங்கே உள்ள இயற்கைக் காட்சிச் சாலையில் நீண்ட காலத்திற்குமுன் வாழ்ந்து அழிந்துபோன டைனோசர் பற்றிய நினைவுச் சின்னங்களைக் காணலாம்.

**ஷிவானி சிவகுமாரன்**

## கிளிகள் (Parrots)



கிளிகள் அழகான பறவைகள். அனேகமான கிளிகள் பச்சை நிறமாக இருக்கும். சில வெள்ளை நிறமாகவும் இருக்கும். பஞ்சவர்ணக் கிளிகளும் உண்டு. காலநிலை வெப்பமாக இருக்கும் நாடுகளில் இவை அதிகம் காணப்படும். குறிப்பாக தென் அமெரிக்கா, அவுஸ்திரேலியாவிலும், ஆசியாக் கண்டத்திலும் அதிகம் காணப்படும். கிளிகளில் சுமார் 372 வகைகள் உண்டு. கிளிகள் ஒவ்வொரு காலிலும் முன்பக்கம் இரண்டும், பின்பக்கம் இரண்டுமாக நான்கு விரல்கள் அமையப் பெற்றவை. கடினமான வளைந்த அலகுகள் கிளிகளின் சிறப்பியல்பானவை. இவை பழங்கள், விதைகள், தளிர்கள் போன்றவற்றை உணவாகக் கொள்ளும். சில கிளிகள் பூச்சிகளையும் உண்ணும். கிளிகள் பொதுவாக 20 – 40 வருடங்கள்வரை வாழக்கூடியவை. அனேகமான கிளிகள் பட்டமரத்தில் துவாரம் செய்து அதையே தனது கூடாகப் பாவித்து அதிலே முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். சிலர் கிளிகளைச் செல்லப் பறவையாக வளர்ப்பர். சில கிளிகள் மனிதரைப்போல சில சொற்களைத் திருப்பிச் சொல்லும் திறமை படைத்தவை. அவற்றைப் பேசும் கிளிகள் என்று அழைப்பர்.

**தர்சிகா செல்வநாயகம்**

## செல்லப்பிராணி (Dog)




நான் விரும்பும் செல்லப்பிராணி நாய். நாயை நன்றி உள்ள மிருகம் என்று சொல்வார்கள். நேயத்தோடு பழகியவர்களைக் கண்டால் நாய் அவர்களைப் பார்த்து வாலை ஆட்டும். நாய்களில் பல விதமான இனங்களும் நிறங்களும் இருக்கின்றன. வெள்ளைநிறமான பமனேரியன் நாய் பார்ப்பதற்குப் பஞ்சுப் பொதிபோல இருக்கும். நாய்க்கு மணம் அறியும் சக்தி நிறைய உண்டு. அதனால்தான் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க மோப்ப நாய்களைப் பொலிஸார் பயன்படுத்துவர். சில நாய்கள் பொல்லாதவை. காவல் நாய்கள் கடித்துவிடும். சில நாய்கள் கண் தெரியாதவர்களுக்கு வழி காட்டியாகவும் உதவி செய்யும். சிலர் வேட்டையாடவும், மந்தைகளை மேய்ப்பதற்கும் நாய்களைப் பயன்படுத்துவர். பனி உறைந்த பிரதேசங்களில் சறுக்கு வண்டிகளை இழுத்துச் செல்லவும் பழகிய நாய்களைப் பயன்படுத்துவர். மனிதரோடு நேயமாகப் பழகுவதால், மனிதனின் நல்ல நண்பன் என்று நாயை அழைப்பார்கள்.

**கபிஷன் தனேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒரு டயரியின் அந்தரங்கம்

-மோனா

**1989** ஆம் ஆண்டு காலப்பகுதி... யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான ஒரு வைத்தியசாலை பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.

மரண ஓலங்கள்... வேதனை முனகல்கள்...சோகத்தின் வடிவங்கள்... எதிர்பார்ப்புகள்... ஏமாற்றங்கள்... என்று வலி சுமந்த வரலாறுகளின் துயரங்களை உள்வாங்கியபடி கதி கலங்கி நின்றது அந்த வைத்தியசாலை.

அமைதியைக் குலைத்து நின்ற அன்றைய காலைப்பொழுதின் காற்றலைகளிடையே... புதைந்து போன மனிதத்தின் தேடல்களுடன்... ஊசலாடும் உறவுகளின் ஒட்டுமொத்த வேதனைகளும் சங்கமமாகிக் கொண்டிருந்தன.

அவனும்... அன்றைய தனது தொழிலுக்காக செய்தி சேகரிக்க அங்கே வருகின்றான்.

அங்கிருந்து வெளிவரும் ஒரு தினசரிப் பத்திரிகையின் பத்திரிகையாளன் அவன். இளவயதின் உணர்வுகளை யெல்லாம் சற்றுத் தள்ளி வைத்து விட்டு, புதிய சிந்தனைகளோடு எழுதும் சமுதாய அக்கறை கொண்ட ஒரு இளம் பத்திரிகையாளன். சமுதாயத்தின் அடிமட்ட மக்களுடன் வாழப் பழகிக்கொண்டவன். வறுமையின் கோட்டை விட்டு வெளியே வர விரும்பாதவன். அவனது எழுத்துக்களுக்கும் சமூக மேம்பாட்டு உணர்வுகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து கொண்டேயிருக்கும்.

மக்களோடு மக்களாக கலந்து கொண்ட அவன் அங்கு நின்றவர்களின் உரையாடல்களையும்... சம்பவங்களையும்... உன்னிப்பாக அவதானித்தபடி வைத்தியசாலையின் வாசலை அடைந்த போது... வாசலில் நின்றிருந்த நோயாளர்களின் நீண்ட வரிசை அவனுக்குள் ஒரு கேள்வியை உருவாக்கிச் சென்றது.

"வாசலில் ஏன் இந்த வரிசை...." புரியாத கேள்விகளுடன் தன்னையும் அந்த வரிசையில் இணைத்து கொண்டான்.

அவனது ஒலிப்பதிவுக் கருவி இயங்க ஆரம்பிக்கின்றது... பேனா சட்டைப் பையில் ஒளிந்து கொள்கின்றது... காகிதத் தாள்கள் காணாமல் போகின்றது...

பொறுமையுடன் வரிசையில் காத்திருந்து தனது முறைக்கு வந்தான்....

"ஏன்... எதற்கு... யாரால்... யாருக்கு..." கேள்விகளுக்கான பதில்கள் அவனுக்கு வியப்பைக் கொடுத்தது.

"டாக்டரைப் பார்ப்பதற்கான அனுமதி அட்டை... அரசாங்கம் தரும் அட்டைகள் முடிவடைந்ததால் நோயாளர்கள் 2 ரூபாய் கொடுத்து இதை வாங்க வேண்டும்... இல்லாவிடில் டாக்டரைப் பார்க்க முடியாது..."

"எத்தனை அட்டைகள் அரசாங்கம் தருகின்றது... எத்தனை அட்டைகளை நீங்கள் விற்பனை செய்கின்றீர்கள்... இதற்கு யார் பொறுப்பு..."

தொடர்ந்த கேள்விகளால் அங்கு கடமையில் இருந்தவர்களிடையே சந்தேகத்தைக் கொண்டுவர அவன் அவ்விடத்தை விட்டு வெளியேறி தகவல்களை உறுதிப்படுத்தினான்.

மறுநாள்... பத்திரிகையின் முன்பக்கச் செய்தி... அப்படியே அந்த வைத்தியசாலை ஆடிப்போய்விட்டது. "இலவச வைத்தியரைப் பார்க்க இரண்டு ரூபாய்..." பூரணமான ஒரு செய்திக் கட்டுரை ஆதாரங்களுடன் வெளியாகியதை அடுத்து சமூக மட்டத்தில் ஒரு விழிப்புணர்வின் பிரதிபலிப்பு தென்பட்டது.

அவசரக் கூட்டங்கள்... விசாரணைகள் குழுக்கள்... கணக்கு வழக்குகள்... தற்காலிக பதவி நீக்கங்கள்... எச்சரிக்கைக் கடிதங்கள்... அது இது என்று பல விடயங்கள் அந்த வைத்தியசாலையில் நடந்தேறிவிட்டன.

இந்தக் கசப்பான சம்பவத்தின் பின்னர்... அங்கு நடக்கும் ஒவ்வொரு விடயங்களிலும் அக்கறை செலுத்தப்பட்டதும்... பொதுமக்களின் உணர்வுகளுக்கு பெரும் மதிப்புக் கிடைத்ததும்... அவர்களின் தேவைகள் இலகுவில் பூர்த்தியாக்கப்பட்டதும்... அவனுக்கு ஒரு வித்தியாசமான உள்ளுணர்வைக் கொடுத்திருந்ததோடு மட்டுமல்லாது அவனது அடுத்த தேடலுக்கான தேவையையும் உணர்த்தி நின்றது.

இதன் தொடர்ச்சியாக இன்னுமொரு வைத்தியசாலையில் நேரடி ரவுண்டப். நோயாளராக மாறி சேகரிக்கப்பட்ட தகவல்களுடன் மறுநாள் தலைப்புச் செய்தி "டாக்டர்கள் கிளினிக்கில் அரட்டை... ஊழியர்கள் வாட்டில் குறட்டை" ஆதாரங்களுடன் அச்சேறியது. பத்திரிகை அலுவலகம் முற்றுகையிடப்பட்டு தலைகுனிந்து சென்றனர் சம்பந்தப்பட்டவர்கள்.

அவனது வேள்வி அப்பொழுது தான் ஆரம்பித்திருந்தது... அந்த மண்ணை விட்டுப் பிரியும் வரை...

**(சுகாதாரத் திணைக்களம் அந்த பத்திரிகையின் விளம்பரங்களை நிறுத்தியதும், வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களில் அவனது உறவினர் ஒருவர் உள்ளடக்கம் என்பதும் வெளியில் தெரியப்படுத்தப்படாத விடயங்கள்.)**

ஒரு சமுதாயத்தின் கருத்தியல் மாற்றங்கள் ஆளுமை பெறுவதற்கு பத்திரிகையாளர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது என்பதையும், சமுதாயத் தளத்தில் சிந்தனைகளை விரிவுபடுத்தி எழுத்துக்களை வடிவமைப்பது பத்திரிகையாளர்களின் கடமை என்பதையும், ஒரு இனத்தின் நீண்ட கால இருப்புகளுக்கு பத்திரிகையாளர்களின் பணி அவசியமென்பதையும்... புரிந்து கொள்வதற்கான தளமோ அல்லது அதற்குரிய வளமோ இந்த புலன்(ம்)பெயர் தேசத்தில் தேடினாலும் கிடைக்காது... என்பது அவன் அவனுக்குள்ளேயே கூறிக்கொள்ளும் சமாதானங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைந்து நினைந்து நெஞ்சம்...

நீர்வளத்தையும் நிலவளத்தையும் கண்ட தமிழர், உடலையும் மூளையையும் சிறப்பாகப் பாவித்து அயராது உழைத்து அவனியிலே சிறந்த நாகரிகத்தைப் படைத்தனர். ஆற்றுநீரையும் மழை நீரையும் பயன்படுத்திப் பல பயிர்வகைகளை வளர்த்து உடல் நலத்தைப் பேணியதுடன் பல உயிரினங்களையும் பாதுகாத்தனர். மழைநீரைத் தேக்குவதற்காகப் பல தேக்கங்களை அமைத்தனர். நீரின் தேவை அதிகரிக்கவும் நிலத்தின் வளத்தைப் பெருக்கவும் வழி தேடிய தமிழர் நிலத்தைத் தோண்டினால் நீர் கிடைக்கும் என்ற உண்மையினை அறிந்து நிலத்தைத் தோண்டினர். நீரைக் கண்டனர். அவற்றுக்குக் குளம், கிணறு என்று பெயரிட்டனர். கிணற்றிலிருந்து நீரை எடுப்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்தனர். ஆராய்வின் பயனாக துலா, உழண்டி, சூத்திரம் போன்றவற்றைக் கண்டறிந்தனர். கிணற்று நீரைக் கொண்டு உழுந்து, பயறு, குரக்கன், சாமை, இராசவள்ளி, சிறுவள்ளி, மரவள்ளி, மிளகாய், வெங்காயம், கத்தரி, வெண்டி, பாகல், புடோல் போன்ற பலவகையான பயிர்களையும் பயிரிட்டனர். மா, பலா, வாழை, தோடை, மாதுளை, கொய்யா, பப்பாசி, எலுமிச்சை, தென்னை போன்றவற்றையும் வளர்த்தனர். ஈழத்தில் அநேகமாக மாளிகை போன்ற வீடுகள் அமைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வளவையும் பூந்தோட்டங்களும் பழத்தோட்டங்களும் அழகூட்டி நிற்கும்.

தென்னை மரத்திலிருந்து பழுத்த தேங்காய் விழும் போது பப்பாசிமரத்தில் வீழ்ந்து அதிலுள்ள பழங்களை வீழ்த்துவதுடன் மாமரக்கொப்புக்களையும் அசைத்து விட மாம்பழங்கள் உதிர்ந்து தோடை மீது வீழ, பழுத்த தோடம்பழங்கள் எலுமிச்சை மீது வீழ்ந்து எலுமிச்சம் பழங்கள் எங்கும் சிதறி ஓடிப் பரவும். இத்தகைய மிகுந்த வளங்களுடன் வாழ்ந்த ஈழவர் பலர் வீடு, வளவு, நாடு போன்றவற்றை இழந்து, புலம்பெயர்ந்து அவற்றை **நினைந்து நினைந்து வருந்துகின்றனர்.** இதே நிலைமை சங்ககாலப் புலவரான கபிலருக்கும் ஏற்பட்டது. பறம்பு மலையை ஆண்ட பாரி என்ற சிற்றரசனின் ஆருயிர்த் தோழன் கபிலர். மூவேந்தராகிய சேர, சோழ, பாண்டியரால் வஞ்சிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார் பாரி. கபிலர் பாரியின் மகளிரைக் காப்பாற்றும் பொருட்டு பறம்புமலையை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை உருவாகியது. நாட்டை விட்டு வெளியேறியவர் மனதில் பறம்பு மலையின் வளம் நிறைந்த காட்சி நிழலாடியது. இதயம் வெடிப்பது போல் துன்பம் பீறிட்டது. தன் துன்பச் சுமையை இவ்வாறு சொல்லிப் பாடினார்.

**" வெப்புள் விளைந்த வேங்கைச் செங்சுவல்**
கார்ப்பெயற் கலித்த பெரும்பாட்டு ஈரத்துப்
பூழிமயங்கப் பல உழுது வித்திப்
பல்லி ஆடிய பல்கிளைச் செவ்விக்
களைகால் கழாலின் தோடு ஒலிபு நந்தி
மென்மயிற் புனிற்றுப் பெடைகடுப்ப நீடிக்
கருந்தாள் போகி ஒருங்கு பீள்விரிந்து
கீழும் மேலும் எஞ்சாமைப் பலகாய்த்து
வாலிதின் விளைந்த புதுவரகு அரியத்
தினைகொய்யக் கவ்வை கறுப்ப அவரைக்
கொழுங்கொடி விளர்க்காய் கோட்பதம் ஆக
நிலம்புதைப் பழுனிய மட்டின் தேறல்
புல்வேய்க் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து
நறுநெய்க் கடலை விசைப்பச்சோறு அட்டுப்
பெருந்தோள் தாலம் பூசல் மேவர
செருவெஞ் சேஎய் பெருவிறல் நாடே"

(புறம்: 120)

பகைவரைப் புறமுதுகோடச் செய்யும் வீரம் நிறைந்தவனும் புலவரால் விதந்து பாராட்டப்பட்டவனும் பாரி. சிறப்புக்குரிய பாரியின் நாடான பறம்பு மலையில் வாழ்ந்த மக்கள் ஊக்கம் உடையவர்கள். வேங்கை மரங்கள் நிறைந்த செம்மண்ணை உடைய மேட்டு நிலத்திலே கார்காலத்திலே நிறைவாக மழை பொழியும். மழை நீரைப் பயன்படுத்தி அம்மக்கள் உழுது பண்படுத்திய நிலத்தில் வரகு, தினை, எள், அவரை, கடலை போன்றவற்றை விளைவித்தனர். அவை பெரும் விளைச்சலைக் கொடுத்தன. நிலத்தில் புதைத்து வைத்துப் பாதுகாத்த மதுவை புல்லினால் வேய்ந்த குடில்களில் குடிக்கக் கொடுத்தனர். விளைந்த கடலையை நறுநெய்யில் பொரித்து உண்டு மகிழ்ந்தனர். கலங்களைத் துலக்கி அவற்றில் சோற்றினைச் சமைத்து மகிழ்வாக உண்டனர். அத்தகைய மண்ணை விட்டுப் பாரி மாய்ந்தனனே. நாமும் பிரிந்து செல்கிறோமே என நினைந்து நினைந்து நெஞ்சு நோகும்படியாகப் பாடிய பாடல் புறநானூற்றில் அமைந்துள்ளது. ●

**மீரா இராசையா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# See yourself in a whole new light.

*You have the power to control your success.*

Are you looking for a career opportunity where you can make a difference and bring balance to your life? Do you want to be your own boss, where the earning potential is limitless and your efforts are rewarded? If this is you, I'd like to talk to you.



**Chandran Rasalingam**
Associate Manager
Bus 416-412-0401 ext 2305
Cell 416-909-0400
Fax 416-412-1438
chandran.rasalingam@sunlife.com

2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

Sun Life Financial

Sun Life Financial advisors are contracted with Sun Life Financial Distributors (Canada) Inc., registered in Quebec as a financial services firm.
© Sun Life Assurance Company of Canada, 2009.

## தமிழ்த்தாய்

தாயகத்தின் உண்மை ஊடகம்

- 24 மணிநேரசெய்திகள்
- 24 மணிநேரவானொலி
- தமிழீழச்செய்திகள்
- இலங்கைச்செய்திகள்
- கனடாச்செய்திகள்
- இந்தியாச்செய்திகள்
- கவிதைகள்
- சமூகநிகழ்வுகள்

இவை அனைத்தும் தாங்கி புதுப் பொலிவுடன் உங்கள்




NEWS@TAMILTHAI.COM

**WWW.TAMILTHAI.COM**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன்**

பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியடைந்துள்ள மேலைத்தேச நாடுகள் பல உளவியல் சிகிச்சை முறைகளை புதிது புதிதாக உலகிற்கு வழங்கி வருகின்றன. அதேவேளையில் கீழைத்தேச நாடுகளில் நீண்ட காலமாக கடைப்பிடிக்கப்படுகின்ற தியான முறைகளை ஒதுக்கித் தவிர்த்திருந்த மேலைநாடுகள் மீண்டும் ஒரு புதிய முடிவுக்கும் வந்துள்ளன. மாற்றமுடியாத, அல்லது குறைக்க முடியாத உள-உடல் பிரச்சனைகளுக்கு மிகச் சிறந்த தீர்வாக 'தியானமே' எதிர்காலத்தில் விளங்கும் என்பதாகும். அண்மையில் வெளிவந்த ரொறன்ரோ ஸ்ரார் பத்திரிகையில் 'Cracking Depression' என்ற கட்டுரையில் கூறப்பட்டுள்ள அரிய கருத்துகளே மேலும் அதனை ஆராயத் தூண்டியது.



# தியானம் (Meditation)

## ஒரு உளவியல் சிகிச்சை

ஆசிய நாடுகளில் ஆயிரக்கணக்கான வருடங்கள் தியானத்துடன் மனித வாழ்வு இணைந்திருந்தது. உள-உடல் ரீதியில் இதன் பயன்பாடு உணரப்பட்டமையினால் இயல்பாகவே சமயத்தின் வழி நின்று வளர்ச்சியடைந்தது. இன்று இதன் மகத்துவத்தினை புரிந்துகொண்ட மேலைத்தேச நிபுணர்கள் மன நிலையையும் உடல் நிலையும் அழகாக ஒழுங்குபடுத்துவதில் தியானம் மிகவும் உதவும் என்று அறிக்கைகள் விடுகின்றனர். அண்மைக்கால ஆராய்ச்சிகளின் படி உலகில் 121 மில்லியன் மக்கள் உளநோயாளிகளாக இன்னும் உள்ளனர் என்றும், கனடாவில் மட்டும் 36 சதவீதத்தினர் உளக்குறைபாடு உள்ளவர்கள் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. உளச்சோர்வு, பதட்டம், பயம், பீதி போன்ற உளக்குறைபாடுள்ளவர்கள் அனைவரும் இனிமேல் தியானத்தின் மூலமே இதனை மாற்றவேண்டி வரலாம் எனவும் வைத்தியர்கள் கூறுகின்றனர்.

ரொறன்ரோவில் உளவியல் நிபுணர் **Zindel Segal** தற்போது தியானமுறைகளை அறிமுகம் செய்துள்ளார். இதற்கு முன்பே 1977ல் **Goleman** என்ற அறிஞர் தியானம் செய்பவர்கள் பற்றி சில கருத்துக்களை வெளியிட்டுள்ளார். "கண்களை மூடுதல், மந்திரங்களை உச்சரித்தல், புலன்களை ஒன்றாக்குதல், சிந்தனைகளை சிதறவிடாதிருத்தல் போன்றவற்றில் மீள்புத்தாக்கம் நிகழ்கிறது" என்பதே அவரது கருத்தாகும். "உளவியல், உடலியல், சுய கணிப்பு, நம்பிக்கை, மன அழுத்த குறைவு, இரத்த அழுத்த சமச்சீர், பதட்டமின்மை போன்ற பல தீர்வுகள் இதிலிருந்து பிறக்கின்றன" என்றும், "சுவாசத்தினை சமன் செய்து இதய ஒலியை நிலைநிறுத்துவதன் மூலம் உடல் சீரடைகிறது" என்றும் கூறுகின்றார்.

பொதுவாக உளச்சிகிச்சை முறை நோய் அறிமுறை, நோய் இருப்பு முறை, நோய் மாற்ற முறை போன்ற மூன்று நிலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மனித மனம் விழிப்பு நிலையில் உள்ளபோது தியானம் செய்யப்படின் சில ஒழுங்குகளைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. அமைதியுடன் ஒருமுகப்பட்டு உள்வலுவை கூட்டும் இத்தியானம் "நான் ஒரு ஆன்மா, வெளிச்சத்தின் அடையாளம், அமைதியுடன் வாழ்கிறேன், என் உடலுக்குள் உள்ளேன், வடிவம் இல்லை, உருவம் இல்லை, உள்ளொளியை ஏற்றுகிறேன், அன்பின் ஆழத்தினை உணர்கிறேன், நான் அந்த அன்பாகிறேன்" இப்படி சில ஆழ்மனப்படிவுகள் தொடர்கின்றன. ஒரு மனிநேரம் அநாவசியமாக சிந்தித்தவர்கள் தியானத்தில் சில நிமிடங்கள் செழுமையாக சிந்திக்கிறார்கள். உடல் ஓய்வு பெற மனக் காட்சிகளை ஒன்றாக்கி அன்பு, மகிழ்ச்சி, சக்தி இவர்களில் ஒன்றாகின்றன.

ஆசிய நாடுகளில் தியானம், யோகாப்பயிற்சி என்பன மிக முக்கியமான உளச்சிகிச்சை முறைகளாக கொள்ளலாம். இதில் தியானம் என்பது உளச் செயல்பாடுகளை கட்டுப்பாட்டில் கொண்டுவருவது. விழிப்புணர்வு, ஒருமுகப்படுத்தல், மகிழ்ச்சி, அன்பு, கருணை என்பவற்றினை மிகவும் ஆழமாக நினைவு கூறுதல் ஆகும். யோகாப் பயிற்சி தியானம் போன்றது எனினும் சில உடற்கட்டுப்பாடுகள், சுவாசக் கட்டுப்பாடுகள் கொண்டது. **Hata yoga** மற்றும் **Raja yoga** போன்ற முறைகள் மேற்குலகில் மிகவும் பிரபலமாகியுள்ளது.


**Shapird(1982) West (1987) Kwee (1990)** ஆகியோரின் ஆய்வுகளின் படி மாரடைப்பு, ஆஸ்துமா, நித்திரையின்மை, உயர் இரத்த அழுத்தம், கடுமையான உடல் வலி, படைப்பாற்றல், சுயகட்டுப்பாடு, திருமணதிருப்தி, கல்வி, திறமை, ஒழுக்கக் கட்டப்பாடு போன்ற பலவற்றிலும் தியானம் மிகவும் உதவுவதாக குறிப்பிட்டுள்ளனர்.

1986ல் **Brown & Engler** செய்த ஆய்வில் தியானம் செய்பவர்கள் வலுத்தாக்கல் உடையவர்களுமல்ல, பாலியல் பிரச்சனைகளுக்கு உட்பட்டவர்களுமல்ல என்கிறார். **Mederi** என்ற லத்தீன் சொல்லில் இருந்தே **Meditation** பிறந்தது. இதன் கருத்து மன ஆறுதல் என்பதாகும். உள் மனத்தினை ஆராய்தல், எல்லா சிந்தனைகளையும் நெற்றிக்கு கொண்டுவருதல், வெளியுலகிலிருந்து விடுவித்தல், அமைதிக்கு உட்படுதல் போன்றன இதில் நிகழ்கிறது.

இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வரும் நிலையில் இன்று உலகின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் சில நிமிடங்களில் ஆற்றப்படும் தியானம் பலன் தருமாயின் உண்மையில் இது ஒரு பூரண விளக்கமாகும். தொடர்ந்தும் உலகம் விருப்புடன் இதனையே செய்துவரும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறுவதம் பாட்டியின் பங்களிப்பு



அண்ணாமலைத் தாத்தாவுடன் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்த பறுவதம் பாட்டி நேரம் மாலை 6 மணியென்றதும் தொலைபேசித் தொடர்பினைத் துண்டித்துக்கொண்டார். தொலைபேசி மட்டுமல்ல, றேடியோ, ரீ.வீ அனைத்திற்கும் பாட்டி மாலைவேளையில் ஓய்வு கொடுப்பது வழக்கமாகிவிட்டது. அது நாங்கள் படிப்பதற்காகவே என்பது எங்களுக்குச் சற்று வளர்ந்தபின்னரே புரியவந்தது.

பாட்டி எங்கள் கல்வி விடயத்தில் சற்றுக்கடினமாக நடந்துகொண்டார். மாலை 6 மணியிலிருந்து 9 மணிவரை படிப்பதைத்தவிர ரீ.வீ பார்ப்பதிலிருந்து எதுவும் நாம் செய்யப் பாட்டி அனுமதிப்பது இல்லை. அது நமக்கு ஆரம்பகாலத்தில் எரிச்சலைக் கொடுத்தாலும், எமது பாடப்புள்ளிகளில் ஏற்பட்ட ஏற்றம் பாட்டியின்மேல் பக்தியையே பெருக்கியது. தமிழ்மொழி மட்டுமல்ல பாடசாலைப் பாடவேலைகளையும் நாம் வீட்டினில் கவனமாகச் செய்திட நல்ல வீட்டு ஆசிரியையாகவும், நல்ல துணைவியாகவும் விளங்கினார் பாட்டி. பாடங்களில் தனக்குத் தெரியாத விடயங்களாக இருந்தாலும் பக்கத்தில் இருந்து எம்மைக் கவனித்துக் கொள்வார் பாட்டி.

பாட்டியிடம் நாம் கற்றுக்கொண்டது வெறும் கல்வியை மட்டுமல்ல. அவருடைய அனுபவங்களும்தான். அதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். சில வருடங்களுக்கு முன் வழமைபோல் எமது ஊர்ச்சங்கம் கோடை காலத்தில் நடாத்திய விளையாட்டுப்போட்டிக்கு எங்கள் வீட்டிலிருந்து எல்லோரும் பங்குபற்றினோம். தடையோட்டப் போட்டி ஒன்றில் கடைசியாகிவிட்ட என்னால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஓடிவந்து பாட்டியின் மடியில் வீழ்ந்து அழத்தொடங்கிவிட்டேன்.

கட்டியெனை அணைத்தவாறே "அட சேரா! இதுக்குப்போய் அழுகிறியா? இதையும் நீ கற்றுக்கொள்ளத்தான் வேணும்"என்ற பாட்டியை நான் புரியாது நிமிர்ந்து பார்த்தேன். "சேரா, இந்த வயதில நீ தோல்வியையும் கற்றுக்கொண்டாத்தான் எதிர் காலத்தில நீ வளர்ந்து பெரியவனானதும் வாழ்க்கையில வாற பெரிய தோல்விகளைக்கண்டு துவளமாட்டாய். தவறான முடிவுகளை எடுக்கமாட்டாய். விளையாட்டாக இருந்தாலென்ன, கல்வியாக இருந்தால் என்ன, எந்த துறையாக இருந்தாலென்ன வெற்றியும் தோல்வியும் வரத்தான் செய்யும். தோல்வியையும் சந்திக்காவிடில் வெற்றியின் அருமை தெரியாமல் போய்விடும். வெற்றி, தோல்வி இரண்டும் கலந்ததுதான் வாழ்க்கை. வெற்றியைக்கண்டு சந்தோசமடையும் நாம் தோல்வியைக்கண்டு அழுதுபுலம்பக்கூடாது. அதை ஒரு தற்காலிக பின்னடைவாக பார்த்தல் வேண்டும். நமக்குக்கிடைக்கும் புகழ் கூட எமது வாழ்க்கைப்பாதையில் நாம் ஒருபோதும் வீழாதிருப்பதில் மட்டும் இல்லை. விழும்போதெல்லாம் எழுந்துநிற்பதில்தான் உள்ளது. தோல்விக்கான காரணத்தை ஆராய்ந்து அதை நிவர்த்தி செய்து மீண்டும் முயற்சி செய்யவேண்டும். அக்காரணத்தை ஆராயும்போது உன் முயற்ச்சியில் நீ சென்ற வழிகள், கையாண்ட முறைகள், துணைக்குச் சேர்த்துக்கொண்ட ஆட்கள் பற்றியெல்லாம் மீள்பார்வை செய்து, செப்பனிட்டு உன் பாதையினைச் செழுமைப்படுத்திக் கொள்ளவேணும்.

பாட்டியின் புத்திமதிகளினால் புதிய பலம் பெற்றது நான்மட்டுமல்ல, எமது வீடும்தான். அவருக்கு மட்டும் 24 மணிநேரமும் தமிழ்த்தொலைக்காட்சி பார்க்கவோ தமிழ் வானொலிக்காக தொலைபேசியில் கலந்துகொள்ளவோ ஆசையில்லாமலில்லை. எல்லாவற்றையும் திட்டமிட்டு செயற்படுத்திக் கொள்வார் பாட்டி. அவர் கனடாவில் வாழ்ந்துகொண்டிருக்கும் முதியோர்கள் மத்தியில் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிக்கொண்டு இருக்கிறார். ●

நீங்கா நினைவுகளுடன் பேரன் - **சேரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EZ Choice

Credit Counselling and Financial Services



## கடன் தொல்லையா?

என்ன செய்வதென்று தெரியவில்லையா?

*சகல கடன்களையும் ஒன்றிணைத்து ஒரு குறைந்த மாதாந்தக் கட்டணமாக மாற்றலாம்*

- தொலைபேசி அழைப்பு தொல்லையை நிறுத்தலாம்
- சம்பளத்தில் இருந்து பணம் உருவுவதை நிறுத்தலாம்
- தொடர்ந்து வீடு, கார் போன்றவற்றை வைத்திருக்கலாம்
- விரைவாக கடன் தொல்லையில் இருந்து விடுபடலாம்
- விரைவாக Credit ஐ சரி செய்து கொள்ளலாம்

**MORTGAGES**
Residential | Commercial
1st, 2nd, 3rd Mortgages
Refinancing / Equity take-out
Line of Credit (Personal & Business)
Loan (Personal & Business)

**RAVI LOGARAJAH**
Qualified Credit Counsellor

கடன் தொல்லைகளிலிருந்து விடுபட்டு புதிய வாழ்வு திரும்ப ஓர் அரிய சந்தர்ப்பம்

எம்மை அணுகுங்கள்
**905 896 9991 / 416 896 9991**

**Head Office : Mississauga**
29 Dundas Street East
**905-896-9991**
(Hurontario / Dundas)

**Scarborough:**
3852 Finch Ave East
**416-896-9991**
(Kennedy / Finch)

Montreal
**514-954-9208**

Ottawa
**613-244-9343**

email: info@ezchoicehome.com
www.ezchoicehome.com

# brightsun

*Print - Signs - Photos*

திருமண அழைப்பிதழ்கள்
தன்னறிமுக அட்டைகள்
விழா மலர்கள்
நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள்
மற்றும் அனைத்து விதமான
அச்சுவேலைகளும்
அழகான முறையில்
குறித்த நேரத்தில்
அச்சிட்டு தரப்படும்.

சகலவிதமான விளம்பர
பலகைகளும் அழகிய முறையில்
குறித்த நேரத்தில் செய்து தரப்படும்

போட்டோக்கள்
Enlargement செய்து
Frame போட்டுக் கொடுக்கப்படும்.

**Dir: 416-845-6565**
**Fax: 416-297-6497**
brightsun2000@gmail.com




**120 Dynamic Drive, Unit 23 (Markham & McNicoll) Scarborough Ontario M1V 5C8**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடியுங்கள்!




அருகில் உள்ள உருவத்தில் சிறிய வட்டங்களுள் 1 தொடக்கம் 12 வரையான எண்களை இடுக. ஆனால் ஒவ்வொரு கோட்டிலும் குறிக்கும் நான்கு இலக்கங்களையும் கூட்டினால் பெறப்படும் தொகை 26ஆக இருத்தல் வேண்டும்.

இதற்கான சரியான விடையை நவம்பர் மாதம் 30ம் திகதிக்கு முன்பாக எமக்கு கிடைக்கும்படி அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**THOORAL - P.O. Box 4056 McCowan Square, 1235 McCowan Road, Scarborough, Ontario M1H 0A4**
**Fax : 416 273 7606 E-mail : editorial@thooralonline.com**

## கடந்த இதழின் பரிசுக் கேள்வி - பரிசில் யாருக்கு?

# 2010 இல் சிறந்த வீரர்

உலகக் கோப்பை கால்பந்து தொடரின் சிறந்த கால்பந்து வீரராக உருகுவேயின் டீகோ ஃபோர்லானும், அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற மகுடத்திற்கும் சிறந்த இளம் வீரர் என்ற மகுடத்தையும் ஜெர்மனி வீரர் முல்லரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்தப் போட்டியில் ஸ்பெயினின் டேவிட் வில்லா, நெதர்லாந்தின் ஸ்னைடர், உருகுவேயின் ஃபோர்லான் ஆகியோர் 5 கோல் அடித்திருந்தனர்.

உருகுவே – ஜெர்மனி இடையிலான ஆட்டத்தில் அடித்த கோல் மூலமாக முல்லரும் இவர்களுடன் இணைந்து கொண்டார்.இந்த நிலையில், இறுதிப் போட்டியில் வில்லாவும், ஸ்னைடரும் கோல் அடிக்கத் தவறிவிட்டனர். இதனால், மேற்கூறிய 4 பேருமே 5 கோல் அடித்து சமநிலையில் இருந்தனர்.

இதனால், அதிக கோலடிக்க உதவியவர் யார் என்பது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்படி, தனது அணி வீரர்கள் 3 கோல் அடிப்பதற்கு முல்லர் உதவியிருந்தார். மற்றவர்கள் தலா ஒருமுறை மட்டுமே பிறர் கோலடிக்க உதவியிருந்தனர். இதையடுத்து கோல்டன் ஷூ விருது முல்லருக்குக் கிடைத்தது. இது தவிர, போட்டியின் சிறந்த இளம் வீரர் விருதும் முல்லருக்குக் கிடைத்திருக்கிறது.

இதன்படி தூறலும் சிறந்த வீரராக டீகோ ஃபோர்லானை தெரிவுசெய்துள்ளது.

**பரிசுபெறும் வாசகர்கள் பின்வருமாறு:**

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | - **$100** | கார்த்திகேயன் பரஞ்சோதி பிறம்டன். |
| இரண்டாவது பரிசு | - **$ 50** | நந்தன் நடேசப்பிள்ளை ஸ்காபரோ. |
| மூன்றாவது பரிசு | - **$ 25** | ரஞ்சனா குணரட்னம் ஸ்காபரோ. |


அத்துடன் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு மாபெரும் பரிசை பெறுகின்றார்.

செந்தில் பரமநாதன் – மிசிசாகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெய்ப்பாயசம்



**மலையாளம் - ஆங்கிலம் ஊடாகத் தமிழில்**

(கமலா தாஸ் (1934 – 2009) பிறப்பால் மலையாள மொழி பேசும் இந்துப் பெண். இறுதியில் இஸ்லாம் சமயத்திற்கு மாறி, கமலா சுரையா ஆகினார். இவர் சிறுகதைகள், கவிதைகள், பத்திகள், கட்டுரைகள், நாவல்கள் போன்றவற்றை மலையாளத்திலும் ஆங்கிலத்திலும் எழுதினார். அவருடைய சுயசரிதை அதிலுள்ள பாலுறவு சம்பந்தமான பொருளுக்காகப் பரபரப்பாகப் பேசப்பட்ட ஒன்று. அவருடைய சிறுகதைகள் பெண்கள், பாலுறவுப் பிரச்சினைகள் ஆகியவை பற்றிப் பேசும்.)

**என்.கே.மகாலிங்கம்**

எளிமையான ஈமச் சடங்குகளைச் செய்த பின், உதவியவர்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி சொல்லிவிட்டு, அந்த மனிதன் வீடு திரும்பிக் கொண்டிருந்தான். அவனை நாம் அச்சன் என்று சாதாரணமாக அழைக்கலாம். ஏனென்றால் நகரத்திலிருந்த அவனுடைய மூன்று பிள்ளைகளுக்கும் தான் அவனுடைய பெறுமதி தெரியும். அவனை அவர்கள் அச்சா என்றே அழைப்பார்கள்.

அந்நியர்களிடையே பஸ்ஸில் இருந்து கொண்டு அன்று ஒவ்வொரு நிமிடமும் நடந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் எண்ணிப் பார்த்தான்.

அவள் கொடுத்த குரலுடன் அவன் காலையில் எழும்பினான். 'உன்னியே, மூடிக் கொண்டு இப்படிப் படுத்து நித்திரை கொள்ளாதே. இன்றைக்கு திங்கட் கிழமை' அவள் தன் மூத்த மகனைக் கூப்பிட்டாள். பிறகு, அவளுடைய வெள்ளைச் சேலை சரசரக்க சமையலறைக்குள் போய் விட்டாள். எனக்கு பெரியதொரு கிளாசில் கோப்பி கொண்டு வந்தாள். பிறகு...? அதன் பிறகு என்ன நடந்தது...? மறக்க முடியாத அளவு அதன் பிறகு அவள் ஏதாவது சொன்னாளா? 'மூடிக் கொண்டு படுத்து நித்திரை கொள்ளாதே. இன்றைக்கு திங்கட்கிழமை' அந்த வரி மட்டும் அவன் மனதில் நின்று ஊசலாடியது. பிரார்த்தனையைப் போல, அதைத் தனக்குத் தானே திரும்பத் திரும்ப உருப் போட்டான். அதை மறந்து விட்டால் தன் இழப்பை அவனால் தாங்கவே முடியாமல் போய்விடும்.

காலையில் அவன் வேலைக்குப் போனபோது, பிள்ளைகள் அவளுடன் தான் இருந்தார்கள். அவர்களுடைய காலைச் சாப்பாட்டை அவள் தான் சிறிய அலுமினியப் பெட்டிகளில் கொண்டு வந்தாள். அவளுடைய வலது கையில் சிறிதாக மஞ்சள் பூசப்பட்டிருந்தது.

வேலையில் அவளைப் பற்றி அவன் நினைக்கவே இல்லை. அவர்கள் இருவரும் ஓரிரண்டு வருடம் காதலித்தார்கள். பின்னர், பெற்றோர்களின் விருப்பமில்லாமலே திருமணம் நடந்தது. அதற்காக அவர்கள் கவலைப்படவே இல்லை. பணமின்மையாலும், பிள்ளைகளுக்கு வந்த சிறுசிறு சுகவீனத்தாலும் அவர்கள் அடிக்கடி மனமுடைந்து போயிருக்கிறார்கள். பின்னர் அவள் தன் தோற்றத்தைப் பற்றிக் கவனம் கொள்ளவும் இல்லை. ஓரளவு, அவனும் சிரிக்கும் இயல்பையும் மறந்து விட்டான்.

இருப்பினும், அவர்கள் இருவரும் நேசமாகவே இருந்தார்கள். அவர்களுடைய மூன்று பிள்ளைகளும் அவர்களில் அன்பு செலுத்தினார்கள். அவர்கள் மூவருமே ஆண் குழந்தைகள். உன்னிக்கு பத்து வயது. பாலனுக்கு ஏழு. ராஜனுக்கு ஐந்து. அந்த மூன்று ஆண் பிள்ளைகளின் முகங்களும் எந்த நேரமும் அழுக்காகவே இருக்கும். அவர்கள் பெரும் அழகுள்ளவர்களோ, பிரகாசமானவர்களோ அல்லர். ஆனால் தாயும் தந்தையும் இப்படிச் சொல்லிக் கொள்வார்கள்.

'உன்னி எந்த நேரமும் ஏதாவது செய்து கொண்டிருக்கிறான். அவன் ஒரு என்ஜினியராகவே வருவான்.'

'பாலனை நாங்கள் டொக்ரராகவே படிப்பிக்க வேண்டும். அவனுடைய நெற்றியைப் பார். அந்தப் பரந்த நெற்றி பிரகாசமான அறிவையே குறிக்கிறது.'

'ராஜன் இருட்டுக்குப் பயப்பட மாட்டான். அவன் கெட்டிக்காரன். அவனை இராணுவத்தில் சேர்க்க வேண்டும்.'

அவர்கள் நகரத்தில் நடுத்தரக் குடும்பங்கள் வசித்த ஒடுங்கிய தெருவில் வசித்தார்கள். முதலாம் மாடியில் மூன்று அறைகள். இரண்டு பேரே நிற்கக் கூடிய அகலம் குறைந்த விறாந்தை. தாய் ஒரு சட்டியில் பன்னீர்ச் செடியை வளர்த்தாள். அது இன்னும் பூக்கவில்லை.

சமையலறைச் சுவரிலுள்ள கொழுக்கிகளில் செப்புக் கரண்டிகளும் அகப்பைகளும் தொங்கின. அடுப்புப் பக்கத்தில் ஒரு பலகைக் குத்தி கிடந்தது. தகப்பன் வேலையிலிருந்து வரும்போது அதில்தான் வழமையாக அவளிருந்து சப்பாத்தி செய்து கொண்டிருப்பாள்.

பஸ் நின்றபோது அவன் இறங்கினான். முழங்காலில் சிறிதாக வலித்தது. மூட்டுவாத நோயின் ஆரம்பமா? நான் படுக்கையில் விழுந்தால் யார் என் பிள்ளைகளைக் கவனிப்பார்கள்? சடுதியாக, அவன் கண்களில் நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரம்பியது. அழுக்கான லேஞ்சியால் முகத்தைத் துடைத்துக் கொண்டு தன் நடையைத் துரிதப்படுத்தினான்.

பிள்ளைகள் படுக்கப் போய் விட்டார்களா? அவர்கள் ஏதாவது சாப்பிட்டார்களா? அல்லது நித்திரை வரும்வரை அழுதார்களா? அவர்கள் எதையும் புரிந்து கொள்வதற்கு இன்னும் பக்குவம் வராத சிறியவர்களே. அவளை நான் ரக்ஸியில் ஏற்றும்போது அங்கே மூத்தவன் உன்னி மட்டும் சும்மா நின்று பார்த்துக் கொண்டிருந்தான். கடைசி மகன் மட்டுமே அழுதான். அதுவும் அவனும் ரக்ஸியில் வரவேண்டும் என்பதற்காகவே. நிச்சயமாக அவர்களுக்கு மரணம் என்றால் என்ன அர்த்தம் என்று தெரியாது.

எனக்குத் தான் தெரியுமா? இல்லை. நான் மட்டும் எப்பொழுதாவது அதைப்பற்றிக் கற்பனை செய்திருந்தேனா, அவள் ஒருநாள் மாலையில் விழுந்து இறந்து விடுவாள் என்று. ஒருவருக்கும் போய் வருகிறேன் என்று கூடச் சொல்லாமல் போய் விடுவாள் என்று.

வேலையிலிருந்து வந்து சமையலறை ஜன்னலூடாகப் பார்த்தான். அவள் அங்கே இல்லை.

முற்றத்தில் பிள்ளைகள் விளையாடும் சத்தம் கேட்டது. 'முதல்தரமான அடி.' உன்னி சொன்னான்.

முன் கதவைத் தன் திறப்பால் திறந்தான். அதன் பிறகு தான் அவளைக் கண்டான். தரையில் விழுந்து கிடந்தாள். அவளுடைய இதழ்கள் விரிந்திருந்தன. அவள் வழுக்கி விழுந்து விட்டாள் என்றுதான் நினைத்தான். ஆனால் வைத்தியசாலையில் வைத்தியர் சொன்னார், 'ஒன்றரை மணித்தியாலத்திற்கு முன்னரே இறந்து விட்டாள். அவளுடைய இதயம் நின்று விட்டது.'

பலவிதமான உணர்ச்சிகளால் அவன் குழப்பமடைந்தான். இரண்டு காரணங்களுக்காக அவளில் அவன் கோபப்பட்டான். எல்லாப் பொறுப்புக்களையும் என்னிடம் ஒப்படைத்து விட்டு, ஒரு முன்னெச்சரிக்கையும் இல்லாமல் அவள் எப்படிப் போவாள்?

யார் இப்பொழுது பிள்ளைகளை குளிப்பாட்டுவது? அவர்களுக்கு யார் சமைத்துக் கொடுப்பது? அவர்கள் சுகவீனமுற்றால் யார் அவர்களைக் கவனிப்பது?

'என்னுடைய மனைவி இறந்து விட்டாள்' தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். 'என்னுடைய மனைவி திடீரென்று இறந்து விட்டாள். அவளுடைய இதயம் நின்று விட்டது. எனக்கு இரண்டு நாள் விடுப்புத் தேவை.'

பெரும் விடுப்பு விண்ணப்பம். விடுப்பு மனைவிக்குச் சுகவீனம் என்பதற்காக அல்ல. விடுப்பு, அவள் இறந்து விட்டாள் என்பதற்காக. உயரதிகாரி அவனைத் தன் அறைக்குள் அழைக்கலாம். தன் கவலையைத் தெரிவிக்கலாம். அவன் கவலை! அது யாருக்குத் தேவை? அவனுக்கு அவளைத் தெரியாது. அவளுடைய சுருண்ட கூந்தலையோ, சோர்வான புன்னகையையோ, மெதுவான நடையையோ தெரியாது. அவை அனைத்தும் அவன் தொலைத்தவை.

அவன் கதவைத் திறந்தபோது அவனுடைய இளைய மகன் அவனிடம் ஓடி வந்தான். 'அம்மா இன்னும் வரவில்லையா?' என்று கேட்டான்.

எவ்வளவு கெதியில் அவன் மறந்து விட்டான்! ரக்ஸியில் எடுத்துச் சென்ற உடம்பு தனியாகத் திரும்பி வரும் என்று உண்மையிலேயே நினைத்தானா?

அவனை அவன் சமையலறைக்குக் கூட்டிச் சென்றான்.

'உன்னி' அவன் கூப்பிட்டான்.

'என்ன அச்சா?'

உன்னி சமையலறைக்குள் வந்தான்.

'பாலன் நித்திரை கொள்கிறான்.'

'சரி. நீங்கள் எல்லாரும் ஏதாவது சாப்பிட்டீர்களா?'

'இல்லை'

யன்னல் தட்டில் இருந்த பாத்திரங்கள் மூடியிருந்த கோப்பைகளைத் திறந்தான். சப்பாத்தி, சோறு, உருளைக் கிழங்குக் கறி, கிழங்குப் பொரியல், தயிர் - அவள் செய்து வைத்திருந்த உணவுகள். ஒரு கிளாஸ் கோப்பையில் நெய்ப்பாயசம். அதைப் பிள்ளைகளுக்காகச் சிலவேளை செய்வாள்.

இந்த உணவுகளை பிள்ளைகள் உண்ணக் கூடாது. அவை சாவால் தீண்டப்பட்டவை.

'இவை குளிர்ந்து போய் விட்டன. உங்களுக்கு நான் உப்புமா செய்கிறேன்' என்று அவன் சொன்னான்.

'அச்சா...' அது உன்னி.

'ஊம்?'

'அம்மா எப்போ வருவார்? அவர் இப்போ சுகமா இருக்கிறாரா?'

உண்மை இன்னும் ஒருநாள் பொறுத்திருக்கட்டும் என்று அவன் நினைத்தான். இன்றிரவே துக்கத்தை அவர்களுக்குச் சொல்வதில் பயனில்லை.

'அம்மா வருவார்' அவன் சொன்னான்.

கழுவிய கோப்பைகளை கீழே நிலத்தில் வைத்தான். இரண்டு கோப்பைகள்.

'பாலன் தூங்கட்டும்' அவன் சொன்னான்.

'அச்சா, நெய்ப்பாயசம்' ராஜன் சந்தோசமாக கூவினான். ஒரு விரலை அதற்குள் வைத்தான்.

தன் மனைவி வழக்கமாக இருக்கும் மரக் குத்தியில் குந்தினான்.



'உன்னி, நீ போடுறியா? அச்சனுக்கு அவ்வளவு சுகமில்லை. தலையிடி' அவர்கள் உண்ணட்டும். இனி ஒருநாளுமே அவர்களின் தாய் சமைத்த உணவை உண்ணப் போவதில்லை.

பாயசத்தைக் குடிக்கத் தொடங்கினார்கள். அவன் அசையாமல் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'உன்னி, உனக்குச் சோறு வேண்டாமா?'

'வேண்டாம். எங்களுக்குப் பாயசம் மட்டும் தான் வேணும். நல்ல ருசியாக இருக்கிறது.'

'உண்மை. அம்மா மிகவும் ருசியாகப் பாயசம் சமைத்து வைத்திருக்கிறார்' என்று ராஜன் சொன்னான்.

அச்சன் எழும்பி கழிவறையை நோக்கி அவசரமாக நடந்தான். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Golden Store Fixtures

*Friend for your Business*




## Taking your Business Seriously is important to Our Success



- Acrylics
- Counter Top Displays
- Glass Displays
- Grid panels & Accessories
- Mannequins
- Pegboard & Accessories
- Racks
- Shopping Carts & Baskets
- Showcases,
- Signs & Signs Holders
- Slatwall & Accessories
- Steel Shelving
- Wood Displays.

355 Admiral Blvd. Unit 5 Mississauga, ON, L5T 2N1. Tel: 905 565 6555
5215 Finch ave E Unit 202, Scarborough, ON, M1S 0C2. Tel: 416 286 0333 Fax: 905 5658655

Web: www.goldenstorefixtures.com E-Mail: sales@goldenstoredixtures.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்கால நினைவுகள்...

நினைவுகள் என்னும்போதே அது நிச்சயம் இறந்தகாலமாகத்தான் இருக்கவேண்டும். அவ்வாறிருக்க இது என்ன 'நிகழ்கால நினைவுகள்' என்று எண்ணத்தோன்றுகின்றதா? உண்மைதான் நமது அன்றாடங்களில் தொலைந்துபோய், தினசரி நாளோட்டத்தில் நம்மையும் திணித்துக்கொண்டு எமது ஆயுளின் சிறு பகுதியைக் கூட சுய சந்தோஷத்துக்காக ஒதுக்கிக் கொள்ளாமல் அலைந்து திரியும் நாம் தொலைத்தது என்ன? நிகழ்கால நினைவுகளைத் தானே! நாளைய பொழுதுகளில் அசைபோடுவதற்கு நாங்கள் இன்றைய பசுமைகளை சேர்த்து வைக்கவேண்டும். இன்றைய வரட்சிகள் நாளைய வெறுமையல்லவா?

இயந்திர வாழ்க்கை என்று சலித்துக்கொள்ளும் நாம் எமது தாயகத்திலும் அவ்வாறுதான் இருந்தோம். இருப்பினும் அங்கு ஓர் பற்றுதல் போன்ற ஏதோவொன்று இருந்தது போல் நினைப்பு. அவ்வாறாயின் நாம் இங்கு தொலைத்தது என்ன? சுருக்கமாக சொன்னால், சுயமாக சிந்தித்து முடிவெடுத்து தேவைகளைப் புரிந்துகொண்டு தெரிந்தெடுக்க வேண்டிய நாம் எமது பொறுப்புக்கள் அனைத்தையும் மற்றவர்களிடம் கொடுத்துவிட்டோம். இன்று மற்றவர்கள் போகின்ற பாதையில் மந்திரத்தால் கட்டுண்டவர்கள் போல் மயங்கிக் கிடக்கின்றோம்.




என்ன புரியாத புதிராகத் தெரிகின்றதா?

எமது தேவை என்ன? எமது பணபலம் என்ன? நாம் வாங்குகின்ற பொருள் எமது சக்திக்கு உட்பட்டதா? என்று நம்மில் எத்தனை பேர் சீரறிந்து பார்க்கின்றோம். மற்றவர்களுடன் ஒப்பிட்டு... கடனில் வாங்கும் வீடு, கார்... இவை உதாரணங்கள் மட்டுமல்ல இதில் சங்கடப்பட்டு சந்திக்கு வந்தவர்கள் எத்தனை பேர்?

"கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்". ஓர் கடன்பட்டவனின் மனநிலையானது அவனது சுயமரியாதை, சுயசிந்தனை மற்றும் மன அமைதி ஆகியவற்றினை சிதறடித்து அமைதியான வாழ்க்கையினை சூறாவளியாக்குகின்றது. கலைந்து போன மனதுக்குள் அமைதியினை காண்பதற்கு எத்தனித்தாலும் முடிவதில்லை.

இவ்வாறிருக்க... இன்றைய பொழுதுகளில் பசுமையை நாம் எங்கு சென்று தேடுவது? வியாபார உலகு... ஒருவரை ஒருவர் சூறையாடும் எண்ணத்தோடு அலைந்துதிரியும் மானிடம், கோயில்கள் கூட ஒரு வகை வியாபாரமாயின் மன அமைதியை எங்கு போய் தேடுவது? இத்தனைக்கும் மத்தியில் கொழுகொம்பு தேடி அலையும் மானிடம்... பிடித்துக்கொண்ட கொப்பு நல்லதா? கெட்டதா? என்று பார்ப்பதற்குக் கூட வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை.

விளைவு... மீண்டும் விரக்திக்குள் நாம் தள்ளப்படுகின்றோம். விதியை நொந்து கொள்கின்றோம். ஓடுகிறோம், ஓடுகிறோம்... இங்குதான் நாம் சற்று நின்று நிதானமாய் சிந்திக்கவேண்டும்.

மற்றவர்களால் இயக்கப்படுவதற்கு நாம் சுயசிந்தனையற்றவர்கள் அல்லவே. எம்மை நாம் புரிந்துகொள்ள இன்னொருவர் எமக்கேன்? "உன்னை நீயே கேள்வி கேள்" எவனொருவன் தன்னைத்தானே கேள்விகளால் கணைதொடுக்கின்றானோ அவன் தன்னை புடம் போட்டுக்கொள்கின்றான். நான் யார்? எனது தேவை என்ன?

சரி இதற்கும் நிகழ்கால நினைவுகளுக்கும் என்ன சம்பந்தம். இன்றைய எமது நினைவானது பசுமையான, அமைதியான, ஆரோக்கியமான எண்ணங்களைக் கொண்டிருக்க வேண்டியது மிக மிக அவசியம். பிரார்த்தனைகள், தியானங்கள், எங்களுக்கான நேர ஒதுக்கீடுகள்... என்று இன்றைய பொழுதின் இயக்கத்தில் துணைபோன இயற்கையுடன் இரண்டறக் கலந்துவிடுங்கள்.

மீண்டுமொருமுறை, இன்றைய பொழுதுகளை பசுமையாக்குங்கள். நிகழ்காலம் சிறப்பாயின் எதிர்காலம் உங்கள் கைகளில் குதூகலிக்கும். ●

கருணா கோபாலபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துக் களம்

## இளவயதுக் காதல் பாடமா? பாவமா?

இளவயதுக் காதல் அது நன்மையை விளைவிக்குமா, இல்லையா என்பதனை இந்த இதழில் விவாதக்களமாக்கியிருக்கின்றோம்.

இல்லற வாழ்வுக்கு மூலாதாரமே காதல்தான். உளவியல் நிபுணர்களின் கருத்துக்களின்படி காதலின் முதல் ஒரு படி பரீட்சயம் என்றே கூறுகின்றனர். ஒரு சில இளம்வயதினர் அப்பரீச்சயத்தையே காதல் என நம்பி ஏமாறுகின்றனர். மேலும் அதற்கு இன்றைய சினிமாக்கள் நிஜவாழ்க்கைக்கு ஒவ்வாத கருத்துக்களை விதைத்து வந்தாலும், பல்லாண்டு வாழ்வுக்கு அடித்தளமாகிய காதல், உலக அனுபவமற்ற இளவயதில் பற்றிக்கொண்டால், அதைப் பாடமாகக் கொண்டு... ஒரு பக்கமாக வைத்து விட்டு அன்றாட வாழ்க்கையின் தேவைகளிலேயே கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமா அல்லது அனுபவிக்க வேண்டிய நேரத்தில் எல்லாவற்றையும் அனுபவித்து கல்வியில் கவனம் செலுத்தாமல் இளவயதுக் காதலை பாவமாக எடுத்துக் கொள்வதா? கருத்துக்களை வாசகர்களிடம் எதிர்பார்த்தோம்.

**வே. மணிமேகலை (ரொறன்ரோ):**

மனிதரைப்பற்றி புரிந்துகொள்ளமுடியாத வயதில் அடிக்கடி சந்திக்கும், அல்லது சிரிக்கவைத்துப்பேசும் ஒருவருடன் பழகுவதை காதலென நம்பி பாடசாலைப் பாடத்தைக்கெடுத்து, உறவுகளின் நிம்மதியைக் கெடுத்து, வாழ்வதனை வாழ்க்கைக்குரிய பாடமாக எடுத்துவிட முடியாது. ஒளிமயமான தம் எதிர்காலத்தினை பாழடிக்கும் இவ்விளமைக்காதல் ஒரு பாவமான செயலே.

**செ. ஜனகன் (மார்க்கம்):**

அன்றாடம் சந்திப்பவர்களுடன் இளவயதில் பேசிப்பழகுவதனை சக மாணவர்கள் ஒருவரை ஒருவர் இணைத்துப் பேசிப்பொழுதுபோக்கிடுவர். அதுதான் காதல் என நம்பி இவர்களும் தம் எதிர்காலத்தினையே பாழடித்துவிடுவர். இப்படி காதலித்து, கல்வியில் கவனமில்லாமல் ஏமாந்து வாழ்க்கையை படிக்க மறுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

**ந. இளங்கண்ணன் (ஸ்காபரோ):**

பள்ளிக்காதல் அப்பள்ளிப் படலை வரைக்குமே. பருவக் கவர்ச்சியால் வந்த இளவயதுக்காதல் பருவம் மாறும்போது அதுவும் மாறிவிடும். திசைதெரியாத இவ்வயதுக்காதல் தவறிய பாதையில் சென்றுவிட்டால், காரியம் முடிந்தபின் அனுபவம் எனும் பாடம் வந்தென்ன இலாபம்? குருகியகால சந்தோசத்திற்காக முழு வாழ்க்கையினையும் தொலைத்துவிட்ட பாவிகள்.

**மு. கமலாம்பிகை (ஸ்காபரோ):**

இளமைக்காதல் இல்லாமல் போவதே வழமை. இருந்தாலும் காலம் மாறிவிட்டது. நாடும் சூழலும் மாறிவிட்டது. இங்கு பிறந்த பிள்ளைகள் எங்கள் கலாச்சாரம் பற்றி எங்கே சிந்திக்கப்போகிறார்கள். காதலெனும் மாயையில் வீழ்ந்துவிட்டால் யார் பேச்சைக் கேட்கப் போகிறார்கள். அவர்கள் ஏமாந்தாலும் கொஞ்சமும் கவலைப்படப் போவதில்லை. பெற்றோர் தான்... பாவங்கள்.

**பத்மா (கொழும்பு):**

இளவயதில் எமக்கேற்பட்ட காதலை பாடமாக்கி மற்றவர்கள் முன் தாழ்ந்து போய்விடக்கூடாது என்ற வைராக்கியத்துடன் 30 வருடங்களாக நானும் எனது கணவனும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்கள் இளவயதுக் காதல் ஒரு பாடமே.

**த. நான்சி (மிசிசாகா):**

காதல், காதல் என்று பாடசாலையையும் கட்பண்ணி, தன்னையும் ஏமாற்றி, பெற்றோரையும் ஏமாற்றி தன் எதிர்காலத்தை வீணடித்தவளை பார்த்து, அவள் தன் காதலன் என நம்பிய ஒரு இளைஞன் கேட்டானே ஒரு கேள்வி. "பதினேழு வருடமாய் கண்ணை இமை காப்பதுபோல உன்னைக் காத்துவளர்த்த உன் பெற்றோரையே ஏமாற்றுகிற நீ, ஒரு சில மாதங்கள் பழகிய என்னை ஏமாற்றமாட்டாய் என்பது என்ன நிச்சயம்! யாரை நம்பினாலும் உன்னை நம்பக்கூடாது".
(உண்மைச்சம்பவம்) பாவம் அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துா. கதிரவேலு (பிக்கரிங்):

இளவயதில் ஆணும்பெண்ணும் தாம் ஒருவருக்கொருவர் நல்லவர்களாக காட்டுவதற்காக செயற்படும்போது, ஒருவரால் ஒருவர் கவரப்படுகிறார்கள்.
அதை உண்மையான அன்பாக எண்ணி காதல் பட்டமும் சூட்டி அவ்வுறவை வளர்த்து அது திருமணத்தில் முடிந்தாலும், போர்வைகள் விலக பின்னர் என்ன... கீரியும் பாம்பும்தான். பாவம்! பாவம்! பாவம்!

பா. பூமிகா (பிறம்ரன்):

இளவயது என்பது அறியாத வயது என்று கூறும் காலமல்ல இது. கல்லூரிக் கல்வியிலிருந்து கணனி வரைக்கும் வாழ்வியல் பற்றி விதம் விதமாய் அறிவைப் பெற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலையில் வளர்ந்துகொண்டு இருக்கும் நாம் இளவயதாயினும் இடம்தவற மாட்டோம். இளமைக் காதலில் விழ முன்னரே அப்பாடத்தைப் படித்தறிந்துவிட்டோம். எனவே சரியான தெரிவுடனான எமது முடிவு பாவம் என்றும் கூறமுடியாது.

# போர்வைகள் விலக பின்னர் என்ன... கீரியும் பாம்பும்தான்

ப. சுமன் (கொழும்பு):

மாயை போன்றது காதல். அதுவும் இளவயதில் வந்துவிட்டால் பருவமாற்றங்களால் வரும் உணர்வுகள் எதனையும் செய்யத்தூண்டும். வாழ்வியல் கட்டுப்பாடுகளை இழக்கச்செய்யும். தன் கல்வியை இழக்கச்செய்யும். உறவை இழக்கச்செய்யும். தன்னையே இழக்கச்செய்யும். ஈற்றில் சமுதாயத்தில் இழிபிறவிகளாக வாழவேண்டியதுதான். பாடமாகக்கொள்ள வாழ்க்கை ஒரு விளையாட்டல்ல.

ச.வரதன் (ஏஜெக்ஸ்):

இளமைக் காதலாயினும், பெற்றோர்களும் அதனை ஏற்றுக்கொண்டு பிள்ளைகளை வழிநடத்தும்போது, அவர்களுக்கு கொடுக்கப்படும் நம்பிக்கையும், உற்சாகமும் அவர்களை தவறான வழிகளுக்கு இட்டுச்செல்லாது நல்வழிப்படுத்தும். அதைவிடுத்து பழிக்குப்பழி, இரத்தத்திற்கு இரத்தம் என்று புறப்பட்டால் யாருக்கும் நிம்மதியில்லை. பாடமோ? பாவமோ? அவர்கள் முடிவுசெய்துவிட்டார்கள். முடித்துவிடவேண்டியதுதான்.

பரந்தாமன் (எற்றோபிக்கோ):

இளவயதினில் ஏற்படுவது ஒருவித கவர்ச்சியே அன்றி காதலாகக் கொள்ளமுடியாது. இது அந்த வயதில் ஏற்படும் பருவமாற்றத்தின் வெளிப்பாடே. இந்தப் பருவ மாற்றத்தில் சிக்காது தங்கள் எதிர்காலத்தை திட்டமிட்டுக்கொள்பவர்களே வெற்றிபெறுகிறார்கள்.

வசந்தன் (ரொறன்ரோ):

நாங்கள் ஒன்றும் காதலில் விழுந்து எங்கள் வாழ்க்கைத் தொலைக்க நல்லது கெட்டது தெரியாதவர்கள் அல்ல. எமது எதிர்கால வாழ்க்கை எங்களுக்கு மிகவும் முக்கியம். எமது வாழ்க்கையை ஒழுங்காக கொண்டுசெல்லவேண்டும் என்று நம்பிக்கையும் பொறுப்பும் எமக்குண்டு. எனவே எங்களது இளவயதுக் காதல் ஒரு பாடமே அன்றி பாவமில்லை.

இது உங்கள் கருத்துக்களுக்கான பக்கம்...
உங்களின் ஆரோக்கியமான கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துக் கூறுங்கள்.
அடுத்த இதழின் தலைப்பு:

**எமது உணவு முறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்படவேண்டுமா?**

உங்கள் கருத்துக்களை பின்வரும் முறைகளில் அனுப்பலாம்:
**Fax: 416-273 7606 Email: editorial@thooralonline.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காமெடி Collections...

"உன் மனைவி மெகா சீரியலுக்கு
அடிமை ஆகிட்டாள்னு எப்படிச் சொல்றே...?"

"ஒண்ணு அழுதுகிட்டே பேசறா...
இல்லைன்னா ஆவேசமா பேசறாளே..!"

போட்டோவுல பக்கத்துல பொண்டாட்டிய
வச்சிக்கிட்டு உங்களால எப்படி ஸார் சிரிக்க
முடிஞ்சுது...

அது கிராஃபிக்ஸ்ல எடுத்தது ஸார்!

மனைவி: ஏங்க உங்க பிரண்டுக்கு
பார்த்திருக்குற பொண்ணு நல்லாவேயில்லையே...
நீங்களாவது சொல்லக் கூடாதா?
கணவன்: நான் ஏன் சொல்லணும்.
மனைவி: நீங்க அவர் பிரண்டுதானே
கணவன்: அவன் மட்டும் எனக்கு
சொன்னானா என்ன?

சர்தார்ஜி நர்ஸைக் காதலிக்கிறாராம்.
அதுக்காகவா நர்ஸ் கோபமா இருக்காங்க?
இல்ல சர்தார்ஜி ஐ லவ் யூ சிஸ்டர்னு
சொல்லிட்டாராம்!

கணவர்: இது மாதிரி என்கிட்டே தொடர்ந்து
சண்டை போட்டுக்கிட்டே இருந்தால்
ஒரு நாள் மிருகமா மாறிடுவேன் ஜாக்கிரதை.
மனைவி: நான் எலியைப் பார்த்தெல்லாம்
பயப்பட மாட்டேன்!

"ஏன் என்னோட கச்சேரிக்கு வராம
விட்டுட்டீங்க..."
"ஸாரி சார்... அன்னைக்கு
வீட்லயே தூங்கிட்டேன்!"

இந்த நீச்சல் வீரருக்கு இவ்வளவு
பந்தா தேவையில்லை.
ஏன் அப்படி என்ன செஞ்சுட்டாரு?
நீச்சல் போட்டில கலந்துக்க வந்தவரு
கோட் சூட்டோட தண்ணில குதிக்கறாரு...
பாருங்க!

இந்த நெருப்புக் குச்சி இப்ப ஏன்
எரிய மாட்டேங்குதுன்னு தெரியலியே.
நல்லா உரசிப் பாரு...
போன தடவை பத்தவச்சப்போ
நல்லாத்தானே எரிஞ்சுது???

"ஊசி போடும்போது கண்ணை மூடிட்டீங்களே....
மனசுல சாமியை நினைச்சுக்கிட்டீங்களா?"
"இல்ல டாக்டர்...
நர்ஸை நினைச்சுகிட்டேன்....!"

சிரிப்போ... சிரிப்பு...

ராகவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sports News



## கிரேம் ஸ்மித் விலகல்

தென்னாப்பிரிக்கா இருபதுக்கு இருபது அணியின் தலைவராக செயற்பட்ட கிரேம் ஸ்மித் தனது பதவியிலிருந்து விலக்கிக்கொண்டுள்ளார்.

2011 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் தென்னாபிரிக்கா அணியின் விக்கட் காப்பாளராக கிரேம் ஸ்மித் நியமிக்கப்பட்டதன் காரணமாக அவர் இருபதுக்கு இருபது தலைமைத்துவ பதவியிலிருந்து விலகிக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

29 வயதான கிரேம் ஸ்மித் 'இன்னும் 6 வருடங்கள் வரை மாத்திரமே கிரிக்கெட் துறையில் விளையாட எதிர்ப்பார்ப்பதாகவும், உலககிண்ணத்தை வெற்றிபெறும் நோக்கில் விளையாடவுள்ளதாகவும்' தெரிவித்துள்ளார்.

## முத்தையா முரளிதரன் சர்வதேச விளையாட்டு அரங்கு!



இலங்கை, கண்டி மாவட்டத்தின் பலகெல்ல பிரதேசத்தில் நவீன வசதிகளுடன் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் கிறிக்கெற் விளையாட்டு மைதானத்துக்கு "முத்தையா முரளிதரன் சர்வதேச விளையாட்டு அரங்கு" என்று புதிய பெயர் சூட்டப்பட உள்ளது.

சர்வதேச டெஸ்ட் கிறிக்கெற் போட்டிகளில் 800 அதிகூடிய விக்கற்றுக்களைக் கைப்பற்றியிருக்கும் உலக சாதனையாளர் முத்தையா முரளிதரனைக் கௌரவிக்கும் வகையில் இதற்கான தீர்மானத்தை ஏக மனதாக மத்திய மாகாண சபை எடுத்துள்ளது.

மத்திய மாகாண ஆளுநர் திக்கிரி கொப்பேகடுவ இந்த யோசனையை சபைக்கு எழுத்துமூலம் சமர்ப்பித்திருந்தார். இலங்கையின் உலகப் புகழ் பூத்த நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முரளிதரனின் சொந்த இடம் கண்டி என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த வருடம் இந்த கிறிக்கெற் விளையாட்டு மைதானத்திலும் உலகக் கிண்ண போட்டிகள் இடம்பெற உள்ளன.



## உலக கிண்ண இறுதிப்போட்டி பந்து ஏலம்

உலக கோப்பை கால்பந்து இறுதிப்போட்டியில் உபயோகப்படுத்தப்பட்ட பந்து 74,000 டொலர்களுக்கு ஏலம் எடுக்கப்பட்டது.

தென்னாப்பிரிக்காவில் ஒரு மாத காலம் கோலாகலமாக நடந்த உலக கோப்பை கால்பந்து போட்டியில் ஸ்பெயின் அணி, இறுதிப்போட்டியில் நெதர்லாந்தை 1-0 என்ற கோல்கணக்கில் வென்று முதல் முறையாக உலக கோப்பையை கைப்பற்றியது.

இந்த போட்டியில் அடிடாஸ் நிறுவனத்தின் தயாரிப்பான ஜபுலானி பந்து பயன்படுத்தப்பட்டது.

ஏலம் தொடங்கியதும் அதனை வாங்க கடும் போட்டி இருந்தது. 130 க்கும் அதிகமானோர் இந்த ஏலத்தில் பங்கேற்ற நிலையில், இறுதியில் ரசிகர் ஒருவர் அதனை 74,000 டொலர்களுக்கு வாங்கினார்.

இந்த தொகை, வறுமையால் வாடும் குழந்தைகளுக்கும், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவி வரும் நெல்சன் மண்டேலாவின் கல்வி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது.

## ஐ.பி.எல். புதிய விதி... தெண்டுல்கர் அதிருப்தி !



ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி 2008-ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இதில் பங்கேற்ற 8 அணியும் வீரர்களை பல கோடி கொடுத்து ஏலத்தில் எடுத்தன.

முதல் ஐ.பி.எல். போட்டியில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியும், 2-வது ஐ.பி.எல். போட்டியில் டெக்கான் சார்ஜாஸ் அணியும், 3-வது ஐ.பி.எல். போட்டியில் சென்னை சூப்பர் கிங்சும் சாம்பியன் பட்டம் பெற்றன. 4-வது ஐ.பி.எல். போட்டி அடுத்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் நடக்கிறது. இந்தப் போட்டியில் கூடுதலாக கொச்சி, புனே அணிகள் பங்கேற்கின்றன. 10 அணிகள் பங்கேற்பதால் 4-வது ஐ.பி.எல். போட்டி அமைப்பில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதற்காக புதிய விதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே விளையாடிய வீரர்களின் ஒவ்வொரு அணியும் 4 வீரர்களே மட்டும் வைத்துக் கொள்ளலாம் என்றும், மற்ற வீரர்கள் அனைவரும் புதிதாக ஏலத்தில் விடப்படுவார்கள் என்றும் விதியில் தெரிவிக்கப்பட்டது. ஐ.பி.எல். இன் இந்த புதிய விதிக்கு தெண்டுல்கர் அதிருப்தி தெரிவித்து உள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது :- அனைத்து அணிகளும் ஏற்கனவே விளையாடிய வீரர்களையே வைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும். அவர்களை புதிதாக ஏலத்தில் விடும் முடிவு சரியானது இல்லை. மும்பை அணியில் இடம் பெற்றுள்ள வீரர்கள் ஒருங்கிணைந்து விளையாடி வருகிறார்கள்.

இதனால் கடந்த முறை 2-வது இடத்தை பிடிக்க முடிந்தது. எங்களது கடின உழைப்பால் முன்னேறினோம். புதிதாக அணி வீரர்களை ஒருங்கிணைப்பது என்பது கடினம் என்று அவர் கூறினார். ஐ.பி.எல். போட்டியின் புதியவிதிகள் குழப்பம் ஏற்படுத்துவதாக உள்ளது என்று கொல்கத்தா அணியின் உரிமையாளரான நடிகர் ஷாருக்கான் ஏற்கனவே கூறி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வீடு வாங்க**

- சிறந்த சூழல்
- நியாயமான விலை
- தரமான வீடு
- குறைந்த வட்டிவீத மோட்கேஜ்

**வீடு விற்க**

- இலவச மதிப்பீடு
- குறிப்பிட்ட காலம்
- தரமான சந்தைப்படுத்தல்

வருமான வரித்துறையில் 15 வருடமாக சேவை புரிந்து வருபவர்,
இப்பொழுது உங்களுக்கு வீடு விற்பனை முகவராகவும் சேவையாற்றி வருகிறார்.
வீடு வாங்க, விற்க அல்லது அது சம்பந்தமான விபரங்களுக்கும், நட்பான சேவைக்கும் அழையுங்கள்.

**Dir: 416-843-8585 Bus: 416-298-3200**

**Kuga Raveendrarajah** Real Estate Broker



**HomeLife Today Realty Ltd.,** Brokerage*
**31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6**
*Independently Owned and Operated, Realtor

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்!




# FIREMAN STEINMETZ

PERSONAL INJURY LAWYERS

CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION

SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A

## MOTOR VEHICLE ACCIDENT

FRACTURES - SPINAL CORD INJURY - BRAIN OR HEAD INJURY - SCARRING OR DISFIGUREMENT - INTERNAL INJURIES OR DEATH



**Jack J. Fireman Q.C. LLM.**
Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer"catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario



**Harry F. Steinmetz**
Mr. Steinmetz is a member of the Advocates Society, the Canadian Bar Association, the Metropolitan Toronto Lawyers Association and the Medico-Legal society.

## உங்களுக்குத் தெரியுமா?

- நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் பணமாக வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக **$330,000.00** வரையும், சம்பள இழப்பீடுகள் அத்துடன் **$86,000.00** வரை இழப்பாகவும் மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.
- நடந்த விபத்து உங்கள் தவறாக இருப்பின் உங்களால் **$86,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

*if you have optional insurance you can calm up to **$1,000.00** IRB'S - per week வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்!

**If the impairment catastrophic your claim can be:**

- Medical and Rehabilitation expenses up to **$1,000,000.00**
- Personal care expanses up to **$1,000,000.00**

***OVER 50 YEARS COMBINED EXPERIENCE***

**even if you are:**

unemployed - employed - passenger - pedestrian - cyclist - traveling in public transit - student - housewife

**You may be eligible for benefits to THOUSANDS of dollars**

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

MOTOR VEHICLE ACCIDENT

# தீபன்

24 Hours Direct Line

**(416) 505 - 9804**
**(416) 624 - 4751**

**Thiparanjan Sivarajalingam**
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of upper Canada)

அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்.

TORONTO · SCARBOROUGH · MISSISSAUGA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org